விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 08 வெள்ளிக்கிழமை (24.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 340

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள.
(C4609)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## இந்திய - இலங்கை கூட்டு செயற்றிட்டத்தை

# விரைவுபடுத்த நடவடிக்கை

# மோடியிடம் ரணில் உறுதி

(புதுடில்லி)

இந்திய - இலங்கை கூட்டு செயற்றிட்டத்தை விரைவு படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளதாக இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார். மேலும் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினை, இரண்டு நாடுகளுக்கிடையேயான உறவுகள் பாதுகாப்பு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

(23ஆம் பக்கம் பார்க்க)



## ஆவா குழுவின் சின்னா கைது

(யாழ்ப்பாணம்)

ஆவா குழுவின் முக்கிய செயற்பாட்டாளர்களில் ஒருவரான சின்னா என்பவரை கைதுசெய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சின்னா என அழைக்கப்படும் ரவிகிருஷ்ணா (வயது - 23). 24

## இலங்கையில் சித்திரவதைக் கூடங்கள் விசாரணை நடத்தும் ஐ.நா. பிரதிநிதிகள்

### கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

சித்திரவதைக் கூடங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 5ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. 23

### தேசிய கொடி விவகாரம்

## முதலமைச்சரிடம் ஆளுநர் விளக்கம் கோரி கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி அமைச்சர் தேசிய கொடியை புறக்கணித்த விடயம் தொடர்பாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே விளக்கம் கோரியுள்ளார். 23

### வடக்கு மாகாண சபையில்

## மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த முன்வைக்கப்பட்ட கோரிக்கை

### அவைத் தலைவரால் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த உறுப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மறுப்பு தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபையின் 110 ஆவது 24

### கிளி/முல்லையில் சுற்றிவளைப்பு

## வெவ்வேறு குற்றச் செயல் தொடர்பில் 6 சந்தேக நபர் பொலிஸாரால் கைது

(மல்லாவி)

கிளிநொச்சி - முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப்பிரிவுப் பொலிஸார் கிளிநொச்சி, தருமபுரம் ஆகிய பொலிஸ் நிலையப் பிரிவுகளில் மேற் கொண்ட விசேட ஊர்சுற்றுக் காவல்கடமையின்போது வெவ்வேறு 4 சம்பவங்களின் போது அனுமதிப் பத்திரத்திற்கு முரணான 23

## சிறுமி துஷ்பிரயோகம் வயோதிபர் ஒருவருக்கு கடூழிய சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 9 வயதான சிறுமியை துஷ்பிரயோகம் செய்த வயோதிபர் ஒருவருக்கு ஓராண்டு கடூழிய சிறைத் தண்டனையும் 10ஆயிரம் ரூபா தண்டப் பணமும் விதித்து யாழ். மேல் நீதி 24

## வடமாகாண கல்வியமைச்சரை ஏன் பதவி நீக்கம் செய்யவில்லை?

### ஜீ.எல்.பீரிஸ் காட்டம்

(கொழும்பு)



தேசியக்கொடியை ஏற்றுவதற்கு மறுப்பு தெரிவித்த வடமாகாண கல்வியமைச்சர் சர்வேஸ்வரனை பதவியிலிருந்து நீக்கும் முழு அதிகாரமும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இருப்பதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தெரிவிக்கின்றது.

ஆனால் அதனை செய்யாமல் ஜனாதிபதி தொடர்ந்தும் மௌனித்துக்கொண்டிருப்பது ஏற்றுக் 23

## காணாமல் போன குடும்பஸ்தர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஒரு வாரத்துக்கு முன்னர் காணாமல் போயிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் கோண்டாவில் பகுதியில் உள்ள கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கண்டிவீதி கொடிகாமத்தை சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான வைத்திலிங்கம் சுப்பிரமணியம் (வயது 51) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் யாழ் மாநகரசபையில் கடமையாற்றி வந்துள்ளார். கடந்த 16 ஆம் திகதி வீட்டில் இருந்து தனது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டு வேலைக்கு செல்வதாக 23

## கொலை செய்த குற்றத்திற்காக கடூழிய சிறைத்தண்டனை விதிப்பு

### யாழ் மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உடுப்பிட்டி பிரதேசத்தில் நபரொருவரை கொலை செய்த குற்றச்சாட்டில் விடுதலை புலிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த கைதிக்கு ஏழாண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து யாழ். மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

2006ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி துரைராஜசிங்கம் என்பவரை கொலை செய்ததாக இரண்டு எதிரிகளை பொலிஸார் கைது செய்வதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் கைது செய்து சென்றிருந்தனர். 23

## இலங்கையை தாக்கவல்ல புயல் வங்காள விரிகுடாவில் மையம்

### அமெரிக்க காலநிலை முன்னறிவிப்பு மையம் எச்சரிக்கை விடுப்பு

(கொழும்பு)

தென் மேற்கு வங்காள விரிகுடாவில் உருவாகிவரும் புயலினால் இலங்கையும், தமிழ்நாட்டின் தெற்கு கரையோரப் பகுதிகளும் அடுத்தவாரம் கடுமையான பாதிப்புக்களைச் சந்திக்கக் கூடும் என்று அமெரிக்க காலநிலை முன்னறிவிப்பு மையம் தெரிவித்துள்ளது.

வார இறுதியில் இருந்து இந்தப் புயலின் தாக்கத்தை எதிர்கொள்ளும் நிலை ஏற்படும் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த 28ஆம் திகதி வரை கடுமையான மழை 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆசிரிய இடமாற்ற கொள்கையை செயற்படுத்துக - வடமாகாண சபை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபையின் புதிய ஆசிரிய இடமாற்ற கொள்கை அறிக்கைகளோடு மட்டும் நின்று விடாமல் செயல் வடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் ஆசிரியர் நலனை முதன்மையாக கொண்டே இடமாற்றங்கள் நடைபெற வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். வடக்கு மாகாண சபையின் 110 வது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

இதன்போது வடக்கு மாகாண கல்வி அமைச்சரால் கடந்த அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வடக்கு மாகாணத்திற்கான புதிய ஆசிரியர் இடமாற்ற கொள்கை மீதான விவாதம் நடைபெற்றது. இதன் மீதான விவாதத்தின் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். இதன் போது கருத்து தெரிவித்த உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, ஒவ்வொரு அமைச்சரும் பதவிக்கு வரும் போது புதிய இடமாற்ற கொள்கைகள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் நடைமுறையில் வருவதில்லை.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்கள போன்ற கஷ்ட பிரதேசங்களில் 32 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்திலேயே ஆசிரியர்கள் உள்ளார்கள். ஆனால யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் 17 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் உள்ளது. இவ்வாறான பாகுபாடு இருந்தால் எவ்வாறு கஷ்ட பிரதேச மாணவர்கள் கல்வியில் சாதிப்பது? இது போன்று பல விடயங்கள் சமச்சீர் இல்லாமலேயே நடைபெற்று வருகின்றது என சாடினார்.

பாடசாலைக்கு தேவையானவர்கள் மாத்திரம் இருக்க வேண்டும் என்ற இறுக்கமான முடிவு எடுக்கப்பட வேண்டும். அமைச்சர் சிவநேசனும், ஒவ்வொரு அமைச்சிலும் இடமாற்ற கொள்கை கொண்டுவரப்படுகின்றது. ஆனால் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என விந்தனும் சுட்டிக்காட்டினார்.

இதே போன்று ஒவ்வொரு உறுப்பினர்களும் தமது கருத்துக்களை தெளிவுபடுத்தியிருந்தனர். மேலும் குறித்த இடமாற்ற கொள்கையை இரு பிரதான ஆசிரியர் சங்கங்களும் ஏற்றுக்கொண்டுள்ளதாக கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தெரிவித்தார். (ம-4)

## அகவை நிறைவில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



சைவசித்தார்ந்த சாகரம், சிவாகம சேகரம்
அகில இலங்கை சமாதான நீதவான்


**சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் (J.P)**
அவர்கள் (வல்லை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள்)

32 அறங்கள் அம்பிகைக்கு உரியது போல 32 குருமார்களை உருவாக்கித்தந்த எங்கள் சிவாச்சாரியர் திலகம் அவர்களை பல்லாண்டு வாழ்க வாழ்கவென வாழ்த்துவதோடு எமது அருள்மிகு நெல்லண்டை பத்திரகாளி அம்மன், வீரமாகாளி அம்மன், வடபத்திரகாளி அம்மன் திருவருளோடு வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்மன் பெருவருளும் சேர வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
சைவசித்தார்ந்த பண்டிதர்
சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள்,
சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தனஞ்சயன் குருக்கள்
ஆதீன கர்த்தாக்கள் நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில் - தும்பளை, பருத்தித்துறை.

(அ-477)

## 12-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **மாணிக்கம் சின்னராசா**

தோற்றம்: 03.03.1945 - மறைவு: 07.12.2005
திதி : 24.11.2017

ஈராறு ஆண்டுகளானாலும்
ஆறிடுமோ எம் துயரம்
ஈரவிழிகளுடன்
நினைவு கூரும்

"திரவிய பவனம்"
மனோகரா, அல்வாய் - குடும்பத்தினர்

(அ-478)

## கண்ணீர் அஞ்சலி

அமரர் **மூத்ததம்பி கனகரத்தினம்**



எமது கல்வி நிலையத்தின் இரசாயனவியல் ஆசிரியர் கனகரத்தினம் மயூரன் அவர்களின் அன்புத் தந்தை மூத்ததம்பி கனகரத்தினம் அவர்கள் கடந்த (21.11.2017) செவ்வாய்க் கிழமை இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆற்றொணாத் துயருற்றோம். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**Techzone கல்வி நிலைய நிர்வாகியும், ஆசிரியர்களும், மாணவர்களும்.**

(C-479)

## மு/ஆறுமுகம் வித்தியாலய புலமைப் பரிசில் பரீட்சை - 2017

### வருடாந்த பரிசளிப்பு விழா

**இன்று (24.11.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி**



ம.சங்கவி
பெற்ற புள்ளிகள் - 173

கு.குனாலினி
பெற்ற புள்ளிகள் - 155






பி.அபியா - 153
ச.செந்தாளன் - 146
ஜெ.சுவேதிகா - 141
ஜெ.எழிலினி - 138
த.ஆர்த்திகா - 134
கி.அபிராங்கன் - 132
ஜெ.மதியழகன் - 129

ச.ரிசானி - 126
அ.அபிசாளினி - 119
வி.தனுப்பிரியா - 112
ஜெ.கனியழகன் - 107
மு.சங்கீத்தனன் - 106
ஜெ.அருவறிவன் - 100


வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த இரு மாணவிகளையும் ஏனைய 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:* கருணைராசா துஸ்யந்தன்
செயந்தன் அரிசி ஆலை உரிமையாளர்- புதுக்குளம் வீதி, ஒட்டுசுட்டான்.

(1460)



# இந்திய - இலங்கை பிரதமர்கள் டில்லியில் நேற்று சந்தித்து பேச்சு



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் டில்லியில் நேற்றுக்காலை ஆரம்பித்து வைக்கப்பட்ட 5 ஆவது உலக இணையவெளி கருத்தரங்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டார்.

(டில்லி)

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார்.

இச் சந்திப்பு நேற்றுக் காலை டில்லியில் இடம்பெற்றது.

நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு கடந்த 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கொல்லூர் மூகாம்பிகை கோவிலில் வழிபாடுகளை மேற்கொண்டார்.

இதையடுத்து நேற்று முன்தினம் புதன்கிழமை டில்லியை சென்றடைந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார். (இ-7)

# இரட்டை இலை ஓ.பி.எஸ். - இ.பி.எஸ். வசம்

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு அ.தி.மு.கவினர் கொண்டாட்டம்





(டில்லி)

**அ.தி.மு.கவின் இரட்டை இலை சின்னத்தை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு வழங்குவதாக தேர்தல் ஆணையம் நேற்று அறிவித்துள்ளது.**

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மறைவால் காலியான ஆர்.கே.நகர் தொகுதியில் இடைத்தேர்தல் நடத்த கடந்த மார்ச் மாதம் அறிவிப்பு வெளியானதும் அ.தி.மு.க.வின் இரட்டை இலை சின்னத்தைப் பெற அ.தி.மு.க. அம்மா அணிக்கும், அ.தி.மு.க. புரட்சித் தலைவி அம்மா அணிக்கும் இடையே போட்டி ஏற்பட்டது.

இரு அணியினரும் இரட்டை இலை சின்னத்துக்கு உரிமை கொண்டாடினர். இதனால் இரட்டை இலை சின்னத்தை தேர்தல் ஆணையம் முடக்கியது. இதற்கிடையே பணப்பட்டுவாடா வால் இடைத்தேர்தல் இரத்து செய்யப்பட்ட நிலையில், இரு அணிகளும்இரட்டைஇலையை மீட்க தேர்தல் ஆணையத்தை அணுகின. இரு அணியினரும் இலட்சக்கணக்கில் ஆவணங்களைத் தயாரித்து தாக்கல் செய்தனர்.

அதன்பின்னர் ஓ.பன்னீர் செல்வம் தலைமையிலான அ.தி.மு.க. புரட்சித் தலைவி அம்மா அணியும், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அணியும் இணைந்தன. இதனால் இரட்டை இலைக்கான போட்டி எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.கவுக்கும் டி.டி.வி. தினகரன் தலைமையிலான அணியினருக்கும் இடையிலான போட்டியாக மாறியது.

எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் ஒருங்கிணைந்து புதிய ஆவணங்களைத் தாக்கல் செய்தனர். அதுபோல டி.டி.வி. தினகரன் தரப்பினரும் நிறைய ஆவணங்களை தாக்கல் செய்தனர்.

அதன் அடிப்படையில் தலைமை தேர்தல் ஆணையம் இரு தரப்பினரையும் அழைத்து விசாரணை நடத்தியது. இரு அணி சட்டத்தரணிகளும் இரட்டை இலையை தங்களுக்கே தர வேண்டும் என வாதிட்டனர். விசாரணை முடிந்த நிலையில் தீர்ப்பை வெளியிடுவதை தேர்தல் ஆணையம் ஒத்தி வைத்தது.

இந்நிலையில் இரட்டை இலை சின்னம் தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையர் ஏ.கே.ஜோதி தலைமையில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இக்கூட்டம் மதியம் நிறைவடைந்தது. இதையடுத்து அ.தி.மு.க.வின் அதிகாரபூர்வ சின்னமான இரட்டை இலை முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி-ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது. பிரமாண பத்திரங்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்களின் ஆதரவின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் இந்த தீர்ப்பை வழங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் அ.தி.மு.க.வின் சின்னம், கட்சியின் கொடி மற்றும் அதிகாரபூர்வ கடிதம் ஆகியவற்றை முதல்வர் அணியினர் பயன்படுத்தலாம்.

தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமாக அறிவிப்பதற்கு முன்பாகவே இத்தகவல் ஊடகங்கள் மூலம் பரவியது. இதையடுத்து முதல்வர் பழனிச்சாமி-ஓ.பி.எஸ். அணியினர் இனிப்பு வழங்கியும் பட்டாசு வெடித்தும் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர். (இ-7)

## நீதிபதிகள் 41 பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

நீதிமன்ற சேவை அதிகாரிகள் 41 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.


வருடாந்த இடமாற்றத்தின் கீழ் நீதிச் சேவைகள் ஆணைக்குழு மூலம் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி மாவட்ட நீதிபதிகள், மேலதிக மாவட்ட நீதிபதிகள், நீதவான்கள், மேலதிக நீதவான்கள், உள்ளிட்ட 41 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இடமாற்றங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வருடாந்த இடமாற்றத்தின் கீழ் இவ்வருடம் ஜனவரி மாதம் 70 இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பாராளுமன்றம் மீது குண்டுத்தாக்குதல் அச்சுறுத்தல்; தெரிவுக்குழு நடவடிக்கை சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவிப்பு




(கொழும்பு)

பாராளுமன்றத்தின் மீது குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்று அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது தொடர்பாக பாராளுமன்ற தெரிவிக்குழு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றம் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்படும் என விமல் வீரவன்ச அச்சுறுத்தல் விடுத்திருந்தார். இது குறித்து பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா நேற்று சபை அமர்வின்போது இந்த அச்சுறுத்தலை விடுத்தவருக்கு எதிராக ஏன் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் இந்த விடயம் குறித்து பாராளுமன்ற தெரிவுக்குழு கவனம் செலுத்தும் என்றார். பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச உள்ளிட்ட இருவர் இவ்வாறான அச்சுறுத்தலை சமீபத்தில் விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஜனவரிக்குள் பழனிச்சாமி ஆட்சி வீட்டுக்குச் செல்லும்



## தினகரன் காட்டம்

(சென்னை)

தமிழகத்தில் தற்போது மக்கள் விரோத ஆட்சி நடைபெறுகிறது. அது விரைவில் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படும். ஜனவரி மாதத்துக்குள் அது நடக்கும் என்று டி.டி.வி. தினகரன் காட்டமாகத் தெரிவித்தார்.

விருத்தாசலத்தில் தீபா பேரவை மற்றும் பகுஜன் சமாஜ் கட்சி உட்பட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்டவர்கள் அ.தி.மு.க. அம்மா அணியில் இணையும் விழா நேற்று நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக அ.தி.மு.க. அம்மா அணியின் துணைப் பொது செயலாளர் டி.டி.வி. தினகரன் இன்று காலை திருச்சியில் இருந்து புறப்பட்டு விருத்தாசலம் வந்தார். பாலக்கரை அருகே அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கு அவர் தொண்டர்கள் மத்தியில் பேசியதாவது,

பொதுச்செயலாளர் சசிகலா தலைமையில் ஒன்றரைக் கோடி தொண்டர்கள் உள்ளனர். அவர்கள் சசிகலாவின் தலைமையை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

விரைவில் வர இருக்கின்ற ஆர்.கே.நகர் தேர்தலாக இருந்தாலும் சரி, தமிழகத்தில் நடைபெறவுள்ள எந்தத் தேர்தலாக இருந்தாலும் சரி சசிகலா பொதுச் செயலாளராக தலைமை ஏற்றுள்ள அ.தி.மு.கவே வெற்றி பெறும்.

தமிழகத்தில் தற்போது மக்கள் விரோத ஆட்சி நடைபெறுகிறது. அது விரைவில் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படும். ஜனவரி மாதத்துக்குள் அது நடக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

பிரிஸ்பேன் டெஸ்ட் 1ஆம் நாள்

## வின்ஸ், ஸ்டோன்மேன் அரைச்சதம்

# இங்கிலாந்து முதல் நாள் நிறைவில் 4/196

MAGELLAN ASHES SERIES

கிரிக்கெட இரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்த்த ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் பாகம் நேற்று பிரிஸ்பேன் ஹபாவில் ஆரம்பமாகியது.

அனுபவ வீரர் அலஸ்டைர் குக்கை 2 ஓட்டங்களுடன் இழந்த போதிலும் இளம் நட்சத்திரங்களான ஸ்டோன்மேன் (53), ஜேம்ஸ் வின்ஸ் (83) இணை 2ஆவது விக்கெட்டுக்காக பகிர்ந்த 125 ஓட்ட இணைப்பாட்டம் கைகொடுக்க நேற்றைய முதல் நாள் ஆட்ட நிறைவில் இங்கிலாந்து 4 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களை எடுத்துள்ளது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட் முதலில் துடுப்பாட்டம் செய்ய முடிவெடுத்தார், ஆடுகளத்தில் கொஞ்சம் ஈரப்பதம் இருந்ததால் பந்துகள் நின்று வந்தன, பவுன்சும் பெரிய அளவுக்கு இல்லை, துடுப்பாட்ட ஆடுகளம் போல்தான் இதுவரை தெரிகிறது. ஒருவேளை வெயிலில் ஈரப்பதம் காய்ந்தால் பந்துகள் எகிற வாய்ப்புள்ளது, அப்படி எகிறினாலும் துடுப்பாட்டத்துக்கும் நன்றாக ஆட முடியும் என்றே தெரிகிறது.

அவுஸ்திரேலியா தங்களது வேகப்பந்து வீச்சை ஊதிப்பெருக்கிய அளவுக்கு அச்சுறுத்தல் ஒன்றுமில்லை. இன்னும் சொல்லப்போனால் நேதன் லயன் அச்சுறுத்தலாக வீசினார், ஒரு காலத்தில் பிரிஸ்பேன் ஆடுகளத்தில் சுழற்பந்துவீச்சாளர்கள் வேகப்பந்து வீச்சாளர்களை முனை மாற்றுவதற்காக மாற்றுப பந்துவீச்சாளராகவே கொண்டு வரப்படுவார்கள். அலிஸ்டர் குக், சமீபகாலங்களில் கிரீசிற்குள் நின்றபடியே கையாளும் முறையைக் கடைப்பிடிப்பதால் விரைவில் ஆட்டமிழப்பது தொடர்கிறது.

மிட்செல் ஸ்ரார்க், குக்குக்கு ஓவர் த விக்கெட்டில் பந்துகளை நல்ல வேகத்தில் உள்ளே கொண்டு வந்து கொண்டிருந்தார், பிறகு ஒரு பந்தை வெளியே எடுத்துச் சென்றார், முன் கால் நகராமல் கிரீசில் நிற்க வெளியே ஸ்விங் ஆன பந்துக்கு மட்டையைத் தொங்க விட்டார், எட்ஜ் ஆக, பீட்டர் ஹேண்ட்ஸ்கம்ப் பிடியெடுத்தார்.

அதன் பிறகு அவுஸ்திரேலியா விக்கெட்டுக்களை வீழ்த்தத் திணறியது. 'யாரேன்றே தெரியவில்லை' என்று ஹெய்டனால் கேலி செய்யப்பட்ட மார்க் ஸ்டோன்மென், ஜேம்ஸ் வின்ஸ் அபாரமான தடுப்பாட்ட உத்தியைப் பயன்படுத்தி அவுஸ்திரேலியாவை வெறுப்பேற்றினர். ஜோஷ் ஹேசில்வுட் எதிர்பார்ப்புக்கு இணங்க வீசாததால் அவரை உடனடியாக விலக்கிய ஸ்மித், கமின்ஸை பந்துவீச அழைக்க நேரிட்டது.

உணவு இடைவேளையின் போது இங்கிலாந்து 59/1 என்று திருப்திகரமான நிலையில் இருந்தது. பிறகு மழையால் ஆட்டம் 90 நிமிடங்கள் பாதிக்கப்பட்டது. மீண்டும் ஆட்டம் ஆரம்பமானபோது இங்கிலாந்தின் ஸ்டோன்மென், வின்ஸ் ஆதிக்கம் செலுத்தினர், குறிப்பாக வின்ஸ், பேக்புட் பஞ்ச் மற்றும் முன்னால் வந்து டிரைவ் என்று சற்றே சுதந்திரமாக ஆடத் தொடங்கினார்.

ஜேம்ஸ் வின்ஸ் 106 பந்துகளில் அரைசதம் கண்டார். தேநீர் இடைவேளையை நோக்கி ஆட்டம் சென்று கொண்டிருந்த போது நேதன் லயன் ரவுண்ட் த விக்கெட்டில் அபாரமாக வீசினார், அதில் ஒரு பந்து மிடில் ஸ்டம்பில் பிட்ச் ஆகி மேலும் நேராகச் செல்ல வின்ஸ் மட்டை விளிம்பில் பட்டு விக்கெட் காப்பாளர் பெய்னிடம் சென்றது, பெய்ன் அதனை நழுவவிட்டார், கிளவ்வில் உட்கார்ந்த பிடி அது. கடும் விமர்சனங்களை எதிர்கொண்டு வரும் ரிம் பெய்ன் ஒரு பிடியையும் விட்டது அணித் தலைவர் ஸ்மித்தை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியது. அதோடு மட்டுமில்லாமல் மிட்செல் ஸ்ரார்க் ஓவரில் ஒரு அபாரமான நேர் டிரைவ் மற்றும் ஒரு லெக் திசை பவுண்டரியையும் வின்ஸ் அடிக்க ஸ்மித்தின் வெறுப்பும் ரசிகர்களின் வெறுப்பும் பெய்ன் மீது பாய்ந்தன.


ஸ்டோன்மென் இவரைத் தொடர்ந்து தன் அரைசதத்தை எடுத்தார். 159 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 53 ஓட்டங்கள் எடுத்த இவர் பட் கமின்ஸ் வீசிய அருமையான, வேகமான ரிவர்ஸ் ஸ்விங் பந்தில் ஸ்ரம்புகளை இழந்தார். தேநீர் இடைவேளையின் போது இங்கிலாந்து 128/2. வின்ஸ் 72 ஓட்டங்கள் எடுத்திருந்தார். ரூட் ஒரு ஓட்டத்துடன் இருந்தார்.

வின்ஸ் 12 பவுண்டரிகளுடன் 170 பந்துகளில் 83 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டத்தின் போக்குக்கு எதிராக நேதன் லயன் செய்த அற்புதமான களத்தடுப்பு மற்றும் நேர் த்ரோவினால் வின்ஸ் ரன் அவுட் ஆனார். பந்தை கவர் திசையில் அடித்துவிட்டு ஒரு ஓட்டத்தை விரைவாக எடுக்க நினைத்தார், ஆனால் எச்சரிக்கையுடன் இருந்த லயன் ஓடி வந்து பந்தை எடுத்த கையோடு ஓட்டத்துடனேயே ரன்னர் முனை ஸ்டம்பில் பந்தை அடித்தார். ஓரிரு அடிகள் வின்ஸ் பின் தங்கினார், ரன் அவுட்.

ஜோ ரூட் அருமையான தடுப்பாட்ட உத்தியை வெளிப்படுத்தினார், கிரீஸிலேயே தேங்காமல் முன்னங்காலை நன்றாக நீட்டி பந்தை தடுத்தாடவோ, விடவோ செய்தார், மிட்செல் ஸ்ரார்க்கின் யோர்க்கர் லெந்த் பந்தை மிக அருமையாக மிட்விக்கெட்டில் பவுண்டரி அடித்தார். 50 பந்துகளில் ஒரு பவுண்டரியுடன் 15 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, கமின்ஸ் பந்தை லெக் திசையில் ஆடப்பார்த்தார், பந்து மட்டையில் சிக்கவில்லை, கால்காப்பில் பட்டது நடுவர் இராஸ்மஸ் நொட் அவுட் என்றார், ஆனால் ஸ்மித் ரிவியூ செய்ய அவுட் உறுதியானது. ஆஸிக்கு மிகப்பெரிய விக்கெட்.

மொயின் அலி இறங்கி நேதன் லயனின் பந்துவீச்சை முழங்காலை மடக்கிக் கொண்டு ஆஷஸ் தொடரின் முதல் சிக்ஸரை அடித்தார். டேவிட் மலான் சில பவுண்டரிகளை விளாசி தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். அவர் 6 பவுண்டரிகளுடன் 28, மொயின் அலி ஒரு சிக்ஸருடன் 13 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தபோது, ஆஸி. அணி புதிய பந்தை எடுத்து 3 பந்துகளே வீசப்பட்ட நிலையில் போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் முடித்துக் கொள்ளப்பட்டது, முன்னதாக மலான் ஒரு எல்.பி. முறையீட்டில் தப்பினார். அவுஸ்திரேலிய ரிவியூ தோல்வியில் முடிந்தது.

இங்கிலாந்து 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 196 ஓட்டங்கள் எடுத்துள்ளது. பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் பட் கமின்ஸ் 59 ஓட்டங்களுக்கு 2, ஸ்ரார்க் ஒரு விக்கெட். நேதன் லயன் மிக அருமையாக வீசினார்.



### ஸ்ரோக்ஸ் வாழ்த்து

சமீபத்தில், மதுபோதையில் தகராறில் ஈடுபட்டதால் இங்கிலாந்து 'சகலதுறை வீரர்' ஸ்ரோக்ஸ், ஆஷஸ் தொடரில் பங்கேற்கவில்லை. இந்நிலையில், ஸ்ரோக்ஸ் 'டுவிட்டரில்' வெளியிட்ட செய்தியில்,' அவுஸ்திரேலியாவில் நடக்கும் ஆஷஸ் தொடரின் முதல் போட்டியில் பங்கேற்கும் இங்கிலாந்து வீரர்கள் மற்றும் பயிற்சியாளர் குழுவுக்கு வாழ்த்துகள். இந்த தொடருக்காக எப்படிப்பட்ட பயிற்சியில் எங்கள் வீரர்கள் ஈடுபட்டனர் என்பதை நன்கு அறிவேன். அவுஸ்திரேலியாவுக்கு சென்று நமது அணியினருக்கு ஆதரவு தெரிவிக்கும் ரசிகர்களுக்கு நன்றி என தெரிவித்துள்ளார்.

### 125 ஓட்டங்கள்

டெஸ்ட் அரங்கில், 31 இன்னிங்சிற்குப் பின், இங்கிலாந்து சார்பில் 2ஆவது விக்கெட்டுக்கு 100 ஓட்டங்களுக்கு (125 ஓட், வின்சி, ஸ்டோன்மேன் ஜோடி) அதிகமாக சேர்க்கப்பட்டது. இதற்கு முன், கடந்த 2016ல் மான்செஸ்டர் நடந்த டெஸ்டில் (எதிர்-பாக்., ஜூலை) குக், ரூட் ஜோடி 185 ஓட்டங்கள் சேர்த்தது.

### 78 போட்டி

அவுஸ்திரேலிய விக்கெட் காப்பாளர்' பெய்ன், டெஸ்ட் அரங்கில் கடைசியாக இந்தியாவுக்கு எதிராக (பெங்களூரு, 2010) பங்கேற்றார். இதன்பின், 7 ஆண்டுக்குப்பின் தற்போதுதான் டெஸ்டில் மீண்டும் வாய்ப்பு பெற்றுள்ளார். இதன்மூலம், அவுஸ்திரேலிய அணிக்காக அதிக இடைவெளிக்குப்பின் (78 போட்டி) டெஸ்டில் பங்கேற்ற வீரர் என்ற பிராட் ஹொக் (1996-2003) சாதனையை சமன் செய்தார்.

### 1000 ஓட்டங்கள்

நேற்று அணித் தலைவர் ஜோ ரூட் 9 ஓட்டங்கள் எடுத்த போது, அவுஸ்திரேலியாவுக்கு எதிராக டெஸ்டில், 1000 ஓட்டங்கள் என்ற இலக்கை எட்டிய 43ஆவது இங்கிலாந்து வீரரானார். இதுவரை, இந்த அணிக்கு எதிராக 28 இன்னிங்ஸில் 1006 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். ஆட்டம் இலங்கை நேரப்படி அதி காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகிறது.


## பாதீட்டு முன்மொழிவுகளும் பங்குச் சந்தை முதலீடுகளும்

சமகாலப் போக்கு தொடர்பான கலந்துரையாடல் நாளை (25.11.2017) சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை ஸ்ரீரங்கன் அச்சுதன் தலைமையில் கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் இடம் பெறவுள்ளதுடன் பதிவுக்கட்டணமாக ரூபாய் 500 அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)


31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
22
-
03
-
1972

மறைவு
25
-
10
-
2017



நல்லூர் கமநலசேவைகள் நிலையத்தில் எழுதுநராக கடமையாற்றும் கி.பாமாதேவி அவர்களின் அன்புக் கணவர்

அமரர் பாலசுப்பிரமணியம் கிருஸ்ணா (அப்பன்)

அவர்கள் 25.10.2017 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நலன்புரிச் சங்க சமூகம்,
கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்.

(1463)

# கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்பாக ஆசிரிய உதவியாளர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

ஆசிரிய உதவியாளர்களாகக் கடமையாற்றுபவர்களை ஆசிரியர் சேவை தரம் III, II இல் உள்வாங்க வேண்டும் எனக் கோரி நேற்று கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்பாக பெருந்தோட்ட ஆசிரிய உதவியாளர்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெற்று வெளியேறிய ஆசிரிய உதவியாளர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 2014 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முக பரீட்சைத் தேர்வில் சித்தியடைந்து 2015 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதியிலிருந்து பெருந்தோட்ட பாடசாலைகளில் ஆசிரிய உதவியாளர்களாக கடமையாற்றி வருகிறோம்.

நாம் ஆசிரியருக்குரிய சகல கடமைகளையும் செய்து வருகின்ற போதும் ஆசிரிய உதவியாளர் என்ற பெயருடனும் குறைந்த வேதனத்துடனும் கடமையாற்றி வருகிறோம். அடிப்படை ஊதியமாக 6000 ரூபாய் வழங்கப்பட்டு காலப் போக்கில் 4000 ரூபாய் வேதனம் அதிகரிக்கப்பட்டு தற்போது 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் உயர் தரத்தில் சித்தியடைந்தும், எம்மைப்போன்ற தகுதியுடன் இருந்த ஆசிரியர்கள் நேரடியாக ஆசிரிய தரம் III, தரம் II க்கு உள்வாங்கப்பட்டனர். ஆனால் எமக்கு ஆசிரியர் சேவை தரம் III தரம் II இற்குரிய தகுதிகள் காணப்பட்ட போதும் ஏன் உள்வாங்கப்படவில்லை. எம்மை புறக்கணித்து வைத்துள்ளனர்.

அண்மையில் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஸ்ணன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆசிரிய உதவியாளர்களின் வேதனம் அதிகரிக்கப்படும் என பாராளுமன்றில் தெரிவித்தார். என்ன அடிப்படையில் அந்த வாக்குறுதியளித்தார் என்பது குறித்து எமக்கு தெளிவில்லை.

வேதன உயர்வை நாம் தற்போது கோரவில்லை. ஆசிரிய பயற்சி கலாசாலையில் பயின்ற 3024 உதவி ஆசிரியர்கள் அனைவரையும் ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை எனத் தெரிவித்தார். (இ-9)

# அமைச்சர் பைஸருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## ஜே.வி.பி. போர்க்கொடி



(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு நாட்களுக்குள் அமைச்சர் பைஸர் முஸ்தபாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்படவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சபாநாயகரிடம் கையளிக்கும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை பிற்போடுவது தொடர்பாகவே அதற்கு பொறுப்பான அமைச்சரான பைஸர் முஸ்தபாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவுள்ளதாகவும், எனவே குறித்த யோசனையை முன்வைப்பதற்கு ஏனைய அரசியல் கட்சிகளும் இணைய வேண்டும் என்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் வேண்டுகோள்விடுத்துள்ளார். (இ-7)



# இணையத் தயார் என்கிறார் மகிந்த தேவையில்லை என்கிறார் பசில்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் பிணை முறி மோசடி விவகாரம் போன்ற விடயங்கள் குறித்து நீண்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டதாக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

மேலும், அடுத்து வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் இணைந்து போட்டியிட இந்தக் கலந்துரையாடலின் போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

மத்திய செயற்குழுவின் கலந்துரையாடல் நிறைவடைந்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட முன்னாள் பிரதமர் தி.மு.ஜெயரத்ன இதனைக் கூறியுள்ளார்.

எது எவ்வாறு இருப்பினும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைய வேண்டிய தேவை இல்லை என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபடாதிருக்க செய்ய முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மகிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராசி பலன்

**மீனம்:** நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மேடம்:** வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**இடபம்:** குடும்பத்தில் நிலவிவந்த குழப்பங்கள் அகலும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பிரயாண பயமுண்டு.

**கும்பம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், சயன சுகக் குறைவுண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>புனர்பூசம் | | ராகு |
| கேது<br>சந் | | | |
| | சனி, புத<br>சூரி | குரு, சுக் | செவ் |

24.11.2017
கார்த்திகை 08, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு
சஷ்டி பின்னிரவு 04.35 மணிவரை
உத்தராடம் காலை 08.09 மணிவரை
சுபநேரம் 06.11-07.41 மணிவரை
இராகுகாலம் 10.41-12.11 மணிவரை
சஷ்டி விரதம்

வளவன்

**கடகம்:** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மகரம்:** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் பெற வழிபாட்டை மேற்கொள்வீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு:** குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நிகழ்வதற்கான வாய்ப்புண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும்.

**விருச்சிகம்:** வளர்ச்சி கூடும் நாள், வழிபாடுகளில் நம்பிக்கை வைப்பீர்கள், பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, செல்வாக்கு அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி:** மன நிறைவு கூடும் நாள், தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

# தேசிய எழுச்சி நாளாக மாவீரர் நாள் அமையட்டும்

## சிவாஜிலிங்கம் வலியுறுத்து

(கரணவாய்)

மாவீரர்கள் போரில் உயிரிழந்த மக்களை நாம் நினைவு கூருவதை பயங்கரவாத நடவடிக்கையாக தென்னிலங்கையில் பார்க்கப்படுகிறது. இது கண்டிக்கத்தக்க விடயம் என பதுடன் வேதனையும் அடைகின்றோம் என வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுவரை 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்கள் தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்துள்ளனர்.

போர் முடிவடைந்ததன் பின்னர் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே நாம் மாவீரர்தினைத்தினை நினைவு கூர்ந்து வருகின்றோம். இது தென்னிலங்கையிலேயே பயங்கரவாத நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது. இது கண்டிக்கத்தக்கது. இவ்வாறு பார்க்கப்படுவதனால் நாம் வேதனை அடைகிறோம்.

1988 ஆம் ஆண்டு நவம்பர்மாதம் கொல்லப்பட்ட ஜே.வி.பி.தலைவர் ரோகண விஜய வீரவையும் அவரது தோழர்களையும் நினைவுகூரும் கார்த்திகை வீரர்கள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அவர்கள் அவ்வாறு அனுஷ்டிக்க முடியுமாயின் ஏன் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க முடியாது எனக் கேள்வி எழுப்பினார்.

உயிர் நீத்த மாவீரர்கள், வீரமறவர்கள், பொதுமக்களுக்கு வீடுகளிலே விளக்கேற்றி அஞ்சலி செலுத்துமாறு கோருகின்றேன்.

சாதாரண நிகழ்வாக அல்லாது மிகப் பெரிய தேசிய எழுச்சி நாளாக இந்த நாளை அனுஷ்டிக்க வேண்டும்.

வீடுகளுக்கு உள்ளேயும் வெளியேயும் தீபங்களை ஏற்றி அதன்மூலம் இலங்கை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் ஒரு செய்தியைச் சொல்ல முடியும்.

என்ன காரணத்திற்காக உயிர்த்தியாகம் செய்தார்களோ அதற்கான தீர்வினை இந்தத் தமிழினம் வேண்டி நிற்கின்றது என்ற செய்தியைச் சொல்ல வேண்டும்.

தமிழர் தாயகத்திலே குறைந்தது ஒன்றரை இலட்சம் விளக்குகளை ஏற்றி தமிழினம் வீறு கொண்டிருக்கிறது என்ற செய்தியைவெளிப்படுத்தவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# பரிசளிப்பு தினவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய பரிசளிப்பு தின விழா இன்று காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் யோ. ஜெகஆனந்தம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ், சிறப்பு விருந்தினராக யாழ். வலய ஆரம்ப உதவிப் பணிப்பாளர் திருமதி மைதிலி தேவராஜா, கௌரவ விருந்தினராக ஆ.மெ.மி.வித்தியாலய ஓய்வு நிலை பிரதி அதிபர் திருமதி தவநாயகி கனகரத்தினம், பரிசில் வழங்குபவராக யாழ். வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி நளினி அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிவலயத்தின்பின் வரும் பாடசாலைகளுக்கு அதிபர்பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

1. யா/நாகர்கோவில் அ.மி.த.க.பாடசாலை-தரம் II
2. யா/துன்னாலை வடக்கு மெ.மி.த.க.பாடசாலை-தரம் III
3.யா/புனிதநர் தமிழ் வித்தியாலயம்- தரம் III

ஆகியவற்றின் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்வரும் தகைமையுடைய அதிபர்கள் குறித்த பாடசாலைகளுக்கான அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரி பின்வரும் தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. தரம் II பாடசாலைக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவையில் தரம் II அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

2. தரம் III பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவையில் தரம் III அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

3. தரம் II பாடசாலைக்கு உரிய தரத்தையுடையவர்களின் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத பட்சத்தில் தரம் III அதிபர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

4. தங்கள் அதிபர் தரத்திற்கு பொருத்தமற்ற பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

5.இலங்கை அதிபர்சேவையிலுள்ள அதிபர் கடமையாற்றாதவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். (இவர்களுக்கு பிரிவு 7 பொருந்தமாகாது).

6. வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும்.

7.விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு கடமையாற்றக் கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 06.12.2017.

10. விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்விற்கு தோற்றுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி நிர்வாக பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் அறிவித்துள்ளார்.(இ)

# போதைப்பொருள் பாவனையைக் குறைக்க கிராம மட்டத்தில் புதிய குழுக்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருள் பாவனையைக் குறைப்பது தொடர்பாக கிராம மட்டங்களில் குழுக்கள் அமைக்கப்படவுள்ளதாக மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலைய திட்டமிடல் பணிப்பாளர் தி.ரினேஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற போதைப் பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு செயலமர்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சினிமாப் படக் காட்சிகளின் மூலம்போதைப் பொருள் பாவனையை மக்கள் மத்தியில் காண்பித்து விளம்பர தந்திரோபாயமாக போதைப்பொருள் மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்து வருகின்றது.

இதனால்போதைப்பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றமையால் நாட்டின் கல்வி நிலை வீழ்ச்சியடைவதோடு கலாசார சீர்கேடுகளும் அதிகரித்து வருகின்றன.

இவ்வாறான போதைப் பொருள் பாவனையாளர்களை இனங்கண்டு அவர்களையும் சமூகத்தில் நற்பிரஜையாக மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்கள்,சமூக ஆர்வலர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களுடையது எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் போதைப் பொருள் தகவல் திட்டமிடல் பணிப்பாளர் ஆ. கோடீஸ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள்எனப்பலரும்கலந்துகொண்டிருந்தனர். (இ-10-106)



திருநெல்வேலி விவசாயத்திணைக்களத்தினால் உடுவில் ஈவினை இளம் விவசாயிகள் கழகத்துக்கு தரை உழுது சீர்படுத்துவதற்கான சிறு உழவு இயந்திரம் மற்றும் கலப்பை என்பன இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் நேற்று முன்தினம் ஈவினைக் கிராமத்திலுள்ள தோட்டத்தில் தரை உழுது சீர்ப்படுத்தப்படுவதனையும் இதனை விவசாயிகள் ஆர்வத்துடன் பார்வையிடுவதையும் காணலாம்.

(படம்: புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)




# புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறைகள் பற்றிய சிந்தனைக்கூடத்தின் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சிந்தனைக் கூடம் யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில்நாளைசனிக்கிழமை முற்பகல்10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இல.121, இரண்டாம் குறுக்குத் தெருவில்அமைந்துள்ளசிந்தனைக் கூட கேட்போர் கூடத்தில் கருத்தரங்கு இடம்பெறும்.

இக் கருத்தரங்கில் புதிய உள்ளூராட்சித் தேர்தல் முறைகள், வேட்பாளருக்கான விதிமுறைகள்,வாக்காளருக்கான வழிகாட்டல்கள் எனும் தலைப்பில் யாழ்.மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் தன பாலசிங்கம் அகிலன் கருத்துரை வழங்குவார். கருத்துரையின் பின்னர் கலந்துரையாடல் இடம் பெறும்.

மேற்படி கருத்தரங்கு எதிர்வரும் தேர்தலில் வேட்பாளர்களாகப் போட்டியிட எண்ணியுள்ளோருக்கு பயன் மிக்கதாக அமையும். கட்சிபேதமின்றி அறிவைப் பகிர்வதையே நோக்கமாகக் கொண்ட இந்நிகழ்வுக்கு வருகை தந்து பயன் பெறலாமென சிந்தனைக்கூட பணிப்பாளர் பேராசிரியர் இரா.சிவசந்திரன் அறிவித்துள்ளார். (இ-7)

# பரிசளிப்பு விழாவும் ஒளிவிழாவும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஒளி விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை ஆலயமுன்றலில் அதிபர் கு.அசோக்குமார் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா, சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் மரியன்னை தேவாலய பங்குத் தந்தை அன்ரன் மத்தாயஸ் மற்றும் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-102)

# ஆண்டு விழாவும் கலை விழாவும்

(யாழ்ப்பாணம்)

நாவலர் முன்பள்ளியின் ஆண்டு விழாவும் கலை விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நாவலர் முன்பள்ளி முன்றலில் முன்பள்ளி ஆசிரியர் ஜெ.தேவகி தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக டிறிபேக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் க.அருந்தவபாலன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர்அரியநாயகம், கௌரவ விருந்தினர்களாக போக்கட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் தி.அபராஜிதன், மீசாலை கிராம உத்தியோகத்தர் கா.கௌரிதரன் மற்றும் நாவலர் முன்பள்ளி ஸ்தாபகர் கு.இராசலட்சுமி ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-10-29)

# முன்பள்ளி ஆண்டு நிறைவு விழாவும் மழலைகளின் கலைக்கதம்ப விழாவும்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளியின் 43 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மழலைகளின் கலைக் கதம்ப விழாவும் இன்று பிற்பகல் 2 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் முன்பள்ளித் தலைவர் கா.சிவசோதி தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இசைத்துறை இணைப்பாளரும் முதுநிலை விரிவுரையாளருமான சின்னையா சூரியகுமார், சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்டச் செயலக இலங்கை சமூக பாதுகாப்பு சபை சிரேஷ்ட இணைப் பதிகாரி பாக்கியராசா பிரதீபன், யாழ்ப்பாணம் முன்பள்ளி வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி விமலநாதன், கோப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் இம்மானுவேல் ஜோன்சன், கௌரவ விருந்தினர்களாக புத்தளை நீர்ப்பாசன திணைக்கள குடிசார் பொறியியல் உதார்த்த மதிப்பீட்டாளர் மத்திய முன்பள்ளி பழைய மாணவர் தர்மராசா மோகனதாஸ், சிவசக்தி மணிமண்டப முகாமையாளர் அப்பாத்துரை குகதாசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# கந்தபுராணப் படிப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி பெரிய தம்பிரான் கோவிலில் கந்தபுராணப் படிப்பு இன்று காலை 8.30 மணி முதல் முற்பகல் 11.50 மணிவரை அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்துதைமாதம்வரை தினசரி பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.இதில்சைவ சித்தாந்த பண்டிதர் செ.சிவபாதம், பண்டிதர் பொன்னம்பலவாணர் ஆகியோர் பயன் சொல்வர். (இ)

# வருடாந்த பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வட இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் ரி.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில்பிரதம விருந்தினராக வடமராட்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் கலந்து கொள்வார். (இ-10-60)

# மார்க்சிய குழுக்கூட்டம்

சர்வதேச மார்க்சிய குழுக்கூட்டம் நாளை மறுதினம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஸ்ரான்லி வீதியில்அமைந்துள்ள D.M.I. தனியார் கல்வி நிறுவனத்தில் சொ.சிவபாலன் தலைமையில் இடம்பெறும். இதில் ஏ.சி. ஜோர்ச் பிரதம உரையாற்றுவார். (இ-7)

# ஒக்டோபர் புரட்சியை முன்னெடுக்கும் புரட்சிகர பொதுக்கூட்டம் யாழில்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 1917 ஒக்டோபர் சோசலிச புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் புரட்சிகர பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். றிம்மர் மண்டபத்தில் தோழர் சி.கா.செந்திவேல் தலைமையில் இடம்பெறும். (இ-7)

# ரூ.10 கோடி பெறுமதியான கஞ்சா தீக்கிரை

## நீதிபதி இளஞ்செழியன் உத்தரவு



படங்கள்: பொ.சோபிகா

(யாழ்ப்பாணம்)

யாழ். மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கைப்பற்றப்பட்ட, சுமார் 10 கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சா போதைப்பொருள் நேற்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் உத்தரவுக்கமைய தீவைத்து அழிக்கப்பட்டது.

யாழ். மேல் நீதிமன்ற நியாயாத்திக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த காலங்களில் கைப்பற்றப்பட்ட கஞ்சா போதைப்பொருள் மன்றில் பாரப்படுத்தப்பட்டிருந்தன.

அவ்வாறு பாரப்படுத்தப்பட்ட கஞ்சா போதைப் பொருள் தொடர்பிலான வழக்குகள் முடிவடைந்த நிலையில் கஞ்சா போதைப் பொருளை அழிப்பதற்கு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.

அந்தவகையில் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் மற்றும் அரச சட்டவாதி நாகரத்தினம் நிஷாந்த் முன்னிலையில் யாழ்.நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகில் உள்ள பகுதியில் நேற்றுக்காலை அவை எரித்து அழிக்கப்பட்டன. (இ-9)

# விமலின் தலைமைத்துவம் இன்றி செயற்படத் தயாராகிறதா தே.சு.மு?

(கொழும்பு)

கட்சிக்காக முன்னின்று உழைத்தவர்கள், அதில் இருந்து விலகுவது பாரிய சிக்கலான விடயம் என தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளர் பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

அக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த பிரியன்ஜித் விதாரண பதவி விலகிய விவகாரம் குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, பிரியன்ஜித் பதவி விலகிய விடயத்தை தான் ஊடகங்கள் வாயிலாகவே அறிந்து கொண்டதாகவும், கட்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அவரின் இந்த முடிவிக்குப் பின்னால், நாம் அறிந்திராத இரகசியம் இருக்கலாம் எனவும் பியசிறி விஜேநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், விமல் வீரவன்சவின் தலைமைத்துவம் இன்றி தம்மால் முன்னோக்கிச் செல்ல முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

விமல் சிறையில் இருந்த போது கட்சியின் மாபெரும் மாநாடு நடத்தப்பட்டது. செயலாளர் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் சக்தியினாலேயே எனவும் பியசிறி விஜேநாயக்க இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# அர்ஜூன் எனது நண்பரானாலும் அவரை பாதுகாக்க முயற்சிக்கவில்லை -தயாசிறி



(கொழும்பு)

பேர்பெச்சுவல் கருவூல ஸ்தாபனத்தின் தலைவர் அர்ஜுன் அலோசியஸ் குறிப்பிடத்தக்க காலம் வரை தமக்கு தெரிந்த நண்பர் எனவும், அவரை காப்பாற்றுவதற்கு எந்தவித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை என அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

முதலாவதாக கோப் குழு ஸ்தாபிக்கப்பட்ட போது அதில் தாம் உறுப்பினராகி இருக்கவில்லை எனவும், 2013 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பாராளுமன்றத்தில் இருந்து விலகி மீண்டும் 2015 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பாராளுமன்றத்திற்கு வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அதன்பின் இரண்டாவது தடவையாக ஆரம்பிக்கப்பட்ட கோப் குழு 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் திகதி தனது பணிகளை முன்னெடுத்ததாக தெரிவித்தார்.

முதல் தடவையாக தாம் கோப் குழுவின் உறுப்பினராக இல்லாத தருணத்தில் அர்ஜுன் அலோசியஸ்தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தியதாக கூறப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தாம் ஆரம்பம் தொடக்கம் அர்ஜுன் அலோசியஸை அறிந்ததாகவும், மாகாண சபையில் இருந்த போது தொலைபேசியில் தாம் முதலீடுகள் தொடர்பாக கலந்துரையாடியதாகவும் அமைச்சர் தயாசிறி ஜெயசேகர மேலும் தெரிவித்தார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்:உத்திரட்டாதி<br>கி.பா: 33<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் Not PR<br>தொ.இ: B/7220 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: 30 செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Bsc/தனியார் தொழில்<br>தொ.இ: G/6172 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 53 செவ் 1 இல்<br>உயரம்: 161 Cm<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/7221 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>கி.பா: 32 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/6178 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L/வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்.<br>தொ.இ: B/7222 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை<br>கி.பா: 44 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்<br>தொ.இ: G/6183 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/கனடா PR<br>தொ.இ: B/7223 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 17<br>உயரம்: 159 Cm<br>தகைமை/தொழில்: Bca<br>தொ.இ: G/6189 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. ஆழ்வாப்பிள்ளை சூரியகுமாரன்



கரவெட்டி, கோப்பாய் மருதங்கேணி பிரதேசங்களில் கிராமசேவை அலுவலராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற திரு.ஆழ்வாப்பிள்ளை சூரியகுமாரன் அவர்கள் 35 வருட சேவையை ஆற்றியுள்ளார். அவரைப் பாராட்டி கௌரவப்படுத்துவதோடு ஓய்வுக் காலம் சிறப்புடன் இருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
க.சத்தியலிங்கம் (சமுர்த்தி அலுவலர், கரணவாய் கிழக்கு)
பா.சுரேஸ்குமார் (சமுர்த்தி அலுவலர், துன்னாலை), மா.அறிவழகன் (சமுர்த்தி அலுவலர் உடுப்பிட்டி),

# தென்னை பயிர்ச்செய்கை சபையின் சமூக நலன் வேலைத் திட்டம்





(கிளிநொச்சி)

தென்னை பயிர்ச்செய்கை சபையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் 4 பிரதேச செயலகப் பிரிவிலும் நடைபெற்ற 2017 வருடத்திற்குரிய மானியத்திட்டங்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வும் சமூகநலன் வேலைத் திட்டமும் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 650 பயனாளிகளுக்கு நீர்ப்பாசனம், மாட்டுத்தொழுவம், சேதன, அசேதனப் பசளை போன்ற பல வேலைத்திட்டங்களுக்குரிய மானியங்களுக்கான காசோலைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன், விவசாய திணைக்கள பணிப்பாளர் யுகநாதன் மற்றும் கரைச்சிப் பிரதேச செயலக உறுப்பினர்களும் பங்குபற்றினர்.

இங்கு கருத்து தெரிவித்த தென்னை பயிர்ச்செய்கை சபையின் தே.வைகுந்தன், இம்மாவட்டத்தில் 16 ஆயிரம் ஏக்கர் காணிகள் தென்னை செய்கைக்கு பொருத்தமாக இருப்பதாகவும் கிளிநொச்சி மாவட்ட மக்கள் தென்னையை பயிரிட முன்வர வேண்டும். தென்னையானது பணப்பயிராக மாறியுள்ளதாகவும் தேங்காயின் விலை உயர்வின் அனுகூலம் தென்னை செய்கையாளர்களை சென்றடையாமல் இடைத்தரகர்களால் சுரண்டப்படுகின்றமை பற்றியும் சுட்டிக்காட்டினார்.

மக்கள் அனைவரும் தென்னை பயிர்ச்செய்கை சபையுடன் தொடர்பு கொண்டு தென்னைக்குரிய வைத்தியர்களாக திகழ வேண்டுமென கூறினார். கிளிநொச்சி மாவட்டம் கல்வியிலும் வறுமையிலும் பின்தங்கிய மாவட்டமாக இனம் காணப்பட்டுள்ளதால் இச் சவால்களை முறியடிப்பதற்கு தென்னையை வளர்த்து வறுமையை ஒழிக்குமாறும் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்.மாவட்ட போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணரின் போசனை தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வும் நடைபெற்றது. (2)

# கடற்றொழிலாளர்கள் 40 பேருக்கு படகுகள், வலைகள் வழங்க நடவடிக்கை முன்னெடுப்பு

## முல்லைத்தீவு மாவட்ட மீன்பிடிப்பரிசோதகர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழிலாளர்கள் 40 பேருக்கு படகுகள், வெளியிணைப்பு இயந்திரங்கள், வலைகள் என்பன வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட மீன்பிடிப்பரிசோதகர் கா.மோகன குமார் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப் பேரலையினாலும் நாட்டில் நடைபெற்று முடிந்த போரினாலும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் அண்மையில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த மாவட்ட மீன்பிடி பரிசோதகர் 200 மீனவக் குடும்பங்களுடைய வீடுகளை புனரமைப்பதற்கு 20 மில்லியன் ரூபாவும் 16 மீனவக் குடும்பங்களுக்கு மலசல கூடங்களை அமைப்பதற்கு 0.45 மில்லியன் ரூபாவும் மீனவக் கிராமங்களுக்கான மூன்று கடற்கரையோர வீதிகளைப் புனரமைப்பதற்கு 4 மில்லியன் ரூபாவும் கிடைக்கப்பெற்று நடைபெற்று வருகின்றன.

இதேவேளை 130 பயனாளிகளுக்கு ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை நாற்பது மீனவர்களுக்கான வெளி இணைப்பு இயந்திரங்களை வழங்குவதற்கான வேலைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)


# குடும்பஸ்தரை காணவில்லை

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் 50 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரை கடந்த இரண்டு நாட்களாக காணவில்லை என அவரது குடும்பத்தினர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் வவுனியா கூமாங்குளத்தைச் சேர்ந்த 50 வயதான பெனடிக் சூசைநாதன் என்பவர் வெளியில் சென்றதாகவும் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளுக்கும் தொடர்பு கொண்டு கேட்டபோது அங்கும் அவர் இல்லாத காரணத்தினால் குடும்பத்தினர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளனர். இவர் தொடர்பில் விபரங்கள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் அவரின் மகளான பிரியதர்ஷனை 076 528 8183 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-281)

# போசாக்கு தொடர்பான விழிப்புணர்வு கண்காட்சி



(மன்னார்)

மடுப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மடு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் பெரிய பண்டிவிரிச்சான் வைத்தியசாலையில் நேற்று முன் தினம் புதன்கிழமை போசாக்கு தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சி இடம்பெற்றுள்ளது.

மடு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ராஜன் லெம்பேட் தலைமையில் இடம்பெற்ற குறித்த கண்காட்சியில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் கலந்து கொண்டிருந்தார்.

குறித்த கண்காட்சியின் போது குழந்தைகள், கர்ப்பிணித்தாய்மார்கள், தாய்ப்பால் ஊட்டும் தாய்மார்கள் ஆகியோர் சுகாதாரத்துடன் கூடிய சத்துணவுகளை தயாரிக்கும் முறைகள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற வகையில் குறித்த கண்காட்சி இடம்பெற்றுள்ளது.

குறித்த கண்காட்சியில் சுகாதார பணியாளர்கள், கிராம மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-4)

# ஆபாசப்பட இறுவெட்டுக்களுடன் வியாபார நிலைய உரிமையாளர் கைது

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட ஒட்டுசுட்டான் நகரப் பகுதியில் இயங்கி வரும் இறுவெட்டு விற்பனை செய்யும் வியாபார நிலையம் ஒன்றில் ஆபாச படங்கள் அடங்கிய இறுவெட்டுக்களை விற்பனை செய்யும் போது பொலிஸார் ஆபாசப்பட இறுவெட்டுக்களுடன் சந்தேக நபரான வியாபார நிலைய உரிமையாளரை கைது செய்துள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலில், ஒட்டுசுட்டான் நகரப் பகுதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்தும் வகையில் நீண்டகாலமாக ஆபாசப் படங்களின் இறுவெட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் விசேட உத்தரவுக்கமைய குறித்த வியாபார நிலையத்தை சுற்றிவளைத்த போது பொலிஸார் ஆபாச இறுவெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளதுடன். சந்தேகத்தின் பேரில் வியாபார நிலைய உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




### மீள்குடியேற்ற கிராமங்களுக்கு

# போக்குவரத்து சேவையை வழங்க ஆளணிப் பற்றாக்குறை

## முல்லை.சாலை நிர்வாகம் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீள்குடியேற்றக் கிராமங்களுக்கு உரிய போக்குவரத்து சேவையை வழங்குவதற்கு போதிய வசதிகள் இல்லாதிருப்பதாக இலங்கைப் போக்குவரத்து சபையின் முல்லைத்தீவு சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

1990ஆம் ஆண்டிற்குப் பின்னர் யுத்தத்தினால் செயலிழந்து போன இலங்கைப் போக்குவரத்துச்சபையின் முல்லைத்தீவு சாலை கடந்த 2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் மீள இயங்க ஆரம்பித்திருக்கின்றது.

ஆனால், போதிய ஆளணி மற்றும் பௌதீக வளங்கள் இன்மையால் உரிய சேவைகளை வழங்க முடியாதிருப்பதாகவும் தெரிவித்துள்ள சாலை நிர்வாகம் தற்போது 24 பேருந்துகள் மட்டுமே உள்ளன.

மேலும் 11 பேருந்துகள் தேவையாகவுள்ளன. இதேவேளை 14 சாரதிகள், 10 நடத்துநர்கள், 12 வாகனத் திருத்துநர்கள் ஆகியோருக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன எனத் தெரிவித்துள்ளதுடன், இவ்வாறான வளப் பற்றாக்குறைகளால் பின்தங்கிய கிராமங்களுக்கான சேவைகளை வழங்க முடியாதிருப்பதாக சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (2-315)

# சிறுமியின் துஷ்பிரயோகத்தை கண்டித்தும் இளைஞர்களின் அட்டகாசத்தை தடுக்கக்கோரியும்

## கணேசபுரத்தில் கண்டன ஊர்வலம்



(குருமன்காடு)

வவுனியா கணேசபுரத்தில் அண்மையில் சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்தும் குறித்த பகுதியில் இடம்பெற்று வரும் இளைஞர்களின் அட்டகாசத்தை தடுக்கக் கோரியும் கண்டன ஊர்வலம்ஒன்று நடைபெற்றது.

வவுனியா, கணேசபுரம் ஆலயம் முன்பாக நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பித்த ஊர்வலம் குழுமாட்டு சந்தி வீதி வழியாகச் சென்று நெளுக்குளம் பொலிஸ் நிலையம்வரை சென்றடைந்தது.

கடந்த 14 ஆம் திகதி கணேசபுரப் பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமி ஒருவர் கூட்டு பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டிருந்தார். இவ்விடயம் தொடர்பாக 4 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந் நிலையில் குறித்த சிறுமி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் இச்சம்பவத்தை கண்டித்தும், அப்பகுதியில் உள்ள வெற்றுக் காணிகள், வீதிகளில் போதையில் கூடும் இளைஞர்களின் அட்டகாசத்தை தடுத்து நிறுத்தக் கோரியும் கண்டன ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

கணேசபுரம் கிராம மக்கள், அப்பகுதி இளைஞர்கள், பெண்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். ஊர்வலமாகச் சென்ற மக்களை வவுனியா பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி ஆர்.எம்.எஸ்.குமாரசிங்க அம்மக்களைச் சந்தித்து கலந்துரையாடியதுடன், இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதி பெற்றுத் தரப்படும் எனவும் அப்பகுதியில் இளைஞர்களின் அட்டகாசத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

இதனையடுத்து ஊர்வலமாகச் சென்ற மக்கள் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்து கலைந்து சென்றனர். (2-250)

# பிலவுக்குடியிருப்பு மக்களின் வீட்டுத்திட்டத்திற்கு நேற்று அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கேப்பாப்பிலவு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பிலவுக்குடியிருப்பு மக்களின் வீட்டுத்திட்ட பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு நேற்று வீட்டுத்திட்டத்துக்கு அடிக்கல்லும் நாட்டப்பட்டது

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கேப்பாப்பிலவு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள பிலவுக்குடியிருப்பு மக்கள் மீள்குடியேற வந்தபோது தமது காணிகள் விமானப் படையினரால் சுவீகரிக்கப்பட்ட நிலையில் தமது காணிகளை மீட்க கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி முதல் ஒருமாத காலமாக வீதியிலிறங்கி போராடி ஒரு மாத காலத்தின் பின்னர் தமது நிலங்களை விமானப் படையினரிடமிருந்து மீட்டனர்.

இதனை தொடர்ந்து தமக்கான அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லையென பலதடவைகள் பலரிடமும் முறையிட்டும் தற்காலிக வீடுகள் கூட இல்லாத நிலையில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்தனர்

இந்நிலையில் கடந்த மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் இவர்களுக்கான வீட்டுத்திட்டம் வழங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தும் திட்டத்தில் உள்வாங்க பல்வேறு வாத பிரதிவாதங்களோடு தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் குறித்த கிராமத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தும் திட்டத்தில் 41 வீடுகள் வழங்கப்பட பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு நேற்று வீட்டுத் திட்டம் ஆரம்பிப்பதற்காக உத்தியோக பூர்வமாக அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி. சிவமோகன், முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் விஜித கமகே, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கணக்காளர் உள்ளிட்ட பல்வேறு பிரதிநிதிகள் பிலவுக்குடியிருப்பு மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)





# கேரளக்கஞ்சா பொதிகளுடன் வவுனியாவில் இளைஞன் கைது

(மல்லாவி)

யாழ்ப்பாணத்தில் இருந்து ஹெப்பிட்டிக் கொலவக்கு பேருந்து மூலமாக கடத்திச் செல்லப்பட்ட 2, கிலோவும் 75, கிராம் நிறையுடைய கேரளாக் கஞ்சா பொதிகளுடன் வவுனியா குடாகச்சக் கொடி பகுதியைச்சேர்ந்த 22 வயது இளைஞன் ஒருவரைக் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஏ. மகிந்த வில்வ ஆராச்சி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 7. 10 மணியளவில் நடைபெற்றுள்ளது.



இது தொடர்பில் மேலும் தெரிய வருவது. வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து வவுனியா நகரப் பகுதியில் உள்ள அரச பேருந்து நிலையத்தில் தொடர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த, பேருந்தை வவுனியா அரச பேருந்து நிலையத்தில் தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது, ஹெப் பிட்டிக் கொலவப் பகுதிக்கு கடத்திச் செல்லப்பட்ட 2 கிலோ 75 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சாவுடன் வவுனியா குடா கச்சக் கொடி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது வவுனியா பொலிஸ் நிலையப் பொலிஸ் பரிசோதகர் அசோக பிரசன்ன மற்றும் பொலிஸ் கொஸ்தாபல்கள் ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினரே கேரளக் கஞ்சா கடத்தலை முறியடிப்பு செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடை பெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வவுனியா பொலிஸ்நிலையத்தகவலில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# உடைமையில் கேரளக்கஞ்சா; 10 ஆயிரம் தண்டப்பணம் விதிப்பு

(மல்லாவி )

முள்ளியவளை நீராவிப்பிட்டிக் கிராமத்தில் தனது உடைமையில் 3,5 கிராம் கேரளக் கஞ்சா வைத்திருந்த சந்தேக நபரைக் கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்திய போது சந்தேக நபர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் நீதிபதியினால் கடுமையாக எச்சரிக்கையும் செய்யப்பட்டு விடுவிக்கப் பட்டுள்ளதாக முல்லைத் தீவு மாவட்ட மதுவரி நிலையத்தின் பொறுப்பதிகாரி ரீ. ஏ. டீ. பி. குணரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு நேற்று வியாழக்கிழமை காலை முல்லைத் தீவு மாவட்ட நீதிபதி எம். எஸ். எம் சம்சுதீன் முன்னிலையில் நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

முல்லைத்தீவு மாவட்ட மதுவரி நிலையத்தின் 021-229 0023 என்ற தொலை பேசி இலக்கத்தின் ஊடாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 7 மணியளவில் முள்ளியவளை நீராவிப்பிட்டிக் கிராமத்தில் வைத்து உருமறைப்புச் செய்யப்பட்டு தனது உடைமையில் கேரளக் கஞ்சாவை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபரை நேற்று வியாழக்கிழமை காலை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் தடயப் பொருட்களுடன் ஆஜர் படுத்திய போதே நீதிபதியினால் இத் தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளதாக மதுவரி திணைக்களத் தின் முல்லைத்தீவு மாவட்ட மதுவரி நிலையத் தின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார் (2-15)

# வெவ்வேறு நான்கு குற்றச்சம்பவங்களில் சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைதாகினர்

(மல்லாவி )

கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப்பிரிவுப் பொலிஸார் கிளிநொச்சி, தருமபுரம் ஆகிய பொலிஸ் நிலையப் பிரிவுகளில் மேற்கொண்ட விசேட ஊர்சுற்றுக்காவல் கடமையின் போது வெவ்வேறு 4 சம்பவங்களின் போது. அனுமதிப்பத்திரத்திற்கு முரணான முறையில் ஆற்று மணலை கடத்திச் சென்ற 3 உழவு இயந்திரங்களையும் மற்றும் 500 கிராம்கேரளக்கஞ்சா உட்பட அனுமதியின்றி விற்பனை செய்த அரச சாராயம் 3 போத்தல்களையும் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 6.சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியில் இருந்து பிற்பகல் 3.30 மணி வரையிலான காலப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பன்னாங்கண்டி கிராம பகுதியில் வைத்து அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த 2 உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் 2 பேரையும் கைது செய்துள்ளனர்.

அதனையடுத்து, கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பரவிப்பாஞ்சான் சிவபுரம் கிராமத்தில் 500 கிராம் கேரளக் கஞ்சாவை தனது உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை கேரளக் கஞ்சாவுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து, தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள. கல்லாறுக் காட்டுப் பகுதியில் இருந்து அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த உழவு இயந்திரத்தைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து, தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள வட்டக்கச்சி பகுதியில் அனுமதியின்றி அரச சாராயத்தை வீட்டில் வைத்து விற்பனை செய்த சந்தேக நபர் ஒருவரை 3 போத்தல் அரச சாராயத்துடன் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு 4 சம்பவங்களின் போதும் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான சந்தேக நபர்கள் 6 பேரையும் கிளிநொச்சி, தருமபுரம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# முழங்காவில் துயிலுமில்லத்தில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசத்தில் உள்ள முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களை நினைவு கூருவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ள நிலையில் பெற்றோர்களை கௌரவிப்பதற்கான நிகழ்வு நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டுப் பணிக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதன் ஆரம்ப கட்டமாக மக்கள் அணிதிரண்டு முழங்காவில் மாவீரர் துயிலுமில்லத்தை சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்தனர்.

இதேவேளை மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தைச் சுற்றி மதில் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

சிரமதானப் பணியின் போது பல சிதைக்கப்பட்ட கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவை எந்த மாவீரரினது துயிலுமில்ல கல்லறை என்பதை அடையாளம் காணக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரி பிரதேசத்தைச்சேர்ந்த முழங்காவில் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்ட மாவீரர்களின் பெற்றோர். உறவினர்கள், உரித்துடையோர் ஆகியோரை ஏற்பாட்டுக் குழுவினருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 27 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் மாவீரர்களின் பெற்றோருக்கான கௌரவிப்பு நிகழ்வு நடைபெறும். இதில் மாவீரர்களின் பெற்றோர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (2-24)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(பனிக்கன்குளம்)

மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு மடு பொலிஸாரின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பாடசாலையில் நடைபெற்றுள்ளது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய கல்வி கற்பதில் சிரமத்தை எதிர் கொண்டுள்ள மாணவர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் குறித்த மாணவர்களுக்கே கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மடு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகள், வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த வர்த்தகரான ஆனந்தப் பெரேரா ஆகியோரின் நிதி உதவியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பாடசாலையின் அதிபர் எம்.எம். லூர்தாகரன் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் மடு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்படப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# வாழ்க்கைக்கான சமுத்திரம் - உண்மையுடனும் காதலுடனும் தொடருங்கள்...

OUR OCEAN
MALTA, 5-6 OCTOBER 2017

சமுத்திர இளைஞர் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட ஓர் அனுபவப் பகிர்வு:

'இது எங்கள் சமுத்திரம்' மாநாடு மற்றும் "சமுத்திர இளைஞர் உச்சி மாநாட்டின்" ஒரு பகுதியாக இலங்கையிலிருந்து ஓர் இளைய சமுத்திர வழிகாட்டியாகவும் மகளிராகவும் ஏனைய தொன்னூற்று ஒன்பது உலகெங்கிலும் உள்ள இளைஞர் தலைவர்களுள் ஒருவராக கலந்து கொண்டமை கௌரவமும் பெருமையும்மிக்க வாழ்நாள் சிறப்பாக அமைகின்றது. வாழ்வியலில் எம்மோடு எப்போதும் நீக்கமற இணைந்திருக்கும் ஆழி சூழ் உலகின் ஆதியும் அந்தமும் பெருங்கடல் அன்றி வேறில்லையே! அந்த வகையில், இந்த மிக முக்கியத்துவம் வாய்ந்த இணைந்த நிகழ்வுகளினை மத்திய தரைக்கடலில் அமைந்துள்ள மால்டா தீவு நாட்டில் ஐப்பசி 4 ஆம் 5 ஆம் நாட்களில், ஐரோப்பிய ஒன்றியம் (European Union). நிலையான கடல்சார் கூட்டமைப்பு (Sustainable Oceans Alliance –SOA) மற்றும் மால்டா பல்கலைக்கழகம் ஒருங்கிணைத்து வழங்கியிருந்தனர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் இளம் சமுத்திரம் சார் தலைவர்களிடம், நமது பெருங்கடல் சார் பூமியின் முக்கிய சிக்கல்களை எதிர்கொள்வது தொடர்பான, எதிர்கால உலகின் பேண்தகு செயற்பாடுகளுக்கான பொறுப்பையும் சிந்தனைகளுடான அர்ப்பணிப்புகளுக்குமான அடித்தளத்தை அவர்களின் எண்ணங்களில் பதித்து ஆக்கபூர்வமான தீர்வை நோக்கிய ஆராய்ச்சிகள் மற்றும் கடல் வளங்களின் பேண்தகு பாதுகாப்பு செயற்பாடுகளை இணைந்து முன்னெடுத்து செல்வதற்கான ஊக்கமளிக்கும் நிகழ்வுகளை வழங்கியிருந்தனர். ஆம், நிச்சயமாக 15 முதல் 34 வயதிற்குட்பட்ட 100 தேர்ந்தெடுக்கப்பட்ட இளைய சமுதாய சமுத்திரவியல் துறைசார் இளையோருக்கு பல்வேறு அனுபங்களையும் விடயங்களையும் உள்வாங்கும் களமாகவும் துறைசார் அமர்வுகள், கலந்துரையாடல்கள், யோசனைகளைப் பகிர்ந்து கொள்வது, பட்டறைகள், நெட்வோர்க்குகள், சர்வதேச நிபுணர்களுடன் நெட்வோர்க்கிங் மற்றும் கடல்சார் தொழில் வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், உலகளாவிய பிரதிநிதிகள் ஆகியோரால் வழங்கப்பட்ட பேச்சுக்கள் ஆகியவற்றை உள்வாங்கி "தீர்வுகளை நடைமுறைப்படுத்துதல்" என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கைத் தரத்தை பாதுகாப்பதற்காக, மாநிலங்களின் தலைவர்கள், கன்சர்வேடிவ் கட்சிகள், வணிக பிரதிநிதிகள், என்.ஜி.ஓ. (NGO) க்கள் மற்றும் இதர உயர்மட்ட பங்குதாரர்களுக்கு எங்கள் கருத்துகளை பகிர்ந்து கொள்வது மற்றும் தீர்வுகளை உறுதிப்படுத்துவது தொடர்பான சிறப்பான செயற்பாடுகளில் பங்குபற்ற வாய்ப்பளித்தனர்.

உயர்ந்த இலக்குகளைச் சமாளிக்கும் வகையில், பல்வேறு நாடுகளினதும் பிராந்தியங்களினதும் பிரதிநிதிகளும் துறைசார் வல்லுநர்கள் மற்றும் இளைய தலைவர்களும் ஒழுங்குபடுத்தப்பட்ட தீர்வுகளை நோக்கி கடமை உணர்வோடும் யாவரும் ஓர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற சங்கல்பத்திலும் எதிர்கால நிலைத்தன்மையைக் காப்பாற்றுவதற்காக ஒன்றாக இணைந்தனர்.

இது கடல் சார்ந்த, தற்போதைய மற்றும் எதிர்கால அச்சுறுத்தல்களை எவ்வாறு எதிர்கொள்வது மற்றும் முன்னெடுக்கப்பட வேண்டிய தீர்வுகளுக்கான உத்திகள், அவற்றிற்கான ஆற்றல் செயற்பாடுகளை எவ்வாறு அணுகுவது உட்பட தேவையான பொருளாதார சேமிப்புகள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல் முதலிய அங்கீகரிக்கப்பட வேண்டிய தீர்மானங்களும் உறுதி மொழிகளும் அவ்வத் துறைசார்ந்தோரால் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மிகவும் புகழ்பெற்ற சில வல்லுநர்களின் கருத்துகளைப் பார்க்கலாம்




**Her Deepness Sylvia Earle;** அவர் ஒரு எழுச்சியூட்டும் பேச்சு கொடுத்தார்: "நாங்கள் அக்கறை மற்றும் மரியாதைக்கு நல்லது செய்ய வேண்டும். நாம் உண்மையில் கடல் சார் உயிரினங்கள், கடல் இல்லாமல் இருக்க முடியாது. நமது உயிர் ஆதரவு அமைப்பு கடல் மீது அமைந்திருக்கிறது.

நீங்கள் ஒருபோதும் கடலைத் தொடாமல் இருந்திருக்கலாம், ஆனால் கடல் உங்களை தொட்டவண்ணமே உள்ளது. நீங்கள் எடுக்கும் அனைத்து செயல்களையும் மனமார கவனத்தில் கொள்ள வேண்டும். எங்களுக்கு சக்தி இருக்கிறது! நாம் அக்கறையுடனும் கண்ணியத்துடனும் இயற்கை வளங்களையும் குறிப்பாக மனதளவில் புறக்கணிக் கப்பட்ட பெருங்கடல் வளங்களையும் திட்டமிட்ட முறையில் அவற்றின் இயற்கை அமைப்பையும் நீடித்திருக்கும் தன்மையையும் கெடாத வண்ணம் பயன்படுத்த வேண்டும். கடலுக்கு எம்மை அறியாமலே நாமும் உலகிலுள்ள அனைத்து உயிர்களும் கடன்பட்டிருக்கிறோம். ஆம், இப்பூமியின் ¾ பங்கு கடலால் சூழப்பட்டுள்ளதை அறிவீர்கள், ஆனால் இப்பாரிய கடல்பரப்பு தான் உலக உயிர்களின் சுவாசத்திற்கான ஒட்சிசனின் பெரும் பகுதியை வழங்குவதை நாம் உணர மறந்து விட்டோம்.

இதை மட்டும் கவனத்தில் கொண்டீர்களானால் இப்பெரும் ஆழியை நாம் நிர்மூலமாக்கி எம்மை நாமே அச்சுறுத்கின்றோம். ஆகவே எமது ஒவ்வொரு செயற்பாடுகளும் அவதானமாகவும் நேர்மையுடனும், அழகுடனும் அன்பு மிக்கதாகவும் அமைந்தால், வற்றாத அன்பு மற்றும் நேர்மை தீராத காதலை இயற்கையோடும் கடல் தாயோடும் எம்மை இறுகப் பிணைத்திருக்கச் செய்யும், கடல் அலைகள் கரையை எவ்வாறு இடைவிடாது முத்தமிடுகின்றதோ அவ்வாறே நமது அன்பும் நேர்மையும் இயற்கையின் பரிவு மிகு தாளத்தோடு இணைந்து வாழ்வோம்'



John Frank, துணை தலைவர், ஐரோப்பிய ஒன்றிய அரசாங்க அலுவல்கள், அழகான ஆழமான கட்டளையை வலியுறுத்தியிருந்தார். எதிர்காலத்தை வெறுமனே ஏற்றுக் கொள்ளாதே. (தொடரும்)

அஷானி அருளானந்தம்
Ocean Youth Leader,
Sustainable Ocean Alliance,
Sri Lanka
M.Phil student,
Postgraduate Institute
of Agriculture,
University of Peradeniya

## வாரத்திற்கு ஒரு புதிர்! 198

2017 இன் உலக அழகிப் பட்டத்தை வென்றவர் யார்?

புதிர் 198 இற்கான விடைகளை 04.12.2017 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர்,
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்-பிரிவு A,
84, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 197க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

பரிசுபெறுபவர்
சுஜீவன் அபிநயா
இல.5, 1ம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**புதிர் 197க்கான கேள்வியும் விடையும்:**
விஸ்வபாரதி (Visva-Barati) எனும் பன்னாட்டுப்பல்கலைக்கழகத்தை உருப்படுத்தியவர் யார்?
Rabindranath Tagore

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 198**

சரியான விடை:-....................................................
முழுப்பெயர்:-....................................................
முகவரி:-....................................................
தொ.பே. இல:....................................................
கையொப்பம்:....................................................

# நிலைமைகள் மோசமானதாக இல்லை

## கொள்கைக்காக சுதந்திரக் கட்சியும் பொது எதிரணியும் இணையத்தயார்

### சுசில் பிரேம ஜெயந்த தெரிவிப்பு



(கொழும்பு)

தேவை கருதி ஒரு கொள்கைக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பொது எதிரணியும் ஒன்றிணைந்து செயற்படும் நிலைமை வரும் நிலையில் இணையத்தயார். நாம் யாரையும் நிராகரிக்கவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.

நீண்டகாலமாக இணைந்து செயற்பட்ட நபர்கள் தொடர்ந்தும் இணைந்து செயற்படுவதில் தவறேதுமில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொது எதிரணியினர் எனக் கூறிக்கொண்டு இன்று தனித்து செயற்படும் நபர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இறுதித் தேர்தலில் பெயர் பட்டியலில் என்னால் கைச்சாத்திடப்பட்ட தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நபர்களாவர்.

இன்று இவர்கள் பொது அணியினராக இருந்த போதிலும் எம்மத்தியில் முரண்பாடுகள் ஏதுமில்லை. ஒரு மணி நேரத்தில் அல்ல சில நாட்களில் நாம் அனைவரும் மீண்டும் ஒரே கொள்கையில் கைகோர்த்து செயற்பட முடியும். அதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இரு தரப்பையும் இணைக்கும் பொறுப்பு என்னிடம் வழங்கப்பட்டுள்ளது அதன் அடிப்படையில் நான் சில முயற்சிகளை மேற்கொண்டேன். நிலைமைகள் மோசமானதாக இல்லை. எனினும் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். நிலைமைகள் எவ்வாறு மாறுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முன்னேஸ்வர ஆலய குளத்தில் அநுராதபுரம் - பொலநறுவை காலத்திற்குரிய கட்டட இடிபாடுகள்



(சிலாபம்)

சிலாபம் முன்னேஸ்வரம் ஆலயத்திற்கு அருகிலுள்ள குளம் ஒன்றில் சேற்று மண் அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் அங்கு கட்டட இடிபாடுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதஸ்வாமி ஆலயத்திற்கு அருகிலுள்ள குளத்தில் இவ்வாறு கட்டட இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் பல்வேறு அளவுகளைக் கொண்ட செங்கற்கள் மற்றும் பாத்திரங்களின் சில பகுதிகளும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற அதிகாரிகள் கட்டட இடிபாடுகளில் காணப்படும் செங்கற்களும் பாத்திரங்களும் அநுராதபுரம் அல்லது பொலநறுவை யுகத்திற்கு உரியதாக இருக்கலாம் என தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குளத்தில் சேற்று மண் அகற்றும் பணிகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பணித்துள்ளனர்.

குறித்த குளத்தில் சேற்று மண் அகற்றும் பணிகள் கடந்த மாதம் முதலே இடம்பெற்று வருகின்ற நிலையில் அண்மையில் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வேட்புமனுக் கோரும் அறிவித்தலை 27 ஆம் திகதி விடுவிக்க முடியாது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வர்த்தமானிக்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. எனவே தேர்தலுக்கான வேட்புமனுக்கோரும் அறிவித்தலை எதிர்வரும் 27 ஆம் திகதி விடுக்க முடியாதென சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்னஜீவன் ஹூல் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக் கோரும் அறிவித்தல் எதிர்வரும் 27 ஆம் திகதி வெளியிடப்படும் என சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்திருந்தது. இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வர்த்தமானிக்கு மேற்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பில் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஹூலிடம் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக கடந்த 15 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட்மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அவ்வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே எதிர்வரும் 27 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கோரும் அறிவித்தலை விடுக்க முடியாது. எனவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விவகாரம் தொடர்பில் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்வரும் சனிக்கிழமை கூடி ஆராயவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கோரும் அறிவித்தல் எதிர்வரும் 27 ஆம் திகதி விடுக்கப்படும் என தீர்மானித்ததற்கிணங்க எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி நண்பகல் வரையில் வேட்புமனுக்களை பொறுப்பேற்பதற்கு சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே தீர்மானித்திருந்தது.

எனவே எதிர்வரும் ஜனவரி மாதத்தில் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வர்த்தமானிக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மேலும் காலம் தாழ்த்தப்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடைந்து இரு வருடங்கள் கடந்துள்ள நிலையில், எல்லை நிரணயம் உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் காலம் தாழ்த்தப்பட்டு வந்தது.

எனினும் அதற்கான பணிகள் நிறைவுசெய்யப்பட்டதுடன் கடந்த முதலாம் திகதி உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான வர்த்தமானியில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா கைச்சாத்திட்டு அரசாங்க அச்சுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தார். அவ்வர்த்தமானி கடந்த 11 ஆம் திகதியே வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 2,750 மெற்றிக்தொன் அரிசி இலங்கைக்கு சீனா நன்கொடை




(கொழும்பு)

வரட்சியால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்காக சீனா 2,750 மெற்றிக்தொன் அரிசியை வழங்க முன்வந்துள்ளது.

அண்மையில் ஏற்பட்ட வரட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள வேலைத்திட்டத்திற்கு உதவும் வகையில் சீன அரசாங்கம் அரிசியை நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது.

இந்த அரிசியை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இடர்முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ ஆகியோரிடம் இலங்கைக்கான சீனத் தூதுவர் யீ ஷியென்கினால் கொழும்பு துறைமுகத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை கையளித்தார்.

இலங்கைக்கு அரிசியை கையளிப்பது தொடர்பான உடன்படிக்கையும் இதன் போது கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கோப் குழுவின் தலைவரை பதவி விலக வலியுறுத்தல்



(கொழும்பு)

கோப் குழுவின் தலைவர் பதவியிலிருந்து சுனில் ஹந்துன்நெத்தி பதவி விலக வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது, நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் அமைச்சர் ஹக்கீம் மற்றும் பிரதி அமைச்சர் அஜித் பி பெரேராவின் பரிந்துரைக்கு அமைய கோப் குழுவின் தலைவராக சுனில் ஹந்துன்நெத்தி நியமிக்கப்பட்ட நிலையில் கோப் குழுவில் அங்கம் வகிப்பதற்கு அஜித் பி பெரேரா தகுதியுடையவர் இல்லை எனில் சுனில் ஹந்துன்நெத்திக்கும் தகுதி இல்லை என துஷார இந்துனில் தெரிவித்துள்ளார்.

மேலும், மத்திய வங்கியில் இடம்பெற்ற பாரிய மோசடிகள் தொடர்பாக முழுமையான விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தாமதப்படுத்துவது நோக்கமல்ல

## சு.க.அமைச்சர் அமரவீர விளக்கம்



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தாமதப்படுத்துவது தமது நோக்கமல்ல என்றும் எதிர்வரும் சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சி நிர்வாகத்தை நிறுவுவதற்கு முயற்சிப்பதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றில் இடம்பெற்ற 2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும் சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று குறிப்பிட்ட அமைச்சர் தேர்தலை உடன் நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தாமும் இருப்பதாகவும் உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படும் என்றும் விளக்கமளித்தார். (இ-7)




# சசிகலாவிற்கு புதிய சிக்கல்!



(சென்னை)

சொத்துக் குவிப்பு குற்றச்சாட்டில் பெங்களூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள சசிகலாவை சிறைச்சாலைக்குள் தனி அறையில் வைத்து விசாரணைகள் நடத்த வருமான வரித்துறையினர் தீர்மானித்துள்ளனர்.

அண்மையில் சசிகலாவின் உறவினர்கள் வீட்டில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்திய போது 7 கோடி பணம், 5 கோடி மதிப்பிலான ஆபரணங்கள் போன்றன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், 1430 கோடிகள் மதிப்பிலான சொத்து ஆவணங்களும் கைப்பற்றப்பட்டதோடு, அவற்றில் பல போலியானவை எனவும் கண்டுபிடிக்கப்பட்டது.

அதேபோன்று ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லத்தில் உள்ள சசிகலாவின் 4 அறைகளிலும் நடத்திய சோதனைகளில் முக்கிய ஆவணங்கள் மற்றும் மடிக்கணனிகள், பென்டிரைவ்கள் உள்ளிட்ட பல சிக்கியுள்ளன.

இவற்றினை அடிப்படையாகக் கொண்டு வருமான வரித்துறையினர் சசிகலா மற்றும் இளவரசியிடம் விசாரணைகளை நடத்த தீர்மானித்துள்ளனர்.

விசாரணைகள் நடைபெறும் நேரங்கள் குறித்து முன்கூட்டியே அறிவிக்கப்பட்டால் அதனால் விசாரணைகள் பாதிக்கப்படும் என்பதால் இதுவரையிலும் விசாரணைகள் நடத்தப்படும் நேரங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

எனினும், வருமான வரித்துறை அதிகாரிகள் எப்போது வேண்டுமானாலும் சசிகலாவை சிறைச்சாலையில் திடீர் விசாரணைகளில் முடக்குவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐந்துமாடி தொழிற்சாலை கட்டடம் இடிந்து விபத்து

## 13 பேர் பலி! உரிமையாளர் கைது



(லூதியானா)

பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் கட்டட விபத்தில் 13 பேரின் உயிரை காவு வாங்கிய பிளாஸ்டிக் தொழிற்சாலையின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் தனியாருக்கு சொந்தமான ஐந்து மாடி பிளாஸ்டிக் தொழிற்சாலை கட்டடம் ஒன்று திடீரென இடிந்து விழுந்தது.

உடனடியாக அப் பகுதிக்கு விரைந்த தீயணைப்புத் துறையினர் மீட்புப்பணியில் ஈடுபட்டனர். அப்போது எதிர்பாராத விதமாக மீதமிருந்த கட்டட பகுதிகளும் இடிந்து விழுந்தன.

இடிபாடுகளில் தீயணைப்புத்துறையினர் உட்பட 20 இற்கும் மேற்பட்டோர் சிக்கிக் கொண்டனர். அவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்றது. இருப்பினும் 6 தீயணைப்பு வீரர்கள் உட்பட 13 பேர் இடிபாடுகளில் சிக்கி பலியாகினர்.

இந்த விபத்திற்கு காரணமான கட்டடத்தின் உரிமையாளர் இந்தரஜித் சிங் கோலா என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ-7)

# அணு ஆயுத போர்வாளை



# அமெரிக்காவுக்கு வடகொ

(பியாங்யாங்)

தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடாக அறிவிக்கப்பட்டு, கூடுதலான பொரு விதிக்கப்பட்ட நிலையில் அணு ஆயுத போர்வாளை கைவிடப் போவதில்லை அறிவித்துள்ளது.

ரிக்கா தான் உலகில் தீவிரவாதிகளையே உருவாக்குகிறது என்று வடகொரியா கூறி இருக்கிறது.

# வடகொரியாவுடன் விமான போக்குவரத்து துண்டிப்பு

## சீனா திடீர் முடிவு



வடகொரியாவுடனான விமான போக்குவரத்தை திடீரென சீனா துண்டித்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வடகொரியாவும், தென் கொரியாவும் நிரந்தர பகை நாடுகளாக இருந்து வருகின்றன. தென்கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்பட்டு வருகிறது.

இதனால் அமெரிக்காவுடன் வடகொரியா மோதல் போக்கில் ஈடுபட்டுள்ளது. மேலும் அமெரிக்கா மீது அணுகுண்டுகளை வீசுவோம் என்றும் வடகொரியா மிரட்டி வருகிறது.

எனவே, வடகொரியாவை கட்டுப்படுத்தும் வகையில் பல்வேறு பொருளாதார தடைகளை விதித்துள்ளது. ஆனாலும், அடங்க மறுக்கும் வடகொரியா தொடர்ந்து அமெரிக்காவை மிரட்டி வருகிறது.

எனவே, வடகொரியாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்தார். வடகொரியாவின் நட்பு நாடாக உள்ள சீனாவிடம் அந்த நாட்டை கட்டுப்படுத்தி வைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

சமீபத்தில் டொனால்ட் ட்ரம்ப் சீனாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அப்போது சீன ஜனாதிபதி ஜின்பிங்கை சந்தித்து பேசினார். வடகொரியா நிலவரங்கள் குறித்தும் அவர் ஆலோசனை நடத்தினார்.

இதை தொடர்ந்து சீனா தனது சிறப்பு தூதரை வடகொரியாவுக்கு அனுப்பி வைத்தது. சிறப்பு தூதர் சாங்டோ தலைமையிலான குழுவினர் வடகொரியாவுக்கு சென்று அந்த நாட்டு பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை. ஆனாலும், வடகொரியா தனது பிடிவாத குணத்தை கைவிடவில்லை.


தற்போது கூட அமெரிக்காவை மிரட்டும் வகையில் வடகொரியா கருத்துக்களை வெளியிட்டுள்ளது. அமெரிக்கா தான் உலகில் தீவிரவாதிகளையே உருவாக்குகிறது என்று வடகொரியா கூறி இருக்கிறது.

இந்த நிலையில் நேற்று திடீரென சீனா வடகொரியாவுடனான விமான போக்குவரத்தை துண்டித்துள்ளது.

சீனாவின் பேச்சுக்கு கட்டுப்பட வடகொரியா மறுப்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கலாம் என கருதப்படுகிறது.

ஆனால், சீனா இது சம்பந்தமாக கூறும்போது, வடகொரியாவுக்கு செல்லும் விமானத்தில் போதிய பயணிகள் வரவில்லை. எனவே, வர்த்தக ரீதியாக பாதிப்பு ஏற்படுவதால் போக்குவரத்தை நிறுத்தி விட்டோம். இதில், அரசியல் காரணங்கள் இல்லை என்று கூறியுள்ளது. ஆனாலும், இதில் வேறு பின்னணிகள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (இ-7)

# சிம்பாவே நாட் எமர்சன் நாங்க



(ஹரரே)

சிம்பாவே நாட்டின் புதிய ஜனாதிப எமர்சன் நாங்காவா இன்று பதவி வுள்ளதாக அந்நாட்டு அரசு ஊடகம் வெளியிட்டுள்ளது.

ஆபிரிக்க நாடான சிம்பாவேயில் முகாபே 1980 ஆம் ஆண்டு முதல் ஜனா யாக பதவி வகித்து வந்தார். அதிகாரத்தை வசம் கொண்டு வர முயற்சித்தார் என்று அந்நாட்டு துணை ஜனாதிபதி எமர்சன் காவாவை முகாபே பதவி நீக்கம் செய்தா

# இராஜினாமா முடிவை ஒத்திவைத்தார் நாடு திரும்பிய லெபனான் பிரதமர்



(பெய்ரூட்)

பாரிஸ் நகரிலிருந்து நாடு திரும்பிய லெபனான் பிரதமர் சாட் ஹரிரி ஜனாதிபதியின் வேண்டுகோளின்படி இராஜினாமா முடிவை ஒத்திவைத்துள்ளதாக அறிவித்துள்ளார்.

லெபனான் பிரதமர் சாட் அல் ஹரிரி கடந்த 3 ஆம் திகதி திடீரென சவுதி அரேபியாவுக்குச் சென்றார். பின்னர் மறுநாள் தொலைக்காட்சியில் தோன்றி பேசிய அவர், தனது உயிருக்கு ஆபத்திருப்பதால் பிரதமர் பதவியை இராஜினாமா செய்துவிட்டதாக அறிவித்தார்.

ஆனால்அவரது இராஜினாமாவை லெபனான் ஜனாதிபதி மைக்கேல் ஆன் ஏற்கவில்லை. இந்நிலையில், சாட் ஹரிரி நேற்று முன்தினம் லெபனான் தலைநகர் பெய்ரூட் வந்தடைந்தார். லெபனான் ஜனாதிபதி மைக்கேல் ஆன்-ஐ சந்தித்த அவர் தனது இராஜினாமா தொடர்பாக விவாதித்தார். இவ்விவகாரம் தொடர்பாக தீவிரமாக ஆலோசிக்க வேண்டியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்ததால் ஜனாதிபதியின் வேண்டுகோளின்படி இராஜினாமா முடிவை ஒத்திவைத்துள்ளதாக அறிவித்துள்ளார். (இ-7)

# ஜெயாவின் போயஸ் கார்டனில் பரபரப்பு!

(சென்னை)

முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வாழ்ந்த போயஸ் கார்டன் இல்லத்திற்குள் டி.டி.வி. தினகரன் தரப்பினர் அத்துமீறி நுழைய முற்பட்டதால் பரபரப்பான சூழல் ஏற்பட்டது.

போயஸ் கார்டன் இல்லம் நினைவிடமாக மாற்றப்படும் என தமிழக முதலமைச்சர் பழனிச்சாமி அண்மையில் அறிவித்ததனைத் தொடர்ந்து, போயஸ் கார்டனுக்குள் நுழைய தினகரன் தரப்பினருக்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. அண்மையில் வரு



மான வரி
சசிகலாவி
வின் உ
ஆகியோர
இதன்
ஆதாரங்க
வருவதே
விடேட
தீர்மானிக்
இந்த
ஆதரவு த
டனுக்குள்
ஜெயல
வேண்டும்
வேண்டும்
வாங்குவா

# வெளிநாடு

## ...த பொக்கிஷம் என்னும் ...ள கைவிட மாட்டோம்!



### ...கொரியா சவால்

...டாக அமெரிக்காவால்
...பொருளாதாரத் தடையும்
...த பொக்கிஷம் என்னும்
...ல்லை என வடகொரியா

உலக நாடுகளின் கண்டனம், ஐ.நா. சபையின் பொருளாதாரத் தடைகள் என எதைப் பற்றியும் கவலைப்படாமல் வடகொரியா தொடர்ந்து அணு ஆயுதச் சோதனைகள், ஏவுகணை சோதனைகளை நடத்தி உலக நாடுகளை அச்சுறுத்தி வருகி றது. அதேசமயம், அமெரிக் காவின் தூண்டுதலின் பேரில் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டதால் வடகொரியாவுக்கு கடும் எரிச்சலையும் ஆத்திர த்தையும் ஏற்படுத்தியுள்ளது.

புதிய பொருளாதாரத் தடைக்கு அமெரிக்கா உரிய விலையைக் கொடுக்க நேரிடும் என வடகொரியா எச்சரித்தது. போர் தொடுத்தால் அமெரிக்காவை ஏவுகணைகளால் தகர்ப்பதாகவும் மிரட்டியது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்காவில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வடகொரியா தீவிரவாதத்தை ஆதரித்து வருவதாக கூறினார். தீவிரவாதத்திற்கு ஆதரவு அளித்து வரும் நாடுகளாக அறிவிக்கப்பட்டுள்ள ஈரான், சூடான், சிரியா போன்ற நாடுகளின் பட்டியலில் வடகொரியாவும் இணைகிறது என்றும் அவர் தெரிவித்தார். இதன்மூலம் வடகொரியா மீதான கெடுபிடிகள் இன்னும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், வடகொரியா மீது புதிய பொருளாதார தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது. வடகொரியாவுடன் பல கோடி ரூபாய்க்கு வர்த்தக தொடர்பு வைத்துள்ள ஒரு தொழிலதிபர், 13 நிறுவனங்கள் மற்றும் 20 கப்பல்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. வடகொரியாவின் அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணை திட்டங்களுக்கான நிதி ஆதாரத்தை தடுத்து அந்நாட்டை தனிமைப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த புதிய தடை கள் விதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை சீண்டிப்பார்த்து, ஆத்திரமூட்டும் செயலாக குறிப்பிட்டுள்ள வடகொரியா, தீவிரவாதத்துக்கும் எங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என தெளிவுபட தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, வடகொரியா அரசுக்கு சொந்தமான செய்தி நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், 'வடகொரியாவின் தலை மீது அமெரிக்க அரசு தீவிரவாத தொப்பியை கவிழ்ப்பதைப் பற்றி எங்களுக்கு அக்கறை இல்லை.

ஆனால், அமெரிக்காவின் நடவடிக்கையில் இருந்து எங்களை தற்காத்துக் கொள்ள வேண்டுமானால், பொக்கிஷமாக நாங்கள் பாதுகாத்துவரும் அணுஆயுத போர்வாளை தொடர்ந்து உறுதியாக பற்றிக்கொள்ள வேண்டும் என்பதைதான் அமெரிக்காவின் நடவடிக்கை சுட்டிக் காட்டுகிறது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## இந்தியாவில் இவாங்கா



இந்தியாவும், அமெரிக்காவும் தொடர்ந்து பணியாற்றும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மகள் இவாங்கா தெரிவித்துள்ளார். ஐதராபாத்தில் நடைபெறவுள்ள தொழில் முனைவோர் மாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மகள் இவாங்கா ட்ரம்ப் இந்தியா வரவுள்ளார்.

சர்வதேச தொழில் முனைவோர் மாநாடு எதிர்வரும் 28 ஆம் திகதி ஐதராபத்தில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைக்கிறார். இந்த மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் மகள் இவாங்கா ட்ரம்ப் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். அமெரிக்க தொழில் முனைவோர் குழுவுக்கு இவர் தலைமை தாங்கி அழைத்து வருகிறார். இந்த மாநாட்டில் 170 நாடுகளிலிருந்து சுமார் 1,500 இற்கு மேற்பட்ட தொழில் முனைவோர் கலந்து கொள்ள வுள்ளனர். இதில் அமெரிக் காவில் இருந்து மட்டும் அமெ ரிக்கவாழ் இந்தியர்கள் உட்பட 350 இற்கும் மேற்பட் டோர் பங்கேற்கின்றனர்.

சர்வதேச அளவில் பொருளாதார மேம்பாட்டைப் பற்றியும் தொழில் முனைவதில் பெண்களின் பங்கு பற்றியும் இந்த மாநாட்டின் நோக்கமாக எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறப்படுகிறது. இவாங்கா ட்ரம்ப் வருகையையொட்டி ஐதராபாத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி ட்ரம்ப் மகள் இவாங்கா நேற்று முன்தினம் வோஷிங்டனில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், உள்ளடக்கிய வளர்ச்சிக்காக இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து தொடர்ந்து பணியாற்றும். இந்திய பயணத்தை எதிர் பார்த்து காத்திருக்கிறேன். இந்திய பிரதமர் மோடி மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோரை சந்திக்க மறுபடியும் ஆவலாக இருக்கிறேன்.

இந்த தொழில் முனைவோர் மாநாட்டில் முதல் முறையாக அதிகளவில் பெண்கள் கலந்து கொள்ளவுள்ளது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. இதில் பங்கேற்கவுள்ள 127 நாடுகளில் சுமார் 52.5 சதவீதத்துக்கு மேற்பட்ட பெண்கள் தொழில் முனைவோராக இருந்து வருகின்றனர் எனத் தெரிவித்தார். (இ-7)

## ...நாட்டின் புதிய ஜனாதிபதியாக ...ங்காவா இன்று பதவியேற்பு



...ஜனாதிபதியாக
... பதவியேற்க
...ஊடகம் செய்தி

...வேயில் ராபட்
...தல் ஜனாதிபதி
...காரத்தை தனது
...ர் என்று கூறி
...எமர்சன் நாங்
...ம் செய்தார்.

. இராணுவத் தலைமை தளபதி ஜெனரல் சிவெங்கா, துணை ஜனாதிபதி நாங்காவாவுக்கு ஆதரவாக இருந்த நிலையில், கடந்த 15 ஆம் திகதி தலைநகர் ஹரரேவை இராணுவ பீரங்கிகள் சுற்றி வளைத்தன. ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியதாக செய்திகள் வெளியாகின.

ஜனாதிபதி முகாபேவுக்கு எதிராக இராணுவம் கிளர்ந்துள்ளதற்கு அந்நாட்டு மக்கள் ஆதரவு அளித்த நிலையில், முகாபே பதவி விலகவேண்டும் என ஆளும்கட்சி எம்.பி.க்கள் உட்பட அனைவரும் போர்க்கொடி தூக்கினர்.

இதனையடுத்து, கூடிய பாராளுமன்ற சிறப்புக் கூட்டத்தில், முகாபேவை பதவி நீக்கம் செய்வதற்கான தீர்மானத்தை ஆளும்கட்சி எம்.பிக்கள் தாக்கல் செய்து, அதன் மீது விவாதம் நடத்தினர். ஆனால், முகாபே தனது பதவியை இராஜினாமா செய்து விட்டதாக கூறிய சபாநாயகர், விவாதத்தை முடித்து வைத்தார்.

இந்நிலையில், அனைவரும் எதிர்பார்த்த படி முகாபேயால் பதவி நீக்கப்பட்ட முன்னாள் துணை ஜனாதிபதி எமர்சன் நாங்காவா, அந்நாட்டின் புதிய ஜனாதிபதியாக இன்று 24 ஆம் திகதி பதவியேற்கவுள்ளதாக அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

...ான வரித்துறையினர் போயஸ் கார்டனில் உள்ள
...சிகலாவின் 4 அறைகள் மற்றும் ஜெயலலிதா
...வின் உதவியாளராக இருந்த பூங்குன்றன்
...ஆகியோரது அறைகளில் சோதனை நடத்தினர்.

இதன் போது பல முக்கிய ஆவணங்களும்,
...ஆதாரங்களும் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டு
...வருவதோடு, இது தொடர்பில் சசிகலாவிடம்
...விஷேட விசாரணைகளையும் முன்னெடுக்க
...தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தினகரன்
...ஆதரவு தரப்பினர் ஒன்று திரண்டு போயஸ் கார்
...னுக்குள் செல்ல முயற்சிகளை மேற்கொண்டனர்.

ஜெயலலிதாவிற்கு மாதச் சடங்குகள் செய்ய
...வேண்டும் என்வும் அதனால் உள்ளே செல்ல
...வேண்டும் எனவும் அவர்கள் பொலிஸாருடன்
...வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் வருமான வரித்துறையினர் சோதனை நடத்திச் சென்றிருப்பதால் உள்ளே செல்ல அனுமதி இல்லை எனக் கூறிய பொலிஸார் அனைவரையும் தடுத்ததால் இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதங்கள் முற்றி பரபரப்பான சூழல் ஏற்பட்டுள்ளது.

எனினும் ஏராளமான பொலிஸார் சம்பவ இடத்தில் குவிக்கப்பட்டதால் தினகரன் தரப்பினர் அங்கிருந்து கலைந்து சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (இ-7)

## பாகிஸ்தான் இராணுவ மேஜர் தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் இராணுவத்திற்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே இடம்பெற்ற சண்டையில் இராணுவ மேஜர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

பாகிஸ்தான் நாட்டின் கைபர் பக்துன்க்வா மாகாணத்திலுள்ள தேரா இஸ்மாயில் கான் மாவட்டத்தில் தீவிரவாதிகள் நடமாட்டம் அதிகமாக இருப்பதாக தகவல் வந்தது. இதையடுத்து இராணுவத்தினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது தீவிரவாதிகள் பதுங்கியிருந்த இடத்தை நோக்கி பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதற்கு தீவிரவாதிகளும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இரு தரப்பினருக்கும் இடையே இடம்பெற்ற சண்டையில் இராணுவ மேஜர் இஷாக் மரணமடைந்தார். 28 வயதான இஷாக் பாகிஸ்தானுக்கு சொந்தமான பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்தவர். இவருக்கு ஒரு வயதில் பெண் குழந்தையுள்ளது. அவருடைய உடலுக்கு தேரா இஸ்மாயில் கான் மாவட்டத்தில் இறுதி மரியாதை செய்யப்பட்டது. இதில் இராணுவ ஜெனரல் மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஆப்கானிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள தேரா மாவட்டம் வடக்கு மற்றும் தெற்கு வசிரிஸ்தான் பழங்குடி இன மக்களுக்கு பாதையாக இருந்து வருகிறது. இந்த மாவட்டம் உள்ளூர் மற்றும் அயல்நாட்டு தீவிரவாதிகளின் உறைவிடமாக இருந்தது.

பாகிஸ்தானில் தீவிரவாதிகளுடன் நடைபெற்று வரும் சண்டையில் கடந்த மூன்று மாதங்களில் மட்டும் இஷாக் உட்பட 4 இராணுவ மேஜர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தண்ணீருக்காக இலங்கையிலும் போர் வெடிக்கும்



## சமல் ராஜபக்ஷ எச்சரிக்கை

(கொழும்பு)

**தண்ணீர் பிரச்சினைக்காக இலங்கையிலும் போர் வெடிக்கும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ எம்.பி தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நீர்ப்பாசன, கமத்தொழில், மகாவலி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

நீர் பிரச்சினையால் உலகில் பல யுத்தங்கள் நடந்துள்ளன. ஜோர்தான் கங்கை தொடர்பில் இஸ்ரேலுக்கும் சிரியாவுக்குமிடையில் யுத்தம் ஏற்பட்டது. நைல் நதி தொடர்பில் எகிப்தில் பிரச்சினை ஏற்பட்டது. சீனாவில் மஞ்சள் ஆறு தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டது.

தாய்லாந்தின் ஒருபகுதியில் பிரச்சினை உருவானது. மொனராகலையில் உள்ள ஆறுகளினூடாக தான் அம்பாந்தோட்டைக்கு நீர் கிடைக்கிறது. சில இடங்களில் பலாத்காரமாக அணைகள் கட்டப்பட்டு நீரை தடுப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

கடந்த ஆட்சியில் நாட்டிய அடிக்கல்கள் அகற்றப்படுகின்றன. இது தவறாகும். தற்போதைய ஜனாதிபதியும் விவசாய அமைச்சராக இருந்தார். எனவே விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் போது குறுக்கீடு செய்த அமைச்சர் விஜித் விஜித முனி சொய்சா. நானும் கடந்த அரசில் அமைச்சராக இருந்தேன். அடிக்கல்கள் அகற்றப்படுவதை அனுமதிக்க முடியாது. யாராவது தடுப்பு இட்டு நீர் ஓடுவதை நிறுத்தினால் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (இ-7)

# படையினரின் குடும்பங்களை இலக்கு வைக்கும் மகிந்த அணி

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் போட்டியிடவுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் அதிகளவில் பௌத்த பிக்குகளையும், படையினரின் குடும்ப உறுப்பினர்களையும் வேட்பாளர்களாக நிறுத்தவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வாக்குகளை அதிகரிப்பதற்காக, தேரவாத பௌத்தத்தை பின்பற்றும் பிக்குகளை அதிகளவில் வேட்பாளர்களாக நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் இந்தக் கட்சி 25 தொடக்கம் 30 வீதம் வரை பிக்குகளை வேட்பாளர்களாக நிறுத்த திட்டமிட்டுள்ளது.

தற்போது வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணிகள் பிரதேச மட்டத்தில் இடம்பெற்று வருகிறது.

அதேவேளை, போரில் உயிரிழந்த படையினரின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களை வேட்பாளர்களாக நிறுத்தவும், பொதுஜன முன்னணி திட்டமிட்டுள்ளது.

அதிகளவில் பெண் வேட்பாளர்கள் தேவைப்படுவதாலும், படையினரின் குடும்பங்களின் ஆதரவைப் பெறும் நோக்கிலும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# குப்பை பிரச்சினைக்கு துரித தீர்வு

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

துறைமுக நகரத்தை அனைத்து சுற்றாடல் ஆய்வுகளின் அடிப்படையில் நிர்மாணிப்பதாகவும், நாட்டின் குப்பை பிரச்சினைக்கு துரித தீர்வை வழங்கவுள்ளதாகவும் மாநகர சபை மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரசபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கழிவு முகாமைத்துவம் மற்றும் நகர அலங்கரிப்பு தொடர்பாக ஊடகவியலாளர்களை தெளிவூட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், கொழும்பு நகரில் குப்பை கூழங்கள் தொடர்பாக மாத்திரமன்றி டெங்கு தொற்று, நீர் குழாய்களை தூய்மையாக பராமரித்தல், வளி மாசடைதலை முகாமைத்துவம் செய்தல் உள்ளிட்ட விடயங்களில் தற்போது தெற்காசியாவில் முக்கிய இடத்திற்கு வந்துள்ளோம்.

வதந்தியான செய்திகளுக்கு முதலிடத்தை வழங்குவதை போன்று இவ்வாறான நற்செய்திகளுக்கும் முதலிடத்தை வழங்கி கவனம் செலுத்துமாறு கோருகிறேன்.

வளி மாசடைதல், நீர மாசு காரணமாக டில்லி, இஸ்லாமாபாத் போன்ற நகரங்கள் தற்போது ஸ்தம்பித்துள்ளன. ஆனால் கொழும்பு நகரத்தை அந்த பாதிப்பில் இருந்து காப்பாற்றியுள்ளோம்.

2007 - 2008 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நாம் வளி மாசடைதலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வர்த்தமானிக்கு இடைக்காலத் தடை

## மகிந்த கருத்து வெளியிட மறுப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளின் எல்லைகள் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு, மேல்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளமை தொடர்பாக கருத்து வெளியிடுவதற்கு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மறுப்புத் தெரிவித்துள்ளார்.

மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் வர்த்தமானி அறிவிப்புக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளதை அடுத்து, உள்ளூராட்சித் தேர்தல்கள் மேலும் தாமதமாகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது,

இப்போது எந்தக் கருத்தும் சொல்வதற்கில்லை. தற்போதுள்ள நிலையில் நான் என்ன கருத்தைக் கூற முடியும்?

புதிய சூழ்நிலை தொடர்பாக, நாளை 25ஆம்திகதி நடைபெறும் தேர்தல்கள் ஆணையத்தின் வாராந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும் என்று தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நாம் உருவாக்கும் குற்றவாளிகள்

உடன் வேலை செய்கிறாரே என்று சகஜமாகப் பழகினேன். திடீரென்று ஒரு நாள் லவ்லெட்டரை நீட்டிட்டார் சார் என்று குறைபட்டுக் கொண்டார் ஓர் இளம் பெண்.

சொல்கிறேன் என்று தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். குறைஉங்கள் மீதுதான் என்றேன்.

என்ன சார் அப்படி சொல்லிட்டீங்க? என அதிர்ந்தாள் அப்பெண்.

நீங்கள் அவரை விரும்புகிறீர்கள் என்று அவர் தவறாகக் கணித்தது கிடக்கட்டும்; அவர் மிக நல்லவர்; இந்த மாதிரியான காரி யத்தில் இறங்கமாட்டார் என்று நீங்கள் கணித்தீர்களே, அதுதான் அவரது கணிப்பைவிட மோசமானது என்றேன்.

சந்தர்ப்பங்களை உருவாக்கித் தந்தால் 100க்கு 90பேர் தவறு செய்யத் தயங்கமாட்டார்கள்.

இந்த உலகில் திட்டமிட்டுத் தவறு செய்யும் குற்றவாளிகளைவிடச் சந்தர்ப்ப வசத்தால் குற்றவாளிகளானவர்களே அதிகம் என்பது பலரும் அறியாத உண்மை.

ஒரு சிறுவனிடம், இந்தப் பாத்திரத்தில் இருந்த லட்டு குறைகிறதே, நீயா எடுத்தே? என்று கேட்கிறாள் தாய். ஆம் என்றான் சிறுவன். உடனே போட்டு மொத்து மொத்து என மொத்துகிறாள் அவள். அடுத்த முறையும் அதே தவறு நடக்கிறது. அம்மா கேட்கிறாள். அவன் மறுக்கிறான். காரணம் உண்மையை ஒப்புக் கொண்டால் உதை; மறுத்தால் கொஞ்சமாவது தப்பிக்கலாம் என்கிற எண்ணம் அவன் மனதில் பதிந்துவிடுகிறது.

இது ஏன்? உண்மையைச் சொன்னதற்கு எந்தப் பலனும் இல்லை. எனவே இரண்டாவது தவறையும் சேர்த்தே செய்கிறான். இதில் குற்றவாளி யார்? தாய்தான். உண்மையை ஒப்புக் கொண்டதைப் பாராட்டி, இனி இப்படிச் செய்யாதே! என்று அறிவுறுத்தியிருந்தால் அதுதான் மனதில் பட்டிருக்கும்.

சார்! நாளைக்கு எனக்கு லீவு வேணும், என்கிறார் கிளார்க். மனேஜர் கத்துகிறார். அதெல்லாம் எனக்குத் தெரியாது! நாளைக்கு நீர் வந்தாகணும், என்கிறார் அவ்வளவுதான்! சொல்லாமல் கொள்ளாமல் லீவு போட ஆரம்பித்து விடுகிறார் அந்தக் கிளார்க். இந்தக் கிளார்க்ஐக் குற்றவாளியாக்கியவர் மனேஜர்.

உரியவர் கணக்கு வழக்குகளை சரிவரப் பார்ப்பதேயில்லை. அவ்வளவுதான்! இவர் பொய்க்கணக்கு எழுத ஆரம்பித்து விடுகிறார். சாவியையும் பணத்தையும் கண்ட இடத்தில் போடுகிறாள் வீட்டுத்தலைவி. வேலைக்காரி திருடியாகி விடுகிறாள்.

இந்த உலகில் ஒருவரையாவது நம்மால் திருத்தமுடியுமா? என்பது பெரிய கேள்விக்குறி. அப்படியிக்க நாம், நம் கவனக் குறைவாலும் தவறான அணுகுமுறைகளாலும் குற்றவாளிகளை உருவாக்கியபடி இருப்பது எந்த வகையில் நியாயம்.

**லேனா தமிழ்வாணன்**

# இராஜாங்க அமைச்சர் சுஜீவ ஜனாதிபதியை விமர்சனம் செய்தமை அரசியல் சாசன மீறல்

## தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு




(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை விமர்சனம் செய்தமை அரசியல் சாசன மீறலாகும் என பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். பாராளுமன்றில நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சுஜீவ சேனசிங்க ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கின்றார் எனவும், இராஜாங்க அமைச்சராகக் கடமையாற்றி வருகின்றார் எனவும் தெரிவித்துள்ள அவர் இவ்வாறான ஓர் பின்னணியில் அவர் எவ்வாறு ஜனாதிபதியை விமர்சனம் செய்ய முடியும் எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ்வாறு ஜனாதிபதியை விமர்சனம் செய்வதானது நிலையியல் கட்டளைகளையும், அரசியல் சாசனத்தையும் விமர்சனம் செய்யும் வகையில் அமைந்துள்ளதாகவும் தினேஷ் குணவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)




# கோத்தபாயவை காப்பாற்றிய மைத்திரி; மகிழ்ச்சியில் ராஜபக்ஷ குடும்பத்தினர்

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்யுமாறு சட்டமா அதிபர் உத்தரவிட்டிருந்தார்.

இந் நிலையில், கோத்தபாயவின் கைதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலையிட்டு தடுத்துள்ளார் எனத் தெரிய வருகின்றது.

பொதுப் பணத்தை தவறாகப் பயன்படுத்தி தனது பெற்றோருக்கு தனிப்பட்ட ரீதியிலான நினைவிடத்தை நிர்மாணித்தமை தொடர்பில் கோத்தபாயவை கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

சட்டமா அதிபர் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு வழங்கிய உத்த



ரவை ராஜபக்ஷ ஆதரவாளர்கள் வெளியில் கசிய விட்டுள்ளனர்.

இதன் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூட்டம் ஒன்றில் இன்று அல்லது நாளை கோத்தபாய ராஜபக்ஷ கைது செய்யப்படலாம் எனக் கூறியிருந்தார்.

இதனை அறிந்துகொண்ட இத்தேபானே தம்மலங்கார தேரர் மற்றும் மெதகொட அபயதிஸ்ஸ தேரர்கள் ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து, கோத்தபாயவை கைது செய்ய வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து உடனடியாக பொலிஸ்மா அதிபரை தொலைபேசியில் தொடர்புக்கொண்ட ஜனாதிபதி மைத்திரி கோத்தபாயவை கைது செய்ய வேண்டாம் எனக் கூறியுள்ளதாக தெரிய வருகின்றது.

இதனையடுத்து ராஜபக்ஷ குடும்பத்தினர் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளனர். (இ-7)

# போர் ஆக்கிரமிப்பாளர்களின் உத்திகளில் ஒன்றே யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் குற்றச்செயல்கள்

## மாகாண சபை உறுப்பினர் விந்தன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களை அச்சத்திற்குள் வாழ வைக்கும் போர் ஆக்கிரமிப்பாளர்களின் உத்திகளில் ஒன்றாகவே யாழில் நடைபெறும் குற்றச் செயல்களை நாம் பார்க்க வேண்டியுள்ளதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார். இவ் வருடம் தனது நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் வெற்றியளிப்புக்கள் குறித்து யாழ்ப்பாணம் வைத்திய சாலை வீதியில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், போர் முடிவுற்று விட்டது என அரசு அறிவித்து எட்டு ஆண்டுகள் கடக்கின்றன. ஆனாலும் இயல்புவாழ்க்கைக்கு நாம் செல்ல பலதரப்பட்ட தடைகள் எம் முன் நிலவுகின்றன. எங்களுடைய அரசியல் அபிலாசைக்கான அடிப்படைகள் நிவர்த்திசெய்யப்படவில்லை. இதற்கு மேலாக நாம் ஒரு அச்சுரமான சூழலில் தான் நடத்தப்படுகின்றோம். இவ் அச்சுரத்தினைத் தோற்றுவிப்பதற்கு எதிராக நாம் செயற்படவேண்டியுள்ளது.

எமது சமூகத்தில் இளைஞர்களிடையே வன்முறைக் குழுக்கள் இயங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒரு விடுதலைக்காகப் போராடும் இனத்தில் தெருச் சண்டைகளுக்கும் குற்றச்செயல்களுக்கும் வன்முறைக் குழுக்கள் உருவாவது என்பது வேதனைக்குரியது. அவ்வாறு வன்முறையை குறித்த குழுக்கள் கற்றுக்கொண்டமைக்கு மக்களை அச்சத்திற்குள் வைத்திருக்கவேண்டும் என்ற இராணுவபுலனாய்வு அமைப்புக்களின் உத்திகளே காரணமாகவுள்ளன.

வன்முறைக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு நீதிமன்றங்களில் தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. இது வரவேற்கத்தக்கது. சமூகத்தில் தவறு இழைத்தவர்களை நீதிமன்றங்கள் தீர்ப்புக்கள் வாயிலாக கட்டுப்படுத்துகின்றன. அல்லது சீர்திருத்தி அவர்களை மீளவும் நல்ல மனிதர்களாக சமூகமயப்படுத்துகின்றன. நீதித்துறை வன்முறைக்குழுக்களின் விடயத்தில் இறுக்கமான நடைமுறையினைப் பின்பற்றுவது எமக்கு நம்பிக்கையினை ஏற்படுத்துகின்றன. இந்த வகையில் நீதிபதி இளஞ்செழியனின் தீர்ப்புக்கள் முக்கியமானவை.

யாழ்ப்பாணத்தினைப் பொறுத்தளவில் வன்முறைகளுக்கு அடிப்படையாக அரசியல் காரணங்கள் நிலவுகின்றன. தற்போதுகூட வாள் வீச்சு, வாள் வெட்டு என எமது நாகரிகத்திற்குப் பொருந்தாத குற்றங்கள் நடைபெறுகின்றன. இவை தூண்டிவிடப்பட்டமைக்கு பின்னணிகள் இருப்பதை ஊகிக்க முடிகின்றது. தமிழ் மக்கள் மாவீரர்களுக்காக அஞ்சலிக்கும் இவ் வேளையில் திடீர் என வன்முறைக் குழுக்களின் அட்டகாசம் தலைதூக்குகின்றது.

அடிப்படையில் வன்முறைக்குழுக்களை என்ன அரசியல் தேவைக்காக உருவாக்கினார்களோ உருவாக்கிய வர்கள் அத் தேவைக்காக தற்போது அக்குழுக்களைப் பயன்படுத்தி தமது நோக்கத்தினை நிறைவேற்றுகின்றனர் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி தெரிகின்றது. மக்களை அச்சத்திற்குள் வைத்திருப்பதன் வாயிலாக கடந்த அரசாங்கம் மக்கள் மீதான அடக்கு முறைகளுக்கு எதிராக அவர்கள் போராடக் கூடாது என செயற்பட்டது. அதனை அவ் அரசாங்கம் யுத்த வெற்றி மமதையிலும் வெளிப்படையான இனவாதத்தின் அடிப்படையிலும் மேற்கொண்டது. ஆனால் தற்போதைய நிலையில் இப் பொறுப்பினை சற்று மென்போக்கான உத்திகளுடன் இராணுவ புலனாய்வு அமைப்புக்கள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என எம்மால் கருதத் தோன்றுகின்றது.

மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ளது. மாவீரர்கள் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக சகலதையும் அர்ப்பணித்தவர்கள். அவர்களின் அர்ப்பணிப்பு ஒவ்வொரு தமிழ்மகனிடத்திலும் உணர்வுபூர்வமான உறுதியை ஏற்படுத்துகின்றது. இதை அடக்குமுறையாளர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத பட்சத்தில் வன்முறைப் பிரயோகங்களை ஏமாறக்கூடிய எமது இளைஞர்களை பயன்படுத்தி வன்முறையினை கட்ட விழ்த்துவிட்டு குளிர்காய்கின்றனர். மக்கள் என்னதான் அச்சம் தோற்றுவிக்கப்பட்டாலும் தமது கடமைகளைச் சரியாக ஆற்றுவதற்குத் தயாராகவே இருக்கின்றனர். இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார். (இ-4)

# ஜெயலலிதா மரணம்

## அரசு வைத்தியர்கள் இரண்டு பேர் விசாரணை ஆணையத்தில் ஆஜர்



(சென்னை)

ஜெயலலிதா மரணம் குறித்து விசாரணை நடத்தி வரும் நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான விசாரணை ஆணையத்தில் அரசு வைத்தியர்கள் இரண்டு பேர் நேற்று ஆஜராகி விளக்கம் அளித்தனர்.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா மரணம் குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் விசாரணை ஆணையம் அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டது. நீதிபதி ஆறுமுகசாமி நேற்றுமுன்தினம் தனது நேரடி விசாரணையை தொடங்கினார்.

முதன்முதலாக பிரமாண பத்திரம் அளித்த டாக்டர் சரவணன் நேற்றுமுன்தினம் ஆணையத்தில் ஆஜராகி விளக்கம் அளித்தார். ஜெ. தீபா, உச்சநீதிமன்ற சட்டத்தரணி கிருஷ்ணமூர்த்தி, டிராபிக் ராமசாமி ஆகியோரும் ஆணையத்தில் மனுக்களை அளித்தனர்.

இதன்பின்பு நீதிபதி ஆறுமுகசாமி நிருபர்களிடம் கூறுகையில், 2 அரசு வைத்தியர்களுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளதாகவும், அவர்கள் 23ஆம் திகதி ஆஜராக அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதன்படி, சென்னை ராஜீவ் காந்தி அரசு வைத்தியசாலை பணிப்பாளர் நாராயணபாபு மற்றும் வைத்தியர் மயில்வாகனன் ஆகியோர் நேற்று விசாரணை ஆணையத்தில் ஆஜராகினர். அப்போது நீதிபதி ஆறுமுகசாமி கேட்ட கேள்விகளுக்கு இருவரும் விளக்கம் அளித்தனர்.

இதேபோல் தி.மு.கவை சேர்ந்த வைத்தியர் சரவணன் நேற்று மீண்டும் ஆஜராகி சில ஆவணங்களை வழங்கினார். (இ-7)

# தீவகத்தில் மாவீரர் நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கோட்ட மாவீரர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6.07 மணிக்கு சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தில் இடம்பெறும்.

எனவே மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர், பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களை கலந்து கொள்ளுமாறு சாட்டி மாவீரர் துயிலுமில்ல மாவீரர் பணிக் குழு அறிவித்துள்ளது. (இ-7)

# மைத்திரி அரசிற்கு எதிராக மகிந்த-ஜே.வி.பி. இணைவு

## கொழும்பு அரசியலில் குழப்பம்



(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்டு வரும் இந்த அரசின் வெட்கம் கெட்ட நடவடிக்கைக்கு நீதிமன்றமும் தீர்வைப் பெற்றுத்தராது போனால் தாம் வீதியில் இறங்கப் போவதாகவும் தம்முடன் மகிந்தவின் கூட்டு எதிர்க்கட்சியையும் ஒன்றிணையுமாறும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.**

ஒருபோதும் ஒன்றிணைந்து செயற்பட முடியாது என நினைத்த சூழலுடனும் தாம் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வரவு- செலவுத் திட்ட விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த உரையை அநுரகுமார ஆவேஷத்துடன் நிகழ்த்தும் போது, பாராளுமன்றத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் செவிமடுத்துக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மக்களின் ஜனநாயக உரிமையை பறிக்க அனுமதிக்க முடியாது

**ஐ.தே.க. உறுதி**

(கொழும்பு)

பொது மக்களின் ஜனநாயக உரிமையை வெற்றி கொள்ளச் செய்வதற்கு வாக்குரிமையை உறுதிப்படுத்தும் முகமாக எந்த ஒரு தீய சக்தியையும் தோற்கடிப்பதற்கு தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அந்த கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலவித குறுகிய நோக்கங்களுக்காக சிலர் பொதுமக்களின் ஜனநாயக உரிமையை பறிக்க முயற்சிக்கிறார்கள்.

அவ்வாறான செயற்பாடுகளை முறியடிப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சி பின்வாங்காது முனைப்புடன் செயற்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை பொதுமக்களிடம் பெற்றுக்கொடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியை தோற்கடிக்கும் நோக்கில் குறுகிய அரசியல் நோக்கில் செயற்படும் எந்தவொரு தீயசக்தியையும் தோற்கடிக்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பயணிகள் பேருந்துமீது பெற்றோல் குண்டு வீச்சு

(கொழும்பு)

மொனராகலையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பயணிகள் பேருந்து ஒன்று மீது நேற்று அதிகாலை பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக கொடகாவல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொடகாவல - பல்லபெத்த பிரதேசத்தில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் பேருந்து சாரதி படுகாயமடைந்து எம்பிலிபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட பிரச்சினை ஒன்றை முன்னிறுத்தியே இந்த பெற்றோல் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ-7)

## கமுகு பயிர்ச்செய்கை



பொதுப்பெயர்:- கமுகு, பாக்கு
தாவரவியல் பெயர்:-**Areca Catechu**

**கமுகுசெய்கையின் முக்கியத்துவம்**

❖ ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு வருடத்திற்கு பாக்கு செய்கை மூலம் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் (250000.00 ரூபா) வரை வருமானம் பெறலாம்.

❖ தனிப்பயிராக கமுகு நடுவதாயின் ஒருஏக்கருக்கு 440 கன்றுகள் நடப்படும்.

❖ ஒரு மரத்திலிருந்து ஒரு வருடத்தில் 750 காய்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**பயன்பாடு**

❖ உடம்பிற்கு சூட்டுத் தன்மையுடைய உணர்வை தூண்டுகிறது.

❖ உடன்பாக்காகவும் உலர் பாக்காகவும் பயன்படுத்தலாம்.

❖ பச்சை பாக்கை வெட்டி அதற்கு சுவையூட்டி வேறுபட்ட உற்பத்திகள் உருவாக்கப்படுகின்றன.

❖ ஆயுள்வேத பாரம்பரிய மருந்துகள் தயாரிப்பில் பயன்படுகிறது.

❖ பற்பசைகளின் உள்ளீடாக பயன்படுத்தப்படுகிறது.

❖ விலங்கு மருத்துவத் துறையில் நாடாப்புழுக்கள் குடல் ஒட்டுண்ணிகளை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

❖ இலைமடல் ஆனது தட்டுக்கள் பொதி செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறது.

❖ முதிர்ச்சி அடைந்த தண்டுகள் கட்டடப் பொருட்களாக பயன்படுத்தப்படுகிறது.

**இனங்கள்**

• உள்ளூர் இனம். தேசிய இனமாகும்.

• ஹம்பனர் பாக்கு

• வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்ட நாட்டுப்பாக்கு.

**தேவையான சூழல் காரணிகள்**

• கடல் மட்டத்திலிருந்து 1000 மீற்றர் வரையான பிரதேசம்.

• வருடாந்த மழை வீழ்ச்சி 1750 மி.மீபரவலான மழைவீழ்ச்சி.

• வெப்பநிலை 15 - 320 C வரை

• நன்கு நீர் வடியும் இருவாட்டி மண் சிறந்தது.

• மண் ஈரலிப்பு தொடர்ச்சியாக இருத்தல் வேண்டும்.

• நாட்டியதிலிருந்து 2-3 வருடங்கள் வரை 40% நிழல் அவசியம்.

• வயதுடைய மரங்கள் மிதமான நிழல் சூழலில் கூடுதல் விளைவை தரும்.

• உயர் நிழல் உள்ள இடங்கள் சரியான நிலாங்கள் பொருத்தமானவை.

**நடுகைக்கான கன்றுகளை தெரிவு செய்தல்**

• நடுகைக்கான கன்று குறைந்தது 4 இலைகளை கொண்டிருத்தல் வேண்டும்

• இலைப்பரப்பு அகலமாக பரம்பி இருத்தல் வேண்டும்.

• தடிப்பான தண்டு உடைய குட்டையான கன்றுகள் நடுகைக்கு உகந்தது. மெல்லிய உயரிய கன்றுகள் நடுகைக்கு பொருத்தமற்றவை.

**நடுகைமுறை**

• சிறுபோக பெரும்போக மழை ஆரம்பத்துடன் நடுகை செய்தல் சிறப்பானது.

• நடுகைக்கான குழி 1.5'X1.5'X1.5'நீள அகல ஆழமுடையதாக அமைத்தல் வேண்டும்.

• சேதனப் பசளை மற்றும் மேல் மண் கலவையால் குழி நிரப்பப்படவேண்டும்.

• நடுகை இடைவெளி 10அடி X 10 அடி

• நடுகைக்குழியில் கன்றுகள் ஆழத்தில் நடுதல் சிறந்தது. இதன் மூலம் மரம் சரிந்து விழுவதை தடுப்பதுடன் கூடிய விளைச்சலையும் பெறலாம்.

• கன்றுகள் நாட்டிய பின்னர் தென்னை ஓலை அல்லது காய்ந்த வாழைச்சருகு மூலம் தற்காலிகமாக நிழல் வழங்க வேண்டும்.

• நேரடியாக சூரிய ஒளிபடும் இடத்தில் இலைகள் கருகி வளர்ச்சி குன்றும்.

• நடுகை செய்து இரண்டு வருடங்களில் 4 இற்கு மேற்பட்ட முடிச்சுக்கள் இருத்தல் வேண்டும்.

• 5 வருடங்களின் பின்னர் முதல் அறுவடையை பெற்றுக்கொள்ளலாம்.

• நலிவடைந்த கன்றுகள் அகற்றப்பட வேண்டும்.

• 40-50 வருடங்கள் வரை வாழ்க்கைக் காலம் உடையது ஆகையால் கூடிய விளைச்சலை பெற்றுக் கெள்ள சிறந்த வர்க்க கன்றுகளை நடுகை செய்தல் வேண்டும்.

• இப்பயிர்ச் செய்கையில் பராமரிப்புமிக இலகுவானதாக இருக்கும்.

**பசளை இடல்**

• கூட்டெரு, பண்ணை பசளை ஒரு கன்றுக்கு 12 கிலோ நடுகையிலிருந்து முதல் வருடம் வரை இடுதல் வேண்டும்.

இரசாயனப் பசளை. கிராம் /கன்று/வருடம்

| பசளை | தேவையானளவு |
|---|---|
| யூரியா | 100 |
| ரி.எஸ்.பி | 40 |
| பொட்டாஸ் | 140 |

• கன்று நாட்டி முதல் வருடத்தில் பசளைத் தேவையின் முழு அளவில் 1/3 பங்கும் இரண்டாம் வருடத்தில் 2/3பங்கும் மூன்றாம் வருடம் தொடக்கம் முழு அளவு தேவைக்கான பசளையும் இடப்பட வேண்டும்.

**அறுவடை**

• 6-7 வருடங்களின் பின் முதலாம் அறுவடையை பெற்றுக்கொள்ளலாம்.

• 10- 15 வருடங்களில் அதிகூடியவிளைச்சல்

• 40 வருடங்களின் பின் உற்பத்தி குறைவடைந்து செல்லும்.

• நாட்டு இனம் ஜூலை முதல் செப்டெம்பர் வரையும் ஊர்ப் பாக்கு ஒக்டோபர் தொடக்கம் ஏப்ரல் காலப்பகுதியில் விளைச்சலைதரும்.

• தேசிய இனத்தில் வருடத்திற்கு 3- 5 குலைகளை பெற்றுக் கொள்ள முடியும். ஒருகுலையில் 250 -400 காய்கள் வீதம் பெற்றுக் கொள்ளலாம்.

**பாக்கு நீண்டநாட்கள் சேமிக்கும் முறைகள்**

1. சேற்றுப் பாக்கு- நீரில் அமிழ்த்திவளி அற்றநிலைக்கு உட்படுத்தல்

2. கொட்டப் பாக்கு-வெயிலில் உலர்த்தல் மூலம்.

3. சீவல் பாக்கு-முற்றாத பாக்கு சீவலாக வெட்டி வெயிலில் உலர்த்தல்.

**க.பிரதீபன்**
பண்ணை முகாமையாளர்,
மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம்,
கிளிநொச்சி.

# ஜனாதிபதியின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவ ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி முழுமையான ஆதரவை வழங்குமென ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் வென்சைய் ஜாங் தெரிவித்தார்.

2018 - 2022 காலப்பகுதியின் அபிவிருத்தி உதவிக்கான நாட்டின் பங்கேற்பு மூலோபாயம் குறித்து கலந்துரையாடுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியைச் சந்தித்தார். இக்காலப்பகுதிக்கான உதவியாக ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 4 முதல் 5 பில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான தொகையை ஒதுக்கியுள்ளது.

இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 50 வருட கூட்டுறவை நினைவு கூரும் வகையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் வென்சைய் ஜாங் 50 வருட பங்குடைமை தொடர்பான நூலின் பிரதியொன்றை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு மூலதனச் சந்தை அபிவிருத்தியைத் துரிதப்படுத்த வேண்டியதன் தேவையை வென்சைய் ஜாங் வலியுறுத்தினார். இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான வளங் கள் பொறிமுறையின் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர், உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியளிக்கும் எனத் தெரிவித்தார்.

அரசாங்கம் முன்னெடுத்துள்ள வறுமை ஒழிப்பு மற்றும் கிராமசக்தி மக்கள் இயக்கம் தொடர்பாகவும் பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள் குறித்தும் ஜனாதிபதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்ததுடன், இந்த முன்னெடுப்புகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவ வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இக்கோரிக்கையை ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபதலைவர் உடனடியாக ஏற்றுக்கொண்டார். அதிக வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதன் மூலம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த முடியும் என்று தெரிவித்த அவர், பொருளாதார அபிவிருத்தி வலயங்கள் இதில் முக்கிய பங்கு வகிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

கடந்த 50 வருடங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கி 9 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவியை இலங்கைக்கு வழங்கியுள்ளதை யிட்டு ஜனாதிபதி ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு தனது நன்றியைத் தெரிவித்தார். (இ-7)

# உதவிஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி நேற்று பாரிய ஆர்ப்பாட்டம்



உதவி ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி நேற்று வியாழக்கிழமை கொட்டகலையில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலை ஆசிரிய பயிலுநர்களால் நேற்று காலை 8 மணியளவில் நுவரெலியா பிரதான வீதியில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது, 'ஆசிரியர் உதவியாளர்களை தரம் 3-II ற்குள் உள்வாங்க வேண்டும்', 'பயிலுநர் ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்காதே', 'அமைச்சர்கள் நாட்டில் ஆசி ரியர்கள் வீதியில்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதா தைகளை ஏந்திய வாறு இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப் பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த சுமார் 500 இற்கும் மேற்பட்ட ஆசிரிய பயிலுநர்கள் கறுப்புப் பட்டி அணிந்தவாறு கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (இ-7)

# அமைச்சுப் பதவி வழங்க வேண்டும் மைத்திரியிடம் கோர மகிந்த அணி முடிவு

(கொழும்பு)

அமைச்சுப் பதவி அல்லது எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கினால் மாத்திரமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படும் என கூட்டு எதிரணி அறிவித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற கட்சியின் உறுப்பினர்கள் கூட்டத்திலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் தொடர்பில் நாட்டு மக்கள் நம்பிக்கையிழந்துள்ள நிலையில் அந்த அரசாங்கத்தின் ஒரு பங்குதாரராக உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து சேவையாற்றுவது பலனற்ற ஒன்றெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் அறிவிக்கவென சீ.பி.ரத்நாயக்க, பவித்ரா வன்னியாராச்சி, மகிந்த யாப்பா அபேவர்த்தன ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# உலகத் தமிழர் பண்பாட்டுப் பேரவையின் கலை,கலாசார இலக்கியப் பெருவிழா

உலகத் தமிழர் பண்பாட்டுப் பேரவையின் தமிழர் பண்பாட்டுப்பேரவை அமைப்பினால் எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற வுள்ளது. மேற்படி நிகழ்வில் சர்வதேச பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந் நிகழ் வினை யாழ்ப்பாண கிளையினர் முன்னெடுக்கின்றனர். அதே நிகழ்வில் மலர் வெளி யீடும் இடம் பெறவுள்ளது. இதற்கான ஆக்கங்களையும், மல ருக்கான வாழ்த்துச் செய்திக ளையும் மக்களிடமிருந்து வர வேற்கின்றோம். இதற்கான இறுதித் தினம் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி ஆகும். இது தொடர்பான விழாக் குழுவினது கல ந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பி.ப 2.30 மணிக்கு விழாக்கு ழுவின் தலைவரும், யாழ்.மாவட்ட சர்வோதய அமைப்பாளருமான சீனி வாசகம் யுவேந்திரா தலைமை யில் நடைபெறவுள்ளது. இது தொடர்பான மலர்க்குழு, வர வேற்புக்குழு, நிதிக்குழு, விழா க்குழு போன்ற அமைப்புக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந் நிகழ்வில் தமிழ் பாரம் பரியத்தை சார்ந்து நிற்கும் பெரியோர்கள் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் கௌரவிக்கப்படவுள்ளனர். எனவே இதில் பங்கு கொள்ள ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் ஞாயிற் றுக் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சர்வோதய தலைமைக்காரியாலயத்திற்கு வருகை தந்து தங்களுடைய கருத்துக் களை தெரிவிக்குமாறும் மலருக்கான ஆக்கங்களை சர்வோதய முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1258

### தமயந்தி

ஒரு குக்கரைப் போல இருங்கள்... பிரஷர் அதிகமாகும் போது விசிலடித்துக் கொண்டாடுங்கள்



### கபில்

சின்ன வயசுல படிக்க புக்க திறந்தோன தூங்குன பயலுகதான்..



ஒபிஸ் வந்தோனயும் தூங்குறானுங்க! தொட்டில் பழக்கம்..

### சியா

காலைல பாதி தூக்கத்துல இருக்கும் போது



அம்மா சாப்பாடு ரெடின்னு கூப்பிடும்போது

### அருண்

ஆளைப்பார்த்து எடை போடக் கூடாது என்பதற்கான சமீபத்திய உதாரணம் வெங்காயம்! • "பெரிய" வெங்காயம் கிலோ 20 ரூபா, "சின்ன" வெங்காயம் கிலோ 130 ரூபா!




### அபி

சந்தோசம்னா என்ன?



பஸ்ல ஜன்னலோர சீற் கிடைக்கிறது

### அருள்



உனக்குள் இருக்கும் "பவர்" அதை நீ உணர்...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வடமாகாண சபைத் தேர்தல் தொகுதி நிர்ணயம் தொடர்பான முன்மொழிவுகள்

(இது கட்டுரை ஆசிரியரின் தனிப்பட்ட முன்மொழிவுகள்)

இச்சூழ்நிலையில் தீவுப் பகுதிகளை எப்பகுதிகளுடன் இணைப்பது என்ற கேள்வி எழுகின்றது. காரைநகரை முன் னர் இருந்தது போல் வட்டுக் கோட்டையுடன் இணைப்பதே சிறந்தது. 1970- 1977 இற்கு இடைப்பட்ட காலத்தில் காரைநகரைச் சேர்ந்த டாக்டர் தியாகராஜா வட்டுக் கோட்டைப் பாராளு மன்றப் பிரதிநிதியாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

காரைநகர் தவிர்ந்த ஏனைய தீவுகள் யாழ்ப்பாணத் தொகுதியின் ஒரு பகுதியாக இருப்பது நல்லது. அரச சபை (State Council) கால த்தில் இருந்தது போல் இப்பகுதிகளை வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு பிரிவுகளுக்குள் இணைக்கக்கூடாது.

1954 இல் வேலணைக்கும் புங் குடுதீவுக்கும் கடல் வழிப் பாதை அமைக்கப்பட்டது. 1961 இல் பண்ணை- அல்லைப்பிட்டி கடல் வழிப்பாதை வேலை முடிவு பெற்றது.

1962 இல் குறிகாட்டுவான் இறங்குதுறைமுகம் அமைக்கப் பட்டதால் நெடுந்தீவு, நயினா தீவு மக்கள் குறிகாட்டுவான்- வேலணை வழியாக யாழ். நகருக்குப் பயணம் செய்யும் வசதி கிட்டியது. இன்று தீவுகளும் யாழ்ப்பாண நகரும் போக்குவரத்து முன்னேற்றத்தால் மிகவும் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளன. மேலும் யாழ்ப் பாண நகரில் வாழும் மக்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் தீவுப் பின்புலம் கொண்டவர்கள். தீவுப் பகுதிகளினது சமய விகிதாசாரம் ஏறக்குறைய யாழ்ப்பாணச் செயலகப் பிரிவு சமய விகிதாசாரத்தை ஒத்துக் காணப்படுகின்றது. மேலும் யாழ்ப்பாணச் செயலகப் பிரிவு 50759 பேரைக் கொண்டிருப்பதால் தனியானதொரு தேர்தல் தொகுதியாக மாறமுடியாது.

மேலும் யாழ்ப்பாண செயலகப் பிரிவையும் நல்லூர் செயலகப் பிரிவையும் இணைக்க முடியாது. நல்லூர் செய லகப் பிரிவு 68142 மக்களைக் கொண்டிருப்பதால் ஒரு சில அயல் பகுதிகளை உள்வாங்கி தனித் தொகுதியாக வரும் வாய்ப் புள்ளது.

யாழ்ப்பாணச் செயலகப் பிரிவில் இருந்து ஜே/61 நெடுங்குளம், ஜே/62 கொழும்புத் துறை கிழக்கு, ஜே/63 கொழும்புத்துறை மேற்கு ஆகிய கிராம அதிகாரி பிரிவுகள் நல்லூர்த் தேர்தல் தொகுதிக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. இம்மூன்று கிராம அதிகாரி பிரி வுகளின் சமூக, பண்பாட்டு நிலை மைகள் நல்லூர்த் தேர்தல் தொகுதி யுடன் இணைப்பதற்குச் சாதகமாக இருப்பதுடன் யாழ்ப் பாணத் தொகுதியின் மக்கள் தொகை மாவட்டத் தொகுதி சராசரி மக்கள் தொகையின் +10 வீதத்திற்கு இருப்பதாலும் இம் மூன்று பிரிவுகளையும் நல் லூர்த் தேர்தல் தொகுதியுடன் இணைக்க வேண்டிய தேவை யேற்பட்டது.

## தீவுகள்- யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதி

இத்தொகுதிக்குள் அடங்கும் பிரிவுகளும் மக்கள் தொகையும்

| பிரிவு | மக்கள் தொகை |
|---|---|
| யாழ்ப்பாண செயலகப் பிரிவு<br>ஜே/61 நெடுங்குளம் கி.அ.பி.<br>ஜே/62 கொழும்புத்துறை கிழக்கு கி.அ.பி<br>ஜே/63 கொழும்புத்துறை மேற்கு கி.அ.பி<br>ஆகிய மூன்று பிரிவுகள் நீங்கலான | 46338 |
| நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவு | 3824 |
| தீவுகள் தெற்கு பிரதேச செயலகப் பிரிவு | 16742 |
| தீவுகள் வடக்கு பிரதேச செயலகப் பிரிவு | 9876 |
| மொத்தம் | 76780 |

பின்வருமாறு,

தீவுகள், யாழ்ப்பாணத் தொகுதி மக்கள் தொகை 76780 ஆகும்.

## நல்லூர் தேர்தல் தொகுதி

நல்லூர் பாராளுமன்றத் தேர் தல் தொகுதி 1960-1989 இற்கும் இடைப்பட்ட காலத்தில் இருந் தது. இது யாழ்ப்பாண நகரின் வட பகுதியையும் நல்லூர் பிர தேச சபைப் பகுதியையும் உள் ளடக்கியுள்ளது. இத் தொகுதிக்குட்பட்ட பகுதிகள் பிரதான மாக வாழிடப் பரப்பாக இருப்பதுடன் நடுத்தர வகுப்பு இந்து மக்களைக் கொண்டு ள்ளன. நல்லூர் வரலாற்றுப் புகழ் பெற்ற பிரதேசமாகவும் நல்லூர் முருகன் கோயில் அமைந்துள்ள இடமாகவும் இருப்பதுவும் குறிப் பிடத்தக்கது.

இத்தொகுதிக்குள் அடங்கும் பிரிவும் மக்கள் தொகையும்

| பிரிவு | மக்கள் தொகை |
|---|---|
| நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு | 68142 |
| ஜே/61 நெடுங்குளம் கி.அ.பிரிவு | 722 |
| ஜே/62 கொழும்புத்துறை கி.அ.பிரிவு | 2909 |
| ஜே/63 கொழும்புத்துறை மேற்கு கி.அ.பிரிவு | 522 |
| மொத்தம் | 72295 |

பின்வருமாறு,

நல்லூர்த் தேர்தல் தொகுதி மக்கள் தொகை 72295

## வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதி

1947-1989 வரை வட்டுக் கோட்டை பாராளுமன்றத் தேர்தல் தொகுதி இருந்தது. 1960 இற்குப் பின் காரைநகரும் இத்தொகுதிக்குள் அடங்கியிருந்தது.

காரைநகர் மக்களுக்கும் வலிகாமம் மேற்கு மக்களுக்கும் இடையே நெருக்கமான உறவு காணப்படுகின்றது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவு உரு வாக்கப்பட முன் இது வலிகாமம் மேற்குப் பிரிவின் கீழ் இருந்தது.

1960 இற்குப் பின் வலிகாமம் தென்மேற்குப் பிரிவின் ஒரு பகுதி வட்டுக் கோட்டைத் தொகுதியின் கீழும் இன்னொரு பகுதி மானிப்பாய் தொகு தியின் கீழும் இதன் வடபகுதி காங்கேசன்துறைத் தொகுதியின் கீழும் இருந்தன.

தற்பொழுது இதேமாதிரியான ஒழுங்கைச் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. இத் தேர்தல் தொகுதிக்குள் அடங்கும் பிரிவு களும் மக்கள் தொகையும் பின்வருமாறு,


| பிரிவு | மக்கள் தொகை |
|---|---|
| காரைநகர் பிரதேச செயலகப் பிரிவு | 9576 |
| வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப் பிரிவு | 46438 |
| வலிகாமம் தென்மேற்கு பிரதேச<br>செயலகப் பிரிவில் அடங்கும்<br>கிராம அதிகாரி பிரிவுகள் | |
| ஜே/131 சாவற்கட்டு | 1713 |
| ஜே/132 உயரப்புலம் | 3466 |
| ஜே/133 ஆனைக்கோட்டை | 3810 |
| ஜே/134 நவாலி வடக்கு | 2652 |
| ஜே/135 நவாலி கிழக்கு | 1491 |
| ஜே/136 நவாலி தெற்கு | 1645 |
| ஜே/141 சண்டிலிப்பாய் வடக்கு | 1977 |
| ஜே/142 சண்டிலிப்பாய் மத்தி | 2066 |
| ஜே/143 சண்டிலிப்பாய் மேற்கு | 1274 |
| ஜே/144 மாகியப்பிட்டி | 1801 |
| மொத்தம் | 77909 |

பின்வருமாறு,

வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியின் மக்கள் தொகை 77909 ஆகும்.

## கோப்பாய்- மானிப்பாய் தேர்தல் தொகுதி

மாவட்டத்தில் மக்கள் தொகை குறைந்ததால் முன்னைய மானிப்பாய் தேர்தல் தொகுதியையும் உடுப்பிட்டி தேர்தல் தொகுதியையும் முழுமையாக நிர்ணயம் செய்ய முடியாதுள்ளது.



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

மேலும் உடுப்பிட்டிப் பிர தேசத்தினதும் கோப்பாய் பிர தேசத்தினதும் இடவமைவு காரணமாக கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவை இரண்டா கப் பிரித்து கோப்பாயை மானிப் பாயு டனும் அச்சுவேலியை உடுப் பிட்டிப் பிரதேசத்துடன் இணைத்து இரு தொகுதிகளை உருவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கோப்பாய்- மானிப்பாய் தேர்தல் தொகுதி கோப்பாய்- மானிப்பாய் வீதியின் இரு பக்க முள்ள குடியிருப்புக்க ளைக் கொண்டுள்ளது.

இக்குடியிருப்புக்கள் நகராக்கப்பட்ட பகுதிகளாகவும் கிராம- நகர விளிம்புப் பகுதிகளாகவும் உள்ளன.

இத் தொகுதி கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், உரும்பிராய், ஊரெழு, நீர்வேலி, உடுவில், இணுவில், தாவடி, சுதுமலை, மானிப்பாய் ஆகிய குடியிருப்புக்களை உள்ளடக்கி யதாக இருக்கும். இத்தேர்தல் தொகுதிக்குள் அடங்கும் பிரிவும் மக்கள் தொகையும் பின்வருமாறு,

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குள் வரும் கிராம அதிகாரி பிரிவுகள், வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் அடங் கும் கிராம அதிகாரி பிரிவுகள், வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் அடங் கும் கிராம அதிகாரி பிரிவுகள். இத்தொகுதியின் மக்கள் தொகை 74702 ஆகும். இப்பிரிவுகளின் குடித்தொகை விபரம் திங்கள் வெளிவரும். (தொடரும்)

# நல்லாட்சி மீது நம்பிக்கை வைத்த முஸ்லிம்களுக்கு பெரும் ஏமாற்றம்

## பிரதி அமைச்சர் பைஸல் கவலை

(கொழும்பு)

நல்லாட்சி அரசின் மீது நம்பிக்கை கொண்டிருந்த முஸ்லிம் மக்கள், பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என பிரதி சுகாதார அமைச்சர் பைஸல் ஹாசிம் கவலையுடன் தெரிவித்துள்ளார். முஸ்லிம்களின் நம்பிக்கையினையும் பொறுமையினையும் மதித்து, முஸ்லிம்கள் மீதான இனவாத செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.



நாடாளுமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற, நீர்ப்பாசன மகாவலி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நல்லாட்சி அரசிற்கு 98 வீதமான முஸ்லிம்கள் வாக்களித்துள்ளனர் எனக் குறிப்பிட்ட பைஸல் ஹாசிம், கடந்த ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்பியதில் பெரும் பங்குண்டு என்றும் சுட்டிக் காட்டினார்.

எனினும், காலி ஜிந்தோட்டை உள்ளிட்ட ஆறு இடங்களில் முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களது வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட உடைமைகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இவற்றை தடுத்து நிறுத்தி, சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் பாதுகாப்புத் தரப்பினர் முன்னிலையிலேயே இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றதென குற்றஞ்சாட்டிய பைஸல் ஹாசிம், இது முஸ்லிம் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளால் எதிர்காலத்தில் முஸ்லிம் மக்களும் தீர்வுக்காக ஐ.நாவை நோக்கி செல்லும் நிலை ஏற்படுமெனவும் தெரிவித்தார். (இ-7)

## நீண்ட இழுபறிக்குப்பின் மட்டு.மாவட்ட அரச அதிபராக உதயகுமார் நியமனம்

(ஏறாவூர்)

நீண்ட இழுபறிக்குப் பின்னர் மட்டக்களப்பு மாவட்ட புதிய அரசாங்க அதிபராக மாணிக்கம் உதயகுமார் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை நேற்று வியாழக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த் மற்றும் உதவி மாவட்டச் செயலாளர் ஏ. நவேஸ்வரன், பிரதம கணக்காளர் எஸ். நேசராஜா, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர். நெடுஞ்செழியன், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றி வந்த சறோஜினிதேவி சார்ள்ஸ் சுங்க திணைக்கள பணிப்பாளராக அமைச்சரவையினால் 26.09.2017ல் நியமிக்கப்பட்டிருந்தார்.

சறோஜினிதேவி பதவி உயர்வு பெற்றுச் சென்றதையடுத்து திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் புஷ்பகுமார் பதில் கடமைக்காக மட்டக்களப்பு அரச அதிபராக தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் வெற்றிடத்திற்கு கடந்த 2 மாதங்களாக நியமனம் வழங்கப்படாதிருந்து வந்த நிலையில் கடந்த வாரம் அமைச்சரவையின் அங்கீகாரத்தினை அடுத்து உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரால் நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்டச்செயலாளராக உதயகுமார் நியமிக்கப்பட்டார்.

மட்டக்களப்பிற்கு புதிதாக அரச அதிபராக நியமனம் பெற்ற நிர்வாக சேவையின் விசேட தரத்தினைச் சேர்ந்த மாணிக்கம் உதயகுமார் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பிரதேச செயலகப்பிரிவுகளில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றியுள்ளதுடன், கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளராகவும், மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளராகவும், பின்னர் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டுமான சமுதாய அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளராகவும் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நாவலப்பிட்டியில் மலைப்பாம்பு



(நாவலப்பிட்டி)

நாவலப்பிட்டி - வெலிகம்பொல பிரதேசத்தில், சுமார் 10 அடி நீளமான மலைப்பாம்பு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டமையால் அப்பகுதியிலுள்ள மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அப் பகுதியில் இருந்த பயிர் நிலம் ஒன்றிற்கு தண்ணீர் பாய்ச்சும் இடத்தில் இருந்த மரத்தின் அருகில் குறித்த பாம்பு மறைந்திருந்தமை பிரதேச மக்கள் கண்டுள்ளனர்.

இதனையடுத்து அதனைப் பிடித்து நல்லதண்ணி வன ஜீவராசிகள் திணைக் களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, அண்மைக்காலமாக, வீட்டில் வளர்க்கப்பட்ட செல்லப் பிராணிகள் மாயமானதாக. அப் பகுதியிலுள்ள மக்கள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தாய்,மகன் படுகொலை குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை கோரி ஆர்ப்பாட்டம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு -ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள சவுக்கடிக் கிராமத்தில் கடந்த ஒக்டோபர் 18ஆம் திகதி இடம்பெற்ற இளம்தாய் மற்றும் மகன் ஆகியோரைப்படுகொலை செய்தவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் குற்றவாளிகளுக்கு ஆதரவாக எந்தவொரு சட்டத்தரணிகளும் ஆஜராக வேண்டாம் எனக்கோரியும் பிரதேச மக்கள் நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

சவுக்கடியில் பிரதான சந்தேக நபரது வீட்டிற்கு முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பிரதேச வாசிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



குற்றவாளிகளை காப்பாற்றும் வகையில் எந்தவொரு சட்டத்தரணியும் ஆஜராகக் கூடாது, சந்தேக நபர்களில் ஒருவரான சில்வெஸ்டரின் வீட்டினை விற்று அவரை காப்பாற்றுவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. அவரது வீட்டை எந்தவொரு இனத்தவரும் விலைக்கு வாங்கக் கூடாது. குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சவுக்கடி முருகன் கோயில் வீதியைச் சேர்ந்த மதுவந்தி பீதாம்பரம், அவரது மகனான பீதாம்பரம் மதுர்ஷன் ஆகியோர் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த நிலையில் கடந்த மாதம் தீபாவளித்தினத்திற்கு முதல் நாள் இரவு கொள்ளையர்களினால் அடித்து படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் சவுக்கடி பிரதேசத்தைச்சேர்ந்த ஆட்டோ சாரதி மற்றும் யாழ்.கொடிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவ்வீட்டில் கொள்ளையிட்டு யாழ்ப்பாணத்தில் அடகு வைக்கப்பட்ட தங்க ஆபரணங்களையும் மற்றும் சவுக்கடி காட்டில் காணப்பட்ட உடைந்த கோடரியொன்றையும் பொலிஸ் புலனாய்வுப்பிரிவினர் மீட்டுள்ளனர்.

இப்படுகொலையின் பிரதான இரு சந்தேக நபர்கள் படுகொலை இடம்பெற்ற வீட்டில் கொள்ளையடிக்கப்பட்ட தங்க ஆபரணங்களுடன் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இலஞ்சம் பெற முயற்சித்த விவசாய அதிகாரிகள் கைது

(கொழும்பு)

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் உள்ளிட்ட இரு நபர்கள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் போகுந்தர விவசாய சேவை மத்திய நிலையத்தில் கடமையாற்றும் அதிகாரி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வயல் காணியொன்றை நிரப்புவதற்கு சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருப்பதற்காக நபரொருவரிடம் 20000 ரூபா இலஞ்சம் பெற்றதாக குறித்த அதிகாரி மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குறித்த தொகையில் 10000 ரூபாவினை பெறும் வேளையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட சந்தேக நபர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# தந்தை சொன்ன சொல்



"யாரங்கே? இந்த அமைச்சரைப் பிடித்து விலங்கிடுங்கள்" என்று கட்டளையிட்டவர் மணிவண்ணனைப் பார்த்து "இளைஞனே! இன்னும் இவர்களின் சதியைப் பற்றிய உண்மைகள் தெரியுமா?" என்று கேட்டார்.

அப்போதும் எதுவும் புரியாத நிலையிலும் புன்னகையுடன் "எல்லாம் தெரியும்" என்று பதில் அளித்தான் மணிவண்ணன். உடனே கையில் விலங்குடன் நின்றிருந்த அமைச்சர் மன்னனின் காலில் விழுந்தார்.

"அரசே, என்னை மன்னித்து விடுங்கள். அயல் நாட்டவரின் ஆசை வார்த்தைகளுக்கு அடிமையாகி அவன் சொற்படி தங்களைக் கொலை செய்யவும் திட்டமிட்டேன். என்னை மன்னியுங்கள் என்று கதறினார்".

மன்னர் அந்தத் திருடர்களையும் அமைச்சரையும் சிறையில் அடைத்தார்.

மணிவண்ணனை நோக்கி "இப்போதாவது உன் பெயர் என்ன? நீ யார்? என்பதைக் கூறு" என்றார். மணிவண்ணன் அப்போதுதான் தன்னைப் பற்றிய உணர்வு பெற்றான்.

திகைத்து நின்றிருந்த தன் நண்பர்களிடம் என்ன ஆயிற்று என்றான் மெதுவாக. "நன்றாக மாட்டிக் கொண்டோம்" என்றான் அந்த நண்பன் நடுங்கியபடியே. மணிவண்ணனோ சமாளித்து மன்னர் கேட்ட கேள்விக்கு பதில் கூறி பணிவுடன் நின்றான்.

"மணிவண்ணா, சரியான சமயத்தில் எனக்கு உதவி செய்தாய். சூழ்ச்சியைத் தெரிந்து கொண்டு எம்மைக் காப்பாற்றி இந்த நாட்டுக்குப் பெரிதும் உதவி செய்துள்ளாய். அதற்காக உனக்கு பதவி தரப் போகிறேன். உனக்கு அரசியல் சட்டங்கள், போர்முறை முதலியன தெரியுமல்லவா?" வழக்கம் போல தெரியுமா? என்றால் தெரியும் என்று சொல்வதாய் முடிவு செய்து கொண்டவனல்லவா?

எனவே எல்லாம் தெரியும் என்று வழக்கமான பதிலையே கூறினான்.

மன்னர் மனம் மகிழ்ந்து "மணிவண்ணா, இனி இந்த நாட்டின் அமைச்சர் நீதான். எனக்கும் இந்த நாட்டுக்கும் நீதான் இனி துணையாக இருக்க வேண்டும்" என்றவர் அமைச்சருக்கான தலைப்பாகையைத் தலையில் சூட்டினார். சபை கலைந்தது.

மணிவண்ணன் ஓடி வந்தான் குடிசைக்கு. தந்தையின் காலில் பணிந்தான். அனைத்தையும் அறிந்த கோவிந்தன் மிகவும் மகிழ்ந்தான். இனி மகன் பொறுப்பானவனாகிவிடுவான் என்பதே அந்த மகிழ்ச்சிக்குக் காரணம்.

மணிவண்ணன் தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதை உணர்ந்து கொண்டான்.

அன்று முதலே தன் பதவிக்கேற்றபடி தன்னைத் தயார்படுத்திக் கொள்ள அனைத்தையும் கற்கத் தொடங்கினான். சிறந்த அமைச்சர் எனவும் சிறந்த மகன் எனவும் புகழோடு வாழ்ந்தான்.

**(முற்றும்)**

## 11.2017 24 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1639- ஜெரிமையா ஹொரொக்ஸ் என்பவர் முதன் முதலாக வெள்ளிக் கோள் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் செல்வதை அவதானித்தார்.
- 1859-சார்ல்ஸ் டார்வின் உயிரங்களின் தோற்றம் நூலை வெளியிட்டார். இதன் பிரதிகள் அனைத்தும் முதல் நாளிலேயே முழுவதுமாக விற்பனையாகின.
- 1914- முசோலினி இத்தாலிய சோசலிசக் கட்சியில் இருந்து விலக்கப்பட்டார்.
- 1917- விஸ்கொன்சின் மாநிலத் தலைநகர் மில்வாக்கியில் காவல்துறை தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 10 பேர் கொல்லப்பட்டனர்.
- 1922- துப்பாக்கி ஒன்றை சட்டவிரோதமாக வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஐரியக் குடியரசு இராணுவத்தைச் சேர்ந்த எழுத்தாளர் ரொபேர்ட் ஏர்ஸ்கின் சைல்டேர்ஸ் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கக் கடற்படைக் கப்பல் டராவா என்ற இடத்தில் மூழ்கடிக்கப்பட்டதில் 650 பேர் கொல்லப்பட்டனர்.
- 1944- இரண்டாம் உலகப் போர்: டோக்கியோ நகர் மீது முதற்தடவையாக அமெரிக்க விமானங்கள் குண்டுகளைப் போட்டன.
- 1966- சிலோவாக்கியாவில் பல்கேரிய விமானம் ஒன்று வீழ்ந்ததில் 82 பேர் கொல்லப்பட்டனர்.
- 1992- மக்கள் சீனக் குடியரசில் சீன விமானம் ஒன்று வீழ்ந்ததில் 141 பேர் கொல்லப்பட்டனர்.
- 1992- யாழ்ப்பாணம், பலாலி வான்படைத் தளத்தின் கிழக்குப் பகுதி இராணுவ வேலி விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டது.
- 2002- ரவி வர்மாவின் யசோதையும் கிருஷ்ணனும் ஓவியம் டில்லியில் 56 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.
- 2006-சிங்கள நாளிதழான "மௌபிம" பத்திரிகையின் தமிழ்ப் பத்திரிகையாளரான முனுசாமி பரமேஸ்வரி, பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டார்.

### பிறப்புகள்

- 1784- சக்கரி தைலர், அமெரிக்காவின் 12வது அரசுத் தலைவர் (இ. 1850)
- 1939- எஸ். ஏ. ஐ. மத்தியு, இலங்கைத் தமிழ்ப் பன்னூலாசிரியர் (இ. 2016)
- 1955- இயன் போத்தம், ஆங்கிலேயத் துடுப்பாளர்
- 1961- அருந்ததி ராய், இந்திய எழுத்தாளர்
- 1968-அநுரகுமார திஸாநாயக்க, இலங்கை அரசியல்வாதி

### இறப்புகள்

- 1675- குரு தேக் பகதூர், இந்திய ஆன்மீக குரு (பி. 1621)
- 1953- ராமச்சந்திர தீட்சிதர், தமிழக இந்தியவியலாளர் (பி. 1896)
- 1973- ஏ. எம். ஏ. அசீஸ், இலங்கை கல்வியாளர், அரசியல்வாதி, எழுத்தாளர் (பி. 1911)
- 2004- ஆர்தர் ஹெய்லி, ஆங்கிலேய-கனேடிய எழுத்தாளர் (பி. 1920)
- 2009-சமாக் சுந்தரவேஜ், தாய்லாந்தின் 25வது பிரதமர் (பி. 1935)
- 2012- வி. என். சிதம்பரம் திரைப்படத் தயாரிப்பாளர்
- 2014- முரளி தியோரா, இந்திய அரசியல்வாதி (பி. 1937)

### சிறப்பு நாள்

- பழவளர்ச்சி நாள்
- ஆசிரியர் நாள் (துருக்கி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 220 | 120 | 180 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 800 | 800 |
| தக்காளி | 140 | 150 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 40 | 80 |
| கோவா | 200 | 150 | 200 | 140 |
| கரட் | 250 | 200 | 280 | 120 |
| பூசணி | 100 | 80 | 100 | 60 |
| புடோல் | 120 | 90 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 120 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 450 | 380 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 160 | 140 |
| பாகற்காய் | 600 | 350 | 400 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 150 | 160 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 80 |
| பயற்றங்காய் | 250 | 200 | 200 | 300 |
| லீக்ஸ் | 250 | 200 | 280 | 200 |
| பீற்றூட் | 150 | 120 | 200 | 120 |
| கறிமிளகாய் | 300 | 250 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 100 | 200 | 200 | 400 |
| போஞ்சி | 200 | 200 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 180 | 120 | 180 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 50 | 60 |
| தேசிக்காய் | 50 | 100 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 80 | 60-100 | 100 |
| இராசவள்ளி | – | 60 | – | – |
| வெங்காயப்பூ | 300 | – | 200 | – |
| முள்ளங்கி | 120 | 80 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 60 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 30 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 200 | 70 | 80 | 80 |

வாழ்க்கை சிலருக்கு நாடகமாகத் தோன்றுகிறது.
நாடகம் சிலருக்கு வாழ்க்கையாகத் தோன்றுகிறது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கருத்துக்கணிப்பாக அமையப்போகும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்

உள்ளூராட்சித் சபைத் தேர்தலுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. எனினும் இத்தடை இடைக்காலமேயன்றி நிரந்தரமானதல்ல.

ஆகையால் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஆயத்தங்களில் இறங்கியுள்ள அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தொடர்ந்தும் தமது ஆயத்தப் பணிகளை முன்னெடுக்கும் என்பது உறுதி.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான அறிவிப்பு என்பதே காலதாமதத்துடன்தான் வெளிவந்தது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிக்காலம் காலாவதியானகையோடு தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

எனினும் தென்பகுதி அரசியலில் இருக்கக்கூடிய ஸ்திரத்தன்மையற்ற சூழ்நிலை உள்ளூராட்சி சபைத் தேர்தலை பின்தள்ளியது.

தேர்தலை பின்தள்ளுவதால் நல்லாட்சிக்கு சாதகம் கிடைக்கும் என்று கருதப்பட்டாலும் தேர்தல் திணைக்களமும் அரசியல் கட்சிகளும் அதற்குக் கால அவகாசம் கொடுக்கத் தயாராக இல்லை.

இந்நிலையில் தேர்தலை நடத்தியாக வேண்டும் என்ற கட்டாயத்துக்கு அரசு வருகிறது. எனினும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை கொண்ட மனு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் உள்ளூராட்சி சபைத்தேர்தலுக்கு இடைக்காலத் தடையை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதால் ஆறுதலும் திருப்தியும் அடையக்கூடியவர்களாக ஆளும் தரப்பையே நாம் பார்க்க முடியும். தேசிய அரசு என்ற பெயரோடு நல்லாட்சி நகர்ந்தாலும் அவற்றின் செயற்றிறன் போதாது என்பது பொதுமக்களின் கருத்து.

ஆக, நல்லாட்சி மீது தென்பகுதி மக்கள் கொள்ளும் அதிருப்தி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே சாதகமாக அமையும் என்பதும் தெரிந்த உண்மை.

அதேவேளை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகக்கூறி அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கு முன்னேற்பாடாக முன்மொழியப்பட்ட இடைக்கால வரைபு வெளிவந்திருக்கக்கூடிய இந்நேரத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்து முடிந்தால் தேர்தல் முடிவுகள் பல விடயங்களுக்கு சார்பாகவும் எதிராகவும் அமையும் என்பது திண்ணம்.

அந்த வகையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தென்பகுதி, மகிந்த ராஜபக்ஷவுக்கு வெற்றியாக அமைந்தால் அதன்முடிவு அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கு சிங்கள மக்கள் ஆதரவல்ல என்பதாக அந்த முடிவு பார்க்கப்படுவதுடன்,

ஜனாதிபதி மைத்திரி - பிரதமர் ரணில் ஆகியோரின் நல்லாட்சி என்ற நாடகத்தை முடிவுறுத்த வேண்டும் என்று மக்கள் கூறுவதாகவும் கருதப்படும். இது தென்பகுதி நிலைமையாக இருக்க,

தமிழர் தாயகமாகிய வடக்குக் கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெறுமாக இருந்தால் அது வேறொருவிதமாக அமையும். அதாவது நடைபெறப்போகும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால் அது,

▶ இடைக்கால வரைபை தமிழ் மக்கள் தங்கள் தீர்வாக ஏற்றுக் கொள்கின்றனர்.

▶ சர்வதேச விசாரணை தேவை இல்லை என்பதை தமிழ் மக்கள் அங்கீகரித்துள்ளனர்.

▶ தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாமல் இருப்பது தொடர்பில் தமிழ் மக்கள் எந்தவித மனவருத்தமும் அடையவில்லை.

▶ தமிழர் தாயகத்தில் இடம்பெறும் சட்ட விரோத சிங்கள குடியேற்றங்கள், பௌத்த விகாரைகளின் நிர்மாணங்கள் என்பவற்றை தமிழ் மக்கள் எதிர்க்கவில்லை என்பதுடன் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதற்கு தமிழ் மக்கள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

என்பதான பல்வேறு விடயங்களை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வதாகவும் நிலைமை அமையும்.

ஆக, உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்று அதன் முடிவுகள் வெளிவரும்போது மேற்குறிப்பிட்ட விடயங்கள் பற்றியும் தமிழ் மக்கள் சிந்தித்தாக வேண்டும் என்பதே இங்கு ஈண்டு கவனிக்கத்தக்க விடயமாகும்.

# வவுனியாவில் முஸ்லிம் வர்த்தக நிலையம் எரிக்கப்பட்டமை சாதாரண விபத்து சம்பவமே

## வடக்கு மாகாண சபையில் விவாதம்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் முஸ்லிம் மக்களுடைய வர்த்தக நிலையங்கள் எரிக்கப்பட்டமை சாதாரண விபத்து சம்பவமே, அது திட்டமிட்ட செயலல்ல என தமிழரசு கட்சியின் உறுப்பினர்களான சுகிர்தன், சத்தியலிங்கம் மற்றும் எதிர்க கட்சி தலைவர், சிறிலங்கா சுதந்திர கட்சியின உறுப்பினர் ஜெயதிலக்க ஆகியோர் தெரிவித்திருந்தனர். மேலும் முஸ்லிம் மக்களுக்கு ஆதரவாக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை கடுமையாக எதிர்த்திருந்தனர்.

வடக்கு மாகாண சபையின 110ஆவது அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன போது அண்மைக் காலங்களாக சிறுபான்மை இனங்களுககு எதிராக நடைபெற்று வரும் திட்டமிட்ட வன்முறை சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும். குறிப்பாக ஜிந்தோட்ட மற்றும் வவுனியாவில் நடைபெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான திட்டமிட்ட சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை,

அவைத்தலைவர் சிவஞானம் முன்மொழிந்திருந்தார். இதன்போது எழுந்த வவுனியா மாவட்ட தமிழரசு கட்சியின் வடக்கு மாகாண சபையின் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ப.சத்தியலிங்கம், குறித்த சம்பவத்தை திட்டமிட்ட சம்பவம் என்று கூறமுடியாது. குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதற்கிடையில் நாங்கள் வடக்கு மாகாண சபையல் இவ்வாறானதொரு தீர்மானத்தை இயற்றுவது நல்லதல்ல.

வவுனியாவில் உள்ள முஸ்லிம்களின் வர்த்தக நிலையத்தில் தற்செயலாக நடைபெற்ற மின்னொழுக்கு காரணமாக குறித்த விபத்து சம்பவம் நடைபெற்றிருக்கலாம். இதற்கு முன்னரும் வேறு சிலருடைய கடைகள் வவுனியாவில் எரிந்துள்ளன. ஆனால் அவை பெரிதுபடுத்தப்படாமல் இந்த சம்பவம் மாத்திரம் பெரிதுபடுத்தப்படுகின்றது என உறுப்பினர் சத்தியலிங்கம் பிரேரணை கொண்டுவருவதற்கு எதிர்ப்பு வெளியிட்டார்.

இதன் பின்னர் பேசிய எதிர்க்கட்சி தலைவர், நாங்கள் அவசரமாக பிரேரணைகளை கொண்டு வரக் கூடாது. ஜிந்தோட்டையில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் என்ன நடைபெற்றது என எங்களுக்கு தெரியாது. வேறுவிதமான கருத்துக்களும் உள்ளன. இதே போன்று வவுனியாவிலும் வேறுவிதமான கருத்துக்களும் உள்ளன. ஆகையால் ஆராயாமல் ஒரு பக்க சார்பாக பிரேரணைகளை கொண்டு வர கூடாது என எதிர்க்கட்சி தலைவரும் பிரேரணைக்கு ஆதரவு அளிக்க முடியாது என கூறினார்.

எனினும் இவர்களுடைய கருத்தை மறுத்து பேசிய அவைத்தலைவர் சிவஞானம். இரண்டு நாளுக்கு பின்னர் வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாக்கப் பட்டுள்ளன. ஆகவே இது திட்டமிட்ட செயல்தான். மற்றும் நாங்கள் இதுவரை காலமும் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளில் பத்திரிகை செய்திகளை பார்த்தே பிரேரணை நிறைவேற்றியிருந்தோம். நேரில் சென்று ஆராய்ந்து எதனையும் நிறைவேற்றவில்லை. ஆகவே சம்பவம் நடைபெற்றவுடன் பிரேரணை நிறைவேற்றப்படத்தான் வேண்டும்.

தேவையற்ற விதண்டாவாதம் தேவையில்லை என அவைத்தலைவர் கூறினார். இந்த குழப்பம் நீடித்து செல்ல முதலமைச்சர் தலையிட்டு குறித்த பிரேரணையை அடுத்த அமர்வுக்கு கொண்டு வரமுடியும் என ஆலோசனை கூறினார். இதனை அடுத்து குறித்த பிரேரணையை அடுத்த அமர்வுக்கு ஒத்திவைப்பதாக அவைத் தலைவர் அறிவிப்பு செய்தார்.(ம-4)

### அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## காசிக்குச் சென்றால் ஏதாவது ஒன்றை விட்டுவரவேண்டும், ஏன்?

இல்லற வாழ்க்கையினை முடித்த தம்பதிகள் காசி, ராமேஸ்வரம் என்று புனிதத் தலங்களை நோக்கி செல்வார்கள்.


இந்துக்களின் புனிதத்தலமாக விளங்கும் காசியில் உள்ள புண்ணிய நதியான கங்கையில் நீராடி விட்டு, முன்னோர்களுக்காக பிண்டம் வைத்து வேண்டிக் கொள்வார்கள்.

ஏனெனில் இந்த கங்கையில் நீராடினால், தாங்கள் செய்த பாவங்கள் அனைத்தும் தொலைந்து விடும் என்பது இந்து சமயத்தினரின் நம்பிக்கையாக உள்ளது.

அந்த நம்பிக்கையில், கங்கையில் நீராடிவிட்டுப் புது மனிதனாக வெளிவரும் போது, மீண்டும் எதன் மீதும் ஆசைப்படக் கூடாது என்று தன்னிடம் உள்ள பழைய பொருட்கள் மட்டும் மனதில் உள்ள கெட்ட எண்ணங்களை அங்கயே விட்டு வந்து விடுவார்கள்.

அதன் பின் இனி கடவுள் மட்டுமே, என்று தன் மனதில் எப்போதும் தியானித்து, பல புதிய உணர்வுகளோடு வீடு திரும்புவார்கள்.

அதனால் தான் காசி போன்ற புனித தலங்களுக்கு சென்று விட்டு வரும் போது ஏதாவது ஒன்றை கங்கை நீரில் விட்டு வர வேண்டும் என்று கூறுகின்றனர்.



### ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## தியாகம்

எதை நீங்கள் வேண்டும் வேண்டும் என்று பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறீர்களா? அதை விட்டுக் கொடுப்பதுதான் தியாகம். எதனால் உனக்கு மகிழ்ச்சி கிடைக்கிறது என்று அதன் மேல் பற்றுக்கொண்டுள்ளாயோ அதை விட்டுக் கொடுப்பது அதைவிட நன்மை தரக்கூடிய பெரியதொன்றை உனக்குத் தரும்.

தியாகம் வாழ்க்கையில் சக்தியைத் தருகிறது. தியாகமற்ற வாழ்க்கை தேக்கமுள்ள வாழ்க்கை ஒரு உயர்ந்த நிலையை நீங்கள் அடைய தியாகம் என்பது பெரும் தூண்டல்.

தியாகம் வாழ்க்கையை மந்தப்படுத்துவதாகவும் வாழ்க்கையில் மகிழ்ச்சி. இல்லாமல் செய்வதாகவும் மக்கள் எண்ணுகின்றார்கள். உண்மையில் வாழ்க்கையின் பெருமையை உணர்த்துவதே தியாகம் ஆகும்.

நீ வாழ்க்கையில் எந்தளவுக்கு தியாகம் செய்கின்றாயோ அந்தளவுக்கு அது உன் பெருந்தன்மையை காட்டுகிறது. நீ துன்பத்தில் இருந்து வெளிவரத் துணை செய்கின்றது.

தியாகமற்ற வாழ்க்கையினால் ஒரு பெருமையும் பயனும் இல்லை.

தொடர்ந் ஆர்வம், எதையும் சுவாரசியத்துடன் செய்யும் உணர்வு, சக்தி, மகிழ்ச்சி எல்லாமே தியாகத்துடன் தொடர்புள்ளவையே.

கேள்வி: நான் எவ்வளவு தியாகம் செய்திருக்கின்றேன்? என்று ஒருசிலர் குறைபடுகின்றார்கள்.

பதில்: அது நல்லதே. தியாகம் பற்றிய எண்ணமே சக்தியைத் தருகின்றது. குறைபடுவதற்கு இது அவர்கள் தங்களைத் தாங்களே பழித்துக்கொள்வதிலிருந்து காப்பாற்றுகிறது. இல்லையெனில், அவர்கள் மிகவும் மனச்சோர்வு அடையக்கூடும்.

என்றுமே தியாகத்தினால் பலன் கிடைக்காமல் போனதில்லை. தியாகம் இன்றி அன்பில்லை, அறிவில்லை, உண்மையான மகிழ்ச்சி இல்லை.

தியாகம் உன்னை புனிதனாக்குகிறது.

நீ புனிதனாவாயாக!

### இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

## வியாபாரத்தில் நேர்மை

✦ விருந்தில் எல்லோரும் உண்டு முடிவடைவதற்குள், உணவில் இருந்து கையை எடுத்து விடாதீர்கள்.

✦ உங்கள் சொற்படி நடக்கும் ஊழியர்களுக்கு, நீங்கள் உண்பதையே கொடுங்கள். நீங்கள் உடுத்துவதையே உடுத்தச் செய்யுங்கள்.

✦ முதியோருக்கு மரியாதை செலுத்துதல் இறைவனுக்கு மரியாதை செலுத்துவதாகும்.

✦ மறதி என்பது அறிவின் துரதிர்ஷ்டம். அறிவைத் தகுதியற்றவரிடம் உபயோகிப்பது அதனையே இழப்பதற்கு ஒப்பாகும்.

✦ தன் பிழையை உணர்ந்து உண்மையாகவே வருந்துபவன், குற்றம் இழைக்காதவனுக்கு ஒப்பாவான்.

✦ வியாபாரத்தில் உண்மையைச் சொன்னால் அபிவிருத்தி ஏற்படும். பொய் சொன்னால் வியாபாரம் குறையும்.

✦ சகோதரனின் வியாபாரத்தைப் போட்டியிட்டுக் கொண்டு கெடுக்காதீர்கள்.

- நபிகள் நாயகம்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்ககங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ் பிரதேச த்தில் நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக் கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, பனை வள ஆராய்ச்சி நிலையம், கைதடி யுனைற்ரெட் மோட்டர்ஸ், கைதடி வட மாகாண சபை அலுவலகம், வராத்துப் பளை, புனிதநகர், திக்கரி, கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, பருத்தித்துறை வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், 3ஆம் குறுக்குத் தெரு பிரதேசம். கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில முள்ளியவளை ஒரு பகுதியிலும் வவுனியா பிரதேசத்தில பம்பைமடு கிராமம், கற்பகபுரம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# இந்தியாவை பழிதீர்க்க இலங்கையும் இலங்கையைப் பழி தீர்க்க இந்தியாவும்

## தயார் நிலையில் இரண்டாவது ஆட்டம் இன்று



இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து 3 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டி, மூன்று 20 ஓவர் போட்டியில் விளையாடுகிறது.

இரு அணிகளும் மோதிய முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது. 2-வது டெஸ்ட் போட்டி மராட்டிய மாநிலம் நாக்பூரில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

கொல்கத்தாவில் நடந்த முதல் டெஸ்டில் முதல் 2 நாட்கள் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இப் போட்டியில் முதல் இன்னிங்சில் சொதப்பிய இந் திய அணி 2-வது இன்னிங்சில் பேட்டிங், பந்து வீச்சில் அசத்தியது.

வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் புவனேஸ்வர் குமார், முகமது ஷமி, உமேஷ் யாதவ் ஆகியோர் சிறப்பாக செயற்பட்டனர். முதல் டெஸ்டில் 8 விக்கெட் வீழ்த்திய புவனேஷ்வர் குமார் திருமணம் காரணமாக எஞ்சியுள்ள 2 டெஸ்ட் போட்டிகளில் இருந்து விலகி உள்ளார். அவருக்கு பதில் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா இடம் பெறுவார்.

இதேபோல் சொந்த காரணத்துக்காக நாக்பூர் டெஸ்டில் இருந்து மட்டும் தொடக்க வீரர் ஷிகார் தவான் விளையாடவில்லை. இதனால் முரளி விஜய் தொடக்க வீரராக களம் இறங்குகிறார்.

துடுப்பாட்டத்தில் விராட் கோலி, லோகேஷ், ராகுல், புஜாரா ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர். நடுத்தர வரிசையில் ரகானே சோபிக்கவில்லை. இதனால் அவர் திறமையை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

விக்கெட் கீப்பர் சகாவும் தனது பங்களிப்பை அளித்து வருகிறார். பந்துவீச்சில் புவனேஸ்வர் குமார் இடம் பெறாதது பாதிப்பு என்றாலும் முகமது ஷமி, உமேஷ் யாதவ், இஷாந்த் சர்மா ஆகியோர் நல்ல நிலையில் உள்ளதால் நம்பிக்கையுடன் களம் இறங்குகிறது. முதல் டெஸ்ட் போட்டியில் வேகப்பந்துக்கு சாதகமாக அமைக்கப்பட்ட ஆடுகளத்தில் சுழற்பந்து வீச்சாளர்கள் அஸ்வின், ஜடேஜா ஆகியோர் ஒரு விக்கெட் கூட வீழ்த்தவில்லை. மேலும் அவர்களுக்கு குறைந்த அளவிலேயே பந்துவீச வாய்ப்பு அளிக்கப்பட்டது.

முதல் டெஸ்டை போலவே இன்று தொடங்கும் 2-வது டெஸ்டிலும் வேகப்பந்து ஆடுகளத்தை அமைக்க வலியுறுத்தப்பட்டு இருக்கிறது. இதனால் அஸ்வின், ஜடேஜா ஆகியோரில் ஒருவர் கழற்றி விடப்பட்டால் தமிழகத்தை சேர்ந்த ஆல்-ரவுண்டர் விஜய் சங்கர் இடம் பெறலாம்.

நாக்பூர் டெஸ்டில் வெற்றி பெற்று தொடரில் முன்னிலை பெறும் ஆர்வத்தில் இந்தியா உள்ளது.

சண்டிமால் தலைமையிலான இலங்கை அணியில் சமர விக்ரம, கருணாரத்ன, திரிமானே, மத்யூஸ், டிக்வெல போன்ற துடுப்பாட்டக்காரர்கள் உள்ளனர். பந்து வீச்சில் லக்மல், ஷனகா, கெம்மேஜ், ஹேராத், பெறைரா ஆகியோர் இருக் கிறார்கள். இலங்கை அணி யும் இந்தியாவை வீழ்த்தி தொடரில் முன்னிலை பெறும் முனைப்பில் இருப்பதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## புலிக்குப் பிறந்தது பூனையாகுமா; சாதித்துக் காட்டிய சச்சின் மகன்



முன்னாள் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜுன் டெண்டுல்கர், U-19 Cooch Behar போட்டியில் ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இந்திய கிரிக்கெட்டின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜுன் டெண்டுல்கர். தனது தந்தையைப் போல துடுப்பாட்ட வீரராக இல்லாமல், சிறந்த பந்து வீச்சாளராக உருவாகி வருகிறார்.

இந்நிலையில், U-19 Cooch Behar கிண்ணப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. மும்பை மற்றும் மத்திய பிரதேச அணிகளுக்கு இடையே நடந்த போட்டி சமநிலையில் முடிந்தது.

இந்த போட்டியில், மும்பை அணியில் விளையாடிய சச்சினின் மகன் அர்ஜுன் டெண்டுல்கர், அற்புதமாக பந்து வீசி ஐந்து விக்கெட்டுக்களை சாய்த்தார்.

இதற்கு முன்பும் அர்ஜுன், இந்திய அணி பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது பந்து வீசியுள்ளார்.

சச்சின் டெண்டுல்கர் ஒரு பேட்டியில் தனது மகன் குறித்து கூறுகையில், என் மகன் அர்ஜுனின் மீது நிறைய சுமை உள்ளது.

என்னையும், அவனையும் ஒப்பிட்டு பேசுகிறார்கள், அவ்வாறு செய்யக்கூடாது.

எனது தந்தை ஒரு எழுத்தாளர், நான் கிரிக்கெட் வீரர், அதனால் என் விளையாட்டு மீது யாரும் விமர்சனம் செய்யவில்லை.

அர்ஜுனுக்கு என்று தனித் திறமை உள்ளது. அவனுடைய வாழ்க்கையில் நான் தேவையில்லாமல் தலையிட மாட்டேன், அவனுக்கு தேவைப் படும் போது மட்டுமே அறிவுரை வழங்குவேன்.

அவன் கிரிக்கெட்டை நேசிக்கிறான், எல்லா தந்தையைப் போலவும் நானும் அவனுக்கு அறிவுரை கூறுவேன் என தெரிவித்துள்ளார். (க)

## நேரத்தைக் கடத்தவே வம்பிழுத்தேன் இலங்கை அணி வீரர் அதிரடி



போட்டியின் போது நேரத்தை கடத்தவே விராட் கோலியிடம் வம்பிழுத்ததாக இலங்கை வீரர் டிக்வெல கூறியுள்ளார்.

இலங்கை - இந்தியா இடையில் சமீபத்தில் நடந்த முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது.

இதில் இரண்டாவது இன்னிங்சில் இலங்கை அணி 65 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டை பறிகொடுத்து தடுமாறியது.

இந்நிலையில் எஞ்சியுள்ள கடைசி சில மணி நேரங்களை கடத்த இலங்கையின் டிக்வெல நடுகளத்தில் துடுப்பெடுத்தாட தயாராகவில்லை என அடுத்தடுத்து சொல்ல பவுலர் ஷமி கடுப்பானார்.

இதே போல தொடர்ந்து செய்ய இந்திய அணி தலைவர் கோலி வெறுப்படைந்தார்.

இதனால் டிக்வெல, கோலி, சண்டிமால் ஆகியோரை அழைத்து நடுவர்கள் பேசினர்.

களத்தில் அப்படி ஏன் நடந்து கொண்டேன் என்பது குறித்து டிக்வெல கூறியுள்ளார்.

அவர் கூறுகையில்,

நான் சிக்சர் அடித்த போது லெக் சைடில் வெறும் 3 பீல்டர்கள் மட்டும் இருந்ததால் அதை அம்பயரிடம் தெரிவித்தேன்

அப்போது என்னிடம் தானாக வந்த கோலி அது அம்பயர் வேலை எனது வேலையில்லை என்றார்.

இது தான் நேரத்தை கடத்த சரியான வாய்ப்பு என அவருடன் வம்பிழுத்தேன். ஷமியும் இதில் சேர்ந்து கொண்டார்.

இந்த சம்பவத்தால் இந்திய அணி 3 அல்லது 4 ஓவர்கள் கூடுதலாக வீச முடியாமல் போனது. அது எங்களுக்கு இலாபமாக அமைந்தது என கூறியுள்ளார். (க)

## கோலியை வீழ்த்தினால் போதும் இந்தியாவின் கதை முடிந்துவிடும்



### முகமட் அமீர் தெரிவிப்பு

இந்திய அணியே விராட் கோலியை நம்பித்தான் உள்ளது என பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமட் அமீர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமீர் கூறுகையில், கோலியை ஆட்டமிழக்க செய்தால் 50 சதவிகிதம் வெற்றி பெற்று விடலாம் என பந்துவீச்சாளர்களுக்கு தெரியும்.

அதேபோல அவர் களத்தில் இருக்கும்வரை இந்திய கிரிக்கெட் அணி எவ்வளவு பெரிய இலக்கையும் 70- 80 சதவிகிதம் வெல்லும்.

அதுவும் இந்தியா-பாகிஸ்தான் போட்டி என்றால் பரபரப்பு அதிகமாகும் என தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக கோலி, தான் சந்தித்த பந்து வீச்சாளர்களில் அமீரே சிறந்தவர் என தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

## மாவீரர்களுக்கு...

இதேவேளை வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் மாகாண சபையின் அமர்வு அல்லாத பிறிதொரு நாளில் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக அறிய முடிகின்றது.

மாகாண சபையின் அமர்வில் அஞ்சலி செலுத்தினால் தெற்கில் உள்ளவர்கள் கொந்தளித்து விடுவார்கள் என்பதாலேயே மாகாண சபையின் அமர்வில் அஞ்சலி செலுத்தப்படவில்லை என உறுப்பினர் ஒருவர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். (ம-4)

## விரைவு படுத்த...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்கள்.

கல்வித் துறையில் டிஜிற்றல் மறுசீரமைப்புத் திட்டத்திற்கு இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக இந்தியப் பிரதமர் இதன் போது தெரிவித்துள்ளார்.

ஹைத்ராபாத்திலுள்ள இந்தியப் பிரதமரின இல்லத்தில் இந்தச் சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கல்வித் துறையில் மேற்கொள்ளவிருக்கும் டிஜிற்றல் மீறுசீரமைப்புகளுக்காக இந்தியா முழுமையான ஆதரவை வழங்கும். சகல பாடசாலை மாணவர்களுக்கும் ரப் கணனியை வழங்கும் முன்னோடி வேலைத்திட்டத்தை அமுல்படுத்தவும் இதற்குத் தேவையான தமிழ், சிங்கள மொழிகளிலான மென்பொருட்களை உருவாக்கவும் இதற்கான தகவல் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டத்தைத் தயாரிக்கவும் தமது நாடு உதவும் என்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இதன்போது அறிவித்துள்ளார்.

வலுசக்தி, உணவுப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் பின்பற்றப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றியும் இருதலைவர்களும் கவனம் செலுத்தினர்.

இந்து சமுத்திரத்தை சமாதான வலயமாக முன்னெடுத்துச் செல்லவும் சுதந்திரமான முறையில் கப்பல் போக்குவரத்தை மேற்கொள்வது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. இருநாடுகளும் இணைந்து நடைமுறைப்படுத்தவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக அமுல்படுத்துவது பற்றியும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. இலங்கை - இந்திய கூட்டு செயற்றிட்டத்தை துரிதமாக அமுல்படுத்தத் தயார் என்று நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றும் சேவைகளை இந்தியப் பிரதமர் பாராட்டிப் பேசினார்.

இலங்கையின் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சிறு மற்றும் குறு தொழில் உள்ளிட்ட துறைகளின் கட்டமைப்பு மற்றும் மேம்பாடு தொடர்பான அபிவிருத்திக்காக இந்திய அரசாங்கம்

2.63 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி வரைவு அமைக்கப்பட்டு அதில் இதுவரை 458 மில்லியன் டொலர்களை ஒதுக்கீடு செய்துள்ளது என்று இந்திய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளதுடன்

முன்னதாக, நேற்று காலை புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பித்து வைத்த 5 ஆவது உலக இணையவெளி கருத்தரங்கிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## இலங்கையில் சித்...

இலங்கை இராணுவத்தினர் தமிழர்களை முகாம்களில் தடுத்து வைத்து சித்திரவதைக்கு உட்படுத்துவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தும் நோக்கில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

சித்திரவதைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் அதிகாரி யஸ்மீன் சூகா, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டே ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளனர். (ம)

## வெவ்வேறு குற்ற...

முறையில் ஆற்று மணலை கடத்திச் சென்ற 3 உழவு இயந்திரங்களையும் மற்றும் 500 கிராம் கேரளக் கஞ்சா உட்பட அனுமதியின்றி விற்பனை செய்த அரச சாராயம் 3 போத்தலையும் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 6 சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 10 மணியில் இருந்து பிற்பகல் 3.30 மணி வரையிலான காலப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய கிளிநொச்சி, தருமபுரம் ஆகிய பொலிஸ் நிலையப் பிரிவுகளில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸார் முன்னதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பன்னங்கண்டி கிராம பகுதியில் வைத்து அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த 2 உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் 2 பேரையும் கைது செய்துள்ளனர்.

அதனையடுத்து, கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பரவிப்பாஞ்சான் சிவபுரம் கிராமத்தில் 500 கிராம் கேரளக் கஞ்சாவை தனது உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கல்லாறுக் காட்டுப் பகுதியில் இருந்து அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த உழவு இயந்திரத்தைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து, தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள வட்டக்கச்சி பகுதியில் அனுமதியின்றி அரச சாராயத்தை வீட்டில் வைத்து விற்பனை செய்த சந்தேக நபர் ஒருவரை 3 போத்தல் அரச சாராயத்துடன் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு 4 சம்பவங்களின் போதும், கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான சந்தேக நபர்கள் 6 பேரையும் கிளிநொச்சி, தருமபுரம் ஆகிய பொலிஸ் நிலையங்களில் மேல்திக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

## முதலமைச்சரிடம்...

இவ்விடயம் தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் விளக்கமளிக்குமாறு ஆளுநர் நேற்று கடிதம் மூலம் கோரியுள்ளார்.

முதலமைச்சரினால் பரிந்துரைக்கப்பட்டவர் தம் முன்னிலையில் இலங்கையின் அரசியலமைப்பிற்கு கட்டுப்படுவதாக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார் என்பது அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் அண்மையில் சிங்கள பாடசாலை ஒன்றில் தேசிய கொடி தொடர்பில் அவர் நடந்துகொண்ட விதம் தொடர்பாக அமைச்சரவை தலைவர் என்ற ரீதியில் விளக்கமளிக்குமாறும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த சம்பவம் தொடர்பான ஆவணங்கள் சிலவும் முதலமைச்சருக்கு ஆளுநரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம)

## இலங்கையை தாக்...

இலங்கையிலும், தென்னிந்தியாவின் கரையோரப் பகுதிகளிலும் பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அமெரிக்க காலநிலை முன்னறிவிப்பு மையம் தெரிவித்துள்ளது. (ம)

## கொலை செய்த...

கைது செய்து செல்லப்பட்ட இருவருக்கும் வன்னியில் காணப்பட்டிருந்த விடுதலை புலிகளது நீதிமன்றம், ஒருவருக்கு மரண தண்டனையும் மற்றைய நபருக்கு ஆயுள் தண்டனையும் விதித்திருந்தது.

இந்நிலையில் யுத்தமானது நிறைவடைந்த போது விடுதலைப் புலிகளது சிறைச்சாலையில் இருந்து ஆயுள் தண்டனை கைதியான குறித்த நபர் தப்பித்து வந்துள்ளார். எனினும் மரண தண்டனை விதிக்கப்பட்ட நபருக்கு அத் தண்டனை நிறைவேற்றப்பட்டதா? அவர் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பது இதுவரை தெரியவில்லை.

இவ்வாறான நிலையில் தப்பியோடி வந்த குறித்த நபரை கைது செய்த பொலிஸார் அவரை முதலாவது எதிரியாகவும் மற்றைய நபரை இரண்டாவது எதிரியாகவும் பெயர் குறிப்பிட்டு இரண்டாம் எதிரி இல்லாத கொலை வழக்கானது யாழ்.மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ் வழக்கினை அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் நெறிப்படுத்தியிருந்தார்.

இவ் வழக்கினை விசாரணை செய்த நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்கியிருந்தது. அதாவது விடுதலைப் புலிகள் மரண தண்டனை விதித்த கைதி தற்போது உயிருடன் இல்லை என்பது நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் எண்பிக்கப்படவில்லை என்பதால் அவர் உயிருடன் இருந்தால் உடனடியாக கைது செய்யுமாறு பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. மேலும் குறித்த கொலை சம்பவமானது திடீரென ஏற்பட்ட சண்டையின் போது ஏற்பட்டுள்ளது என வழக்குத் தொடுநர் தரப்பு சாட்சியங்களால் நிரூபிக்கப்பட்டுள்ளமையினால் குறித்த கொலையானது கொலைக் குற்றச்சாட்டில் இருந்து கைமோசக கொலை குற்றச்சாட்டாக மாற்றப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்ட மன்றில் முன்னிலையாகாத குறித்த நபருக்கு ஏழாண்டு கடூழிய சிறைத் தண்டனையும் 5ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும் கட்டத்தவறின் ஒரு மாத கடூழிய சிறைத் தண்டனையும் விதித்தும் மன்றில் முன்னிலையாகிய முதலாம் எதிரிக்கு அவர் விடுதலைப் புலிகளது சிறையில் மூன்றாண்டுகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையால் அதனை கருத்தில் கொண்டு அந்நபருக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கடூழிய சிறைத் தண்டனையும் விதித்து யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார். (ம-4)

## காணாமல் போன...

மனைவியிடம் தெரிவித்து சென்றுள்ளார்.

கோண்டாவில் பழனியாண்டவர் கோவில பகுதியில் உள்ள தனது தாயார் வீட்டுக்கு சென்று விட்டு வேலைக்கு செல்வதாக கூறி சென்றுள்ளார். அப்போது அந்த வழியில் உள்ள கிணறு ஒன்றில் தவறுதலாக விழுந்துள்ளார்.

வீட்டுக்கு திரும்பி வரவில்லை என மனைவி தாய்வீடு, மற்றும் அலுவலகத்தில் விசாரித்துள்ளார் அவர் எங்கும் வரவில்லை என தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு மாடு மேய்ப்பதற்கு சென்ற ஒருவர் கிணற்றில் இருந்து துர்நாற்றம் வீசுவதை அறிந்து எட்டி பார்த்த போது அங்கு சடலம் ஒன்று காணப்பட்டுள்ளது.

பொலிஸாரூடாக சடலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட போது, மனைவியார் நேற்று சடலத்தை அடையாளம் காட்டியிருந்தார். மரண விசாரணையை யாழ்.போனா வைத்தியசாலை மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ம-9)

## வட மாகாண கல்வி...

கொள்ள முடியாதென முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அண்மையில் வவுனியா இரட்டைப் பெரிய குளம் பகுதியில் பாடசாலை நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த வடமாகாண கல்வியமைச்சர் சர்வேஸ்வரன், தேசியக் கொடியை ஏற்றுவதை தவிர்த்துக் கொண்டார்.

கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பிலும் இந்த விவகாரம் குறித்து கருத்து வெளியிடப்பட்டது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் அமைச்சர் பீரிஸ், இலங்கையை ஆட்சிசெய்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் தத்தமது ஆட்சிக்காலத்தில் அந்த அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்திய போதிலும் இன்று அவ்வாறு செயற்படுவதில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

தேசியக் கொடியை மாற்றியமைக்க வேண்டுமென்றால் பொதுமக்கள் கருத்துக் கணிப்பு நடத்தப்பட வேண்டும். மாறாக, அதனை மூன்றிலிரண்டு பெரும்பான்மையை கொண்டோ அல்லது சபையில் தலைவர்களின் எண்ணிக்கையை மாற்றியமைத்தோ மாற்றிவிட இயலாது. இதனை செய்யும்வரை தற்போது பயன்படுத்தப்படும் தேசியக் கொடிக்கு மதிப்பளிக்க வேண்டும்.

இப்படிப்பட்ட சம்பவம் வேறு நாட்டில் இடம்பெற்றிருந்தால் இந்நேரம் வடமாகாண கல்வியமைச்சர் பதவியிலிருந்து ஜனாதிபதியினால் தூக்கப்பட்டிருப்பார். ஜனாதிபதிக்கு முழு அதிகாரம் இருக்கிறது. வடமாகாண ஆளுநருக்கு உத்தரவு ஒன்றை விடுப்பதற்கு ஜனாதிபதிக்கு பலம் இருக்கிறது.

இதற்கு முன்னிருந்த நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிகள் தங்களது அதிகாரங்களைப் பாவித்த போதிலும் தற்போது அது பயன்படுத்தப்படுவதில்லை. தேசியக் கொடியை பாதுகாக்கின்ற முக்கிய பொறுப்பு ஜனாதிபதிக்கே உரித்தான போதிலும் அது செய்யப்படுகிறதா? மத்திய வங்கி மோசடி விவகாரம் மற்றும் தேசியக் கொடி விவகாரம் குறித்து ஜனாதிபதி ஏன் மௌனம் காண்பிக்கின்றார் என தெரிவித்தார். (ம)

### வவுனியா அரச பேருந்தில்

## கேரள கஞ்சா கடத்தல் பொலிஸாரால் முறியடிப்பு



(மல்லாவி)

வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட வவுனியா நகரப் பகுதியில் உள்ள அரச பேருந்து நிலையத்தில் வைத்து யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்புக்கு பேருந்து மூலமாக கடத்திச் செல்லப்பட்ட 4 கிலோவும் 25 கிராமும் நிறையுடைய கேரளக் கஞ்சா பொதிகளுடன் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஏ.மகிந்த வில்வ ஆராச்சி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை மாலை 5. 30 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து வவுனியா நகரப் பகுதியில் உள்ள அரச பேருந்து நிலையத்தில் தொடர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் நேற்று வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த, பேருந்தினை வவுனியா அரச பேருந்து நிலையத்தில் தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது, மட்டக்களப்புக்கு கடத்திச் செல்லப்பட்ட 4 கிலோவும், 25 கிராமும் நிறையுடைய கேரளக் கஞ்சாவுடன் மட்டக்களப்பு மாவட்டத்தினை சேர்ந்த 29 வயதுடைய இளைஞர் ஒரு வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலைய தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-15)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org



021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (1456)



க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான

இறுதிக் கருத்தரங்கு

தரம் – 11 O/L - 2017

இடம்:

Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை - யாழ்)

காலம் : 25, 26.11.2017 சனி, ஞாயிறு

| விஞ்ஞானம் | கணிதம் | வரலாறு | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|---|---|
| பிரபல ஆசிரியர் A.சியாமளரூபன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) | பிரபல ஆசிரியர் K.உமாகரன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) | பிரபல ஆசிரியர் R.S.சந்திரன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) | பிரபல ஆசிரியர் க.மு.நித்தி (யா/ புனித பத்திரிசியார் கல்லூரி) | பிரபல ஆசிரியர் துசீபன் (யா/ வயாவிளான் மத்திய கல்லூரி) |
| 25.11.2017 காலை 8.30-11.30 | 26.11.2017 மாலை 2.30-6.00 | 26.11.2017 காலை 8.30-12.00 | 25.11.2017 மாலை 2.30-6.00 | 25.11.2017 மாலை 12.00-2.00 |

- முற்றிலும் எதிர்பார்க்கப்படும் வினாத்தாள்கள் (விடைகளுடன்) வழங்கப்படும்.
- முழுப்பாட அலகுகளும் மீட்கப்படும்.
- மொத்தக் கட்டணம் - 400/=
- தனிப்பாட அனுமதி உண்டு (100/= ஒரு பாடம்)

(C-442)


குறிப்பு: வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்

முற்பதிவுகளை இன்றிலிருந்து மேற்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு: 077 017 5346



PC Network Engineering




Duration : 2 Months

Next Batch : 25-11-2017

Free CCTV Installation Training

(C-476)

iCS EDUCATION *77,மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள்கோவில் அருகாமையில்) 021-7306000, 076-7013060



விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-404)

UK-550/=Kg மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில் DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை


## மாவீரர்களுக்கு...

அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ளபேரவை செயலக கட்டடத்தில் நடைபெற்றது:

இந்த அமர்வில் பல விடயங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு தேநீர் இடைவேளையின் பின்னர் அமர்வு நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது.

இதன்போது உறுப்பினர் ஆனோல்ட் தற்போது மாவீரர் வாரம் என்பதால் அடுத்த அமர்வு எதிர்வரும் 5 ஆம் திகதி என்பதனாலும், இன்றைய அமர்வில் எமது மாவீரர்களுக்கு இரண்டு நிமிட அஞ்சலி செய்வதற்கு அனுமதி வழங்குமாறு அவைத்தலைவரை கோரினார்.

எனினும்தற்போது தேவை யில்லை என மறுப்பு தெரிவித்த அவைத்தலைவர் உடனடியாக அவையைநிறைவுக்கு கொண்டுவந்தார்.

இதற்கு சபையில் இருந்த உறுப்பினர்கள் அனைவரும் மௌனமாக இருந்து வேடிக்கை பார்த்தனர்.

23☛


K.M.M.திருமணசேவை

(யாழ்ப்பாணம், சுவிஸ்)

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும். அத்துடன் ஜனன ஜாதகம், குறிப்பு, பலன்கள், கணணி மூலம் கணித்துத் தரப்படும்.

T.P : 021 223 2222 (Jaffna)

076 8351932 (Viber)

0041768185443 (Switz)

அலுவலக நேரம் : திங்கள் - வெள்ளி 8.00am - 4.30 pm

சனி - 9.00am - 1.00 pm

முகவரி - ஞான வைரவர் கோவிலடி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

(1449)


## ஆவா குழு...

என்ற இந்த இளைஞன், நேற்று வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரை பொலிஸார் தேடி வந்த நிலையில், சுதுமலை அம்மன் கோயிலுக்கு அருகில் நிற்பதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து அவரை கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரித்து வருவதாக குறிப்பிடும் மானிப்பாய் பொலிஸார், விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைபடுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (ம)

## சிறுமி துஷ்...

மன்றம் தீர்ப்பளித்துள்ளது. கடந்த 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த சிறுமியை 65 வயதான வயோதிபர் ஒருவர் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு தொடர்பான விசாரணைகளில தாம் குறித்த துஷ்பிரயோக குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வதாக வயோதிபர் ஏற்றுக் கொண்டதிற்கு இணங்க அவ் வயோதிபருக்கு ஓராண்டு கடூழிய சிறைத் தண்டனையும் 10ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் கட்டத் தவறின் 1 மாத கால கடூழிய சிறையும், 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடும் கட்டத்தவறின் ஆறு மாத கால கடூழிய சிறைத் தண்டனையும விதித்து யாழ்.மேல நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார். (ம-4)

# கண்ணீர் அஞ்சலி

## வைத்திய கலாநிதி வேதநாயகம் விக்கினராஜா (விக்கி) (GOVOOR)



கொக்குவில் மேற்கு கேணியடியை பிறப்பிடமாகவும், வளர்ந்த இடமாகவும் கொண்டவரும் திருகோணமலை தம்பலகாமத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட மக்கள் சமூகசேவையாளன் வைத்திய கலாநிதி

**வேதநாயகம் விக்கினராஜா (விக்கி)**

அவர்கள் 22.11.2017 மறைவுச்செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம்.

அன்னார் கொக்குவில் மேற்கு சன சமூக நிலையம், கிராம முன்னேற்றச்சங்க மற்றும் பல பொது அமைப்புக்களிலும் உறுப்பினராகவிருந்து மக்கள் நலனுக்காக மகத்தான சேவைகள் வழங்கியிருந்தார். அத்துடன் ஆன்மீகத்துறையிலும் தனது நற்பணியை ஆற்றியுள்ளார். அன்னாரின் மறைவு எமது சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாத பெருமிழப்பாக உள்ளது.

எனவே அன்னாரை பிரிந்து துயருற்றிருக்கும் தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரிகள், உறவினர்கள் எல்லோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவர்களது துயரிலும் பங்கு கொள்கிறோம்.

ஸ்ரீபாலன் குடும்பம் (விதானையார்)
ரங்கன் குடும்பம்
உமாகரன் குடும்பம்,
சிவா குடும்பம்
மகேந்திரன் குடும்பம் (ராஜா மகேந்திரன்)
இராசலிங்கம் குடும்பம்
செல்வன், ராசன், இந்து குடும்பம்
— கனடா

நகுலன் குடும்பம் கொக்குவில்.
இந்திரலிங்கம் குடும்பம்
கொக்குவில்.

(C-481)

# வருடாந்த பொதுக்கூட்டம்

## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம், தொண்டைமானாறு

FWC

மேற்படி நிலையத்தினரது வருடாந்தப் பொதுக் கூட்டம் இவ்வருட டிசெம்பர் மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

அங்கத்தவர்கள் பிரேரணைகளை 15.12.2017 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.


- செயலாளர்

தபால் முகவரி : செயலாளர், தொண்டைமானாறு வெளிக்கள நிலையம், 133, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (1462)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சேதுராசா நேசரத்தினம்

தோற்றம் : 04.05.1931 இறைவனடி : 23.11.2017



எமது கல்லூரி ஆசிரியர் திரு.நே.சிவநேசன் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் சேதுராசா நேசரத்தினம்**

அவர்கள் காலமானதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி !!! (1461)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ஏழாலை மகா வித்தியாலயம், ஏழாலை.


ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும் பயணிகளுக்கு

விமானப் பற்றுச்சீட்டு ஒன்றுக்கு 8000/=

இரண்டுக்கு 20000/=

மூன்றுக்கு 32000/=

விசேட கழிவு

0715365365.

0214920920

Nation popular travels & tours

VISA MasterCard DISCOVER AMERICAN EXPRESS

(C-480)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.